KALKI
18.3.2007 ரூ.8.00
80 பக்கங்கள்

# கல்கி


குடும்பத்துடன் படிக்க...



இனி எல்லாம் சுகமே!

+32 இணைப்பைக் கேட்டு வாங்குங்கள்

## தரணி ஆளும் ஜனனி!



# Team Health Shoppe
**For Wellness**

# இயற்கையே மருந்தாக ஆரோக்கியமே விருந்தாக

## டீம் தேங்காய் எண்ணெய்

....மற்றதைக் காட்டிலும் வித்தியாசமானது

குளிர்முறை தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட
டீம் தேங்காய் எண்ணெய்
ஆரோக்கியத்திற்கும், சமையலுக்கும் உகந்தது.

Source : extract of souvenir released at National Seminar on Augmentation of Coconut Products by Coconut development board (Ministry of Agriculture) Cochin on 12th Oct, 2003 at Hyderabad




தேங்காயிலிருந்து இயற்கையான முறையில் (hydrogenation heating மூலம் இல்லாமல்) சுகாதாரமாக எடுக்கப்படுகிறது. டீம் தேங்காய் எண்ணெய். இதனால் இயற்கையான மணமும், குணநலன்களும் சிறிதும் குறைவதில்லை.

● சத்துக்கான ஆதாரம் எளிய முறையில் ஜீரணிக்க உதவுகிறது. ● கொழுப்பு சேர்வதை தடுக்க உதவுகிறது. ● சுறுசுறுப்புடனும் புத்துணர்வுடனும் வைக்க உதவுகிறது. ● நச்சுப் பொருட்கள் உள்ளே வருவதை தடுக்க உதவுகிறது. ● ஆன்ட்டி பாக்டீரியல், ஆன்ட்டி வைரல் & ஆன்ட்டி பங்கல். ● இதயத்துக்கு வலிமை சேர்க்க உதவுகிறது. ● அழகு சாதனப் பொருட்களில் உபயோகப்படுத்தப்படுகிறது ● வெப்பத்தை தாங்ககூடிய சக்தியை தருகிறது. ● சமையலுக்கு மிக உகந்தது.

### டீம் ஹெல்த் ஷாப்பின் இதர பொருட்கள்



- டீம் சோடியம் அல்லாத உப்பு ● டீம் அரை உப்பு
- டீம் நல்லெண்ணெய் ● டீம் தேங்காய் எண்ணெய்
- கற்றாழை - சருமம் மற்றும் மேனிப் பராமரிப்பு பொருட்கள்
- தேன் பொருட்கள் ● டீம் எனர்ஜி வாட்டர்
- மரபு முறை, கைகுத்தல் உணவுப் பொருட்கள்
- கொடைக்கானல் மலை தைலம் ● பனைப்பொருட்கள்

**TEAM EUBIO CARE**
(DIVISION OF CHEMFAB ALKALIS LIMITED)

www.teamhealthshoppe.com • teamhealthshoppe@drraoholdings.com

வண்டலூர் : டீம் ஹவுஸ், சென்னை-48. 2275 0502

அண்ணாநகர் : பிளாட் 1200, சென்னை-40. 4269 3332

அடையார் : எண்.26, தரைதளம், இந்திரா நகர் சென்னை-20. 4269 5115

ரூ.500க்கு மேல் வாங்குபவர்களுக்கு இலவச டோர் டெலிவரி (சென்னையில்)


அடுத்த இலவச இணைப்பு...
கல்கி
கல்கி
குடும்பத்துடன் படிக்க...
+32
சதம் காணும்
செல்வக் களஞ்சியம்
- இந்தியன் வங்கி நூற்றாண்டு
100th
YEAR
CHARTING THE FUTURE
इंडियन बैंक
Indian Bank
Since August 15,1907

**சந்திப்பு**

**வெற்றிக் களிப்பில் வீரநடை போட்டுக் கொண்டிருக்கிறது பருத்தி வீரன் டீம். ஆனால், படத்தின் நிஜ ஹீரோவான டைரக்டர் அமீர் மட்டும் கொந்தளிப்பில் இருக்கிறார். அப்படி என்ன பிரச்னை? அவரைச் சந்தித்தோம்...**



படம்: பொன்னாச்சி சுந்தரம்

"தமிழகம் முழுக்கவே படத்துக்கு நல்ல ரிசல்ட். ஆனாலும் என் நெஞ்சுக் குள்ள சில விஷயங்கள் நெருடிக்கிட்டே தான் இருக்கு" என்று பீடிகையோடு ஆரம்பித்தார் அமீர்...

"பருத்திவீரன் க்ளைமாக்ஸ் பலரை பலவிதத்துல பாதிச்சிருக்கு. சிலருக்கு அது கங்கையில பிணமாத் தெரியுது... பலருக்கு அது வன்முறையோட உச்சமாப் புரியுது. ஆனா, உண்மையாப் பார்த்தா இதைவிட சிறப்பான ஒரு க்ளைமாக்ஸ் இருக்கவே முடியாது. உயிரைக் கொடுத்து படம் பண்ணியிருக்கோம். உட்கார்ந்துக்கிட்டு ஏனோதானோன்னு விமர்சனம் பண்றதை நினைச்சா வேதனையா இருக்கு. உலகத் தரமான படம்னு பலதை பல நேரத்துல நாம சொல்லிக்கிட்டிருக்கோம். ஆனா உண்மையான உலகத்தரம் என்னன்னு தெரியுமா? சீன மொழிப் படம்னா சீனா முழுவதுக்குமான ஒரே படம்; ரஷ்ய மொழிப் படம்னா ரஷ்யா முழுவதுக்கு மான ஒரே படம். ஆனா தமிழ்ல அப்படியா? தஞ்சாவூர், மதுரை, சென்னைன்னு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு மொழி வழக்கு. அத்தனை மாவட்ட ரசிகர்களையும் ஒட்டுமொத்தமா ஒரே நேரத்துல, ஒரே படத்துல திருப்திப்படுத்த வேண்டியிருக்கு. இது ரொம்பச் சிரம மான காரியம். இத்தனை பிரச்னைகளுக்கு மத்தியிலும் நல்ல படம் கொடுக்கணும்னு பாடுபடறதை நாங்க நிறுத்தறதில்லை.

என்னோட 'ராம்' படத்தை சைப்ரஸ் நாட்டு விழாவுல திரையிடப் போனப்போ, 'இந்தியப் படமா? இந்தி மொழிதானே...'ன்னு கேட்டாங்க. 'இல்லைய்யா... இது தமிழ். ரீஜினல் லாங்குவேஜ்'னு புரிய வச்சப்போ, அவங்களுக்கு பயங்கர ஆச்சர்யம்... இந்தளவுக்கு ஒரு ரீஜினல் லாங்குவேஜ் படம் ரீச்சாகுமான்னு. ஆனா சோகம் என்ன தெரியுமா? அந்தப் படத்தைத் திரையிட நான் சைப்ரஸ் போனப்ப என்கூட யாருமே வரல. அந்தப் படம் சம்பந்தப்பட்ட எல்லாரும் கழண்டுக்கிட்டாங்க. இப்போ பருத்தி வீரனுக்கும் இதே நிலைமைதான்; இவனும் படுத்தறான்தான். ஆனா அதைப் பத்தி என்னால வெளிப்படையா எதுவும் பேச முடியல. சூழ்நிலைக் கைதியா



# பருத்தி வீரன் படுத்திய கதை!

சிக்கிக்கிட்டுத் தவிக்கிறேன்.

தமிழ் சினிமாவ உலகத் தரத்துக்குக் கொண்டு போற எண்ணம் இங்க யாருகிட்டயுமே இல்ல. 'ராம்' படத்தைத் தனியாளா நான் மட்டும்தான் சைப்ரஸ் வரைக்கும் கொண்டுட்டு போனேன். போறதுக்குள்ள என் தாவு தீர்ந்து போச்சு. இருந்தாலும் என் தேடல், தாகம், எல்லாம் என்னைக்கும் தீராது. பருத்தி வீரனையும் எப்பாடுபட்டாவது உலகத்தின் பார்வைக்குக் கொண்டு செல்வேன். என்னோட முயற்சிகளுக்கு ஆதரவா இல்லாட்டியும் பரவால்ல... தடை போடாதீங்கன்னுதான் கேட்கறேன்."

**- மனோ விக்டர்**




# கல்கி

**பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்**
அச்சிட்டு வெளியிடுபவர் :
**லக்ஷ்மி நடராஜன்**

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
**சீதா ரவி**

தலைமை உதவி ஆசிரியர் :
**மு.மாறன்**

வடிவமைப்பு :
**எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்**
**எம். மோகன், ச. கார்த்திகேயன்**

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இண்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
**ஒரு வருடம் : ரூ.440/-**
**ஆறு மாதம் : ரூ.220/-**
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.



**இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.**



# “தி.மு.க.வின்

**''தனது வெளிப்படையான கருத்துக்களால் டாக்டர் ராமதாஸ் தி.மு.க.வை ரொம்பவே சங்கடப்படுத்தி வருகிறார்'' என்பதுதான் இன்றைய அரசியலில் பரபரப்பான பேச்சு. டாக்டரின் நோக்கம் என்ன? எதற்காக இப்படி அதிரடியாகப் பேசுகிறார்? என்று நாடி பிடித்துப் பார்க்க தைலாபுரம் தோட்டத்துக்குப் போனோம். பேட்டியின் துவக்கத்திலேயே நெருப்பு பற்றிக் கொண்டுவிட்டது.**

“வீட்டை விட்டு வெளியே வந்தால் கண்ணில் தென்படுபவை பிறந்தநாள் டிஜிட்டல் பேனர்கள்தான். ஒருவருடைய பிறந்தநாள் என்பது தனிப்பட்ட நிகழ்வு. அதை வீட்டாருடன், நண்பர்களுடன் கொண்டாடலாம். ஆனால், இப்படிச் சந்துக்கு சந்து பேனர் வைத்துக் கொண்டாடும் மோசமான கலாசாரம் தமிழகத்தில் உருவாகி வருகிறது. தமிழர்கள், ஏற்கெனவே பலவிதங்களில் சீரழிக்கப்படுகிறார்கள். இப்போது பிறந்தநாள் கொண்டாட்டச் சீரழிவு...''

**ஐந்தாவது ஆண்டாக வரைவு நிதிநிலை அறிக்கை வெளியிட்டிருக்கிறது பா.ம.க. அதில் 'உற்பத்திக்கு உதவாத, திட்டமிடப்படாத செலவுகள் காரணமாக கடன் சுமை அதிகரிக்கும் திட்டச் செலவுகள் குறையும்' என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த அடிப்படையில் இலவச திட்டங்களைப் பற்றிய உங்கள் கருத்து?**

எல்லோருக்கும் இலவசங்களை அள்ளிவிடத் தேவையில்லை. யாருக்குத் தேவையோ அவர்களுக்குக் கொடுக்கலாம். தொலைக்காட்சி கொடுக்கிறீர்கள். அது மூன்றாவது நாள் கெட்டுப் போய் விட்டால், பழுது பார்க்க ஒருவனிடம் கூட பணம் இருக்காது. ஒருவன் தானே சுயமாகச் சம்பாதித்து தொலைக்காட்சி பெட்டி வாங்கினால், அதைப் பாதுகாப்பதற்கும், பழுது பார்ப்பதற்கும் அவருக்கு ஆர்வம் இருக்கும். எனவே ஒருவனுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுங்கள். இலவச திட்டங்கள் வளர்ச்சிக்குத் தடை போட்டு பொருளாதாரத்தை முடக்குவதாகவே இருக்கும்.''

**உங்கள் வரைவு நிதி நிலையில் சொல்லியிருப்பவற்றை தமிழக அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா? இது தொடர்பாக**

**முதல்வரைச் சந்தித்து விவாதிப்பீர்களா?**

"பல நாடுகளில் பட்ஜெட் வரைவுக்கு முன்பு எதிர்கட்சிகள், பத்திரிகையாளர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பொருளாதார நிபுணர்கள் ஆகியோரைக் கலந்தாலோசிக்கும் பழக்கம் இருக்கிறது. ஆனால் இங்கே தொழிலதிபர்களை மட்டும் யோசனை கேட்கிறார்கள். நாங்கள் தயாரித்த வரைவு நிதிநிலை அறிக்கை எல்லோருக்குமே அனுப்பப் பட்டிருக்கிறது. அதில் சொல்லியிருக்கும் யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால் சந்தோஷமே!"

**உலக மகளிர் தினம் கொண்டாடப் படுகிறது. இந்த நிலையில் நாட்டிலேயே தமிழகத்தில்தான் குடும்ப வன்முறை அதிகமாக இருக்கிறது என்று கருத்துச் சொல்லியிருக்கிறீர்களே!**

"உண்மைதான். புள்ளிவிவர ஆதாரத் தினசரி பத்திரிகைகள் வருகின்றன. இதிலிருந்து என்ன தெரிகிறது? இவையெல்லாம் காவல் துறைக்கு தெரிந்துதான் நடக்கின்றன. மூன்று மாத காலமாக இதைச் சொல்லி வருகிறேன். இப்போது தான் 556 வழக்குகள் பதிவு செய்துள்ளதாக முதல்வர் அறிக்கை விட்டிருக்கிறார். தமிழகத்தில் பள்ளிகளுக்குப் பக்கத்திலேயே கஞ்சா விற்பனையும் நடக்கிறது.

**ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் தொட்டில் குழந்தை திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது சரியாகச் செயல்படவில்லை. இப்போது மத்திய அரசு மீண்டும் அந்த திட்டத்தைக் கொண்டு வரப் போவதாகச் சொல்லியிருக்கிறதே?**

"தொட்டில் குழந்தைகளே உருவாகாத வகையில் அரசு செயல்பட வேண்டும். அதற்கு ஏற்ப, வேலை வாய்ப்பை உரு

# கிளைக் கழகமாக இயங்க முடியாது!"

தோடுதான் சொன்னேன். இதற்குக் காரணம் ஆண்கள். குடித்துவிட்டு பெண்கள் மீது வன்முறையைக் கையாள்கிறார்கள். முதலில் 'பார்'களை மூட வேண்டும். இதற்கான போராட்டங்களை பா.ம.க மகளிர் அணி ஏற்கெனவே நடத்தியிருக்கிறது. இனியும் நடத்துவோம். எங்காவது கள்ளச் சாராயம் காய்ச்சப் பட்டால், லோக்கல் சப்-இன்ஸ்பெக்டர், கிராம அதிகாரி மற்றும் கிராமத் தலைவர் ஆகியோரை பதவி நீக்கம் செய்ய வேண்டும். இதுபோல் ஒழித்துக் கட்ட வேண்டிய இன்னொரு சமூகச் சீரழிவு லாட்டரி. தமிழ்நாடு அரசு பரிசுசீட்டு நடத்துவதில்லை. வெளி மாநில சீட்டுகளையும் இங்கு விற்கக் கூடாது. ஆனால் வினோதமாகப் பரிசுசீட்டு முடிவுகளை தாங்கி இங்கே மூன்று

## எல்லோருக்கும் இலவசங்களை அள்ளிவிடத் தேவையில்லை

வாக்க வேண்டும். தனிமனித ஒழுக்க நிலை உயர வேண்டும். தனக்குள்ள சமூகப் பொறுப்புகளை ஒவ்வொருவரும் உணர வேண்டும்."

**அதிரடியாகக் கருத்துக்களைப் பேசி வரும் நீங்கள் விரைவில் ஜெயலலிதா பக்கம் போய் விடுவீர்கள் என்ற எதிர்பார்ப்பு உருவாகியிருக்கிறதே...?**

வரும் பாராளுமன்றம் மற்றும் அடுத்த சட்டமன்றத் தேர்தலிலும் நாங்கள் தி.மு.க. அணியில்தான் இருப்போம். அதற்காக தி.மு.க.வின் கிளைக் கழகமாக இயங்க முடியாது. விமர்சனக் குரல் எழுப்பத்தான் செய்வோம்.

**- ப்ரியன்**

**படம் : ஸ்ரீஹரி**


சேனல்

# ஒரு நிமிஷம்... ஆயிரம் வார்த்தைகள்!

"அம்மா நீ எனக்காக என்ன சமைச்சு வச்சிருக்கே?
A. ஆப்பம் B. பூரி
C. சப்பாத்தி

– சமீபமா வழக்கமான வசனத்தைக் கூட இப்படி சாய்ஸ் கொடுத்துத்தாங்க பேசறேன். எல்லாம் குரோர்பதி நிகழ்ச்சியில ஷாருக்கானுக்குக் குரல் கொடுக்குற பாதிப்புதான். சேகர்ங்கிற என் பெயரை 'ஷாருக் சேகர்'னு மாற்றுகிற அளவுக்கு கே.பி.சி. நிகழ்ச்சி என் மேல வெளிச்சத்தைத் திருப்பியிருக்கு.






இரண்டாயிரம் மேடை நாடகங்கள் பண்ணின அனுபவம் இருக்கு. அரங்கத்தோட கடைசி இருக்கையில இருக்கிற வருக்கும் குரல் கேட்கணும்ங்கறதுக்காக சத்தமா பேசிப் பழகியதன் பலன், என் குரலே என் நிரந்தர முகவரியாயிடுச்சு.

என் குரல் ஷாருக்கானுக்கு மட்டும் தான் புதுசு. அஜீத் (பவித்ரா), வினீத் (காதல் தேசம்), தருண் (எ20உ18), ஷாம் (உள்ளம் கேட்குமே)னு பல ஹீரோக்களுக்கு டப்பிங் பேசியிருக்கேன். இயக்குநர் ஏ.பி.நாகராஜனோட சொந்தம்ங்கிறதால சினிமா என் ஒவ்வொரு அணுவுலயும் இருக்கு.

'ஸ்வதேஷ்'ங்கிற படம் தமிழ்ல டப் ஆகும்போது ஷாருக்கானுக்கு முதன் முறையா குரல் கொடுத்தேன். லகான் இயக்கியவர்தான் இந்தப் படத்துக்கும் இயக்குநர். அவர் என் குரலைக் கேட்டு ஓ.கே. பண்ணினார். இதன் தொடர்ச்சியாத்தான் கே.பி.சி. வாய்ப்பு வந்தது.

'ஆயிரம் முகபாவங்கள் கொண்டவர்கள் பெண்கள்'னு சொல்ற மாதிரி, ஒரு நிமிஷத்துல ஆயிரம் வார்த்தைகள் பேசிடுவார் ஷாருக்கான். ஆரம்பத்துல அவர் வேகத்துக்கு ஈடுகொடுக்க ரொம்பக் கஷ்டப்பட்டேன்.

இப்போ 'கொடைக்கானல்'ங்கிற படத்துக்கு நான்தான் ஹீரோ. நாளைக்கு டைரக்டர் ஆகறதும் என் கனவு. சினிமாவுல இருந்தாலும் டீ.வி.யை விடறதில்லை. கே.பி.சி. ஸ்கிரிப்ட் நான்தான் பண்றேன். விஜய் டீ.வி.யில் நீங்க பார்க்கிற வெளிநாட்டுப் படங்களுக்கும் வசனம் நம்ம கைவண்ணம் தான்."

எனக்குத் தமிழ் மேல மிகுந்த ஈடுபாடு. என் எல்லா வேலைகளும் தமிழோடு சம்பந்தம் இருக்கறா மாதிரி பார்த்துக்கறேன். தமிழுக்காகக் குரல் கொடுக்க எப்பவும் தயங்க மாட்டேன்."

- சநகன்

மாடலிங்

# தரணி ஆளும் ஜனனி!

**ஜனனி என்றால் தமிழ் தரணிக்கு நன்றாகவே தெரியும். காரணம், சினிமாவோ டி.வி.யோ அல்ல... விளம்பரங்கள். மாடலாக இருந்தே பேரும் புகழும் சம்பாதித்தவர் ஜனனி. அந்த உலகத்தின் கதவுகளையும் ஜன்னல்களையும் லேசாகத் திறந்து காண்பிக்கிறார். சில்லென்று இருக்கிறது... கொஞ்சம் சூடாகவும்.**

"சினிமா என்றால் முகம் சுழிக்கும் பெண்கள், மாடலிங் என்றால் 'ஓ அப்படின்னா வரேன்' என்று தயாராகிவிடுகிறார்கள். மாடலிங் உலகம் முழுக்கப் பெண்கள் பெண்கள்தான். அரவிந்த்சாமி கணக்காக அழகாக இருந்தால் மட்டுமே ஆண்களால் இத்துறைக்குள் நுழைய முடியும். சினிமா என்றால் நான் பிடிக்கும். விளம்பரங்களை ஒரே நாளில், அதுவும் உள்ளூரிலேயே எடுத்துவிடுவார்கள். அம்மாவைக் கூட்டிக்கொண்டு படப்பிடிப்புக்குச் செல்லலாம். பாதுகாப்பு உணர்வோடு இருக்கலாம். சினிமா நடிகை என்றால், வருடத்துக்கு ஆறு படங்களுக்கு மேல் பண்ண முடியாது. ஆனால், மாடல் வருடத்துக்கு ஐம்பது விளம் பரங்கள் செய்யலாம்.

விளம்பரம் ஒரு மாய உலகம். மாயக் கண்ணாடியில் பார்த்துத்தான் நம் அழகை நிர்ணயிப்பார்கள். இயல்பு, யதார்த்தம் எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடும். வெள்ளை வெளேர் என்று இருக்கும் பெண்களுக்குக்கூட மேக்கப் போட்டு இருக்கும் அழகையும் கெடுத்துவிடுவார்கள். நாம்தான் உஷாராக இருக்க வேண்டும்.

இன்றைக்கு நிறைய நடிகைகள் மாடலிங் செய்யக் கிளம்பிவிட்டார்கள். இதனால் மாடல்கள் இரண்டாம் பட்சம் ஆகிவிடுகிறார்கள். எங்களுக்கு வரவேண்டிய சில வாய்ப்புகளும் அவர்களுக்குப் போய்விடுகிறது.

எங்களுக்கு ஒரு நாளைக்குப் பத்தாயிரம் தருகிறார்கள் என்றால், மும்பை மாடல்களுக்கு இருபதாயிரம். இது தவறு கிடையாது. சென்னை மாடல்களுக்கு கேரளாவில் மவுசு அதிகம். இங்கு தருவதைவிட அங்கே அதிகமாகத்தான் தருகிறார்கள். வித்யா பாலன், மீரா வாசுதேவன் போன்ற சென்னைப் பெண்கள் மும்பையில் நன்றாகக் கவனிக்கப்பட்டார்கள்.


இது பணக்காரர்கள் புழங்கும் உலகம் அல்ல. எல்லா அழகிய தமிழ் மகள்களும் இங்கே வரவேற்கப்படுகிறார்கள். மாடலிங் உலகம் சினிமாவில் நுழைய அழகான ஒரு விசிட்டிங் கார்டை அடித்துத் தரும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை."

**- ச.ந.கண்ணன்**

**அட்டைப் படம்: சந்தோஷ் ராஜ்**



# டூர் இனிய




• முக்திநாத்தில்...

"டூர் போய் வந்த அயர்ச்சியே தெரியவில்லை. நல்ல பிளானிங். அருமையான சாப்பாடு, தங்கின இடம் என எல்லாமே அருமை. ஸ்ரீ டிராவல்ஸ்ல சொன்ன ஒரு விஷயம்கூட மிஸ் ஆகல. தேங்க்யூ ஸ்ரீ டிராவல்ஸ்" என்று பாராட்டுப் பத்திரம் வாசிக்கிறார் அண்மையில் ஸ்ரீ டிராவல்ஸ் மூலம் டூர் போய்வந்த சென்னைவாசி சௌம்யா.

சென்னை ஆயிரம்விளக்கில் கடந்த இருபது வருடங்களாய் இயங்கி வருகிறது ஸ்ரீ டிராவல்ஸ் நிறுவனம். பிரசித்தி பெற்ற அனைத்து இடங்களுக்கும் வருடம் முழுவதும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பிரியர்களை அழைத்துச் செல்கிறார்கள்.

கல்வி, ஆன்மிகம், தேனிலவு என்று அவரவர் தேவைக்கேற்ப டூர்களை ஏற்பாடு செய்யும் இந்நிறுவனத்தின் உரிமையாளர் திரு.கே.இளந்திரையன்.




• பஃபே உணவு...

"நாங்கள் மௌண்ட் கைலாஷ், ஹிமாச்சல், காஷ்மீர், காசி, கயா, புட்டபர்த்தி, மந்த்ராலயம், ஷீரடி, அமர்நாத் உள்ளிட்ட இடங்களுக்குச் சுற்றுலா ஏற்பாடுகள் செய்து தருகிறோம். அந்தமான் செல்ல விரும்புவோரையும் மே மாதத்திலிருந்து செப்டம்பருக்குள் அவரவர் விரும்பும் தேதிகளில் அழைத்துச் செல்கிறோம்.

நல்ல உணவு, தரமான தங்கும் அறைகள், ஏ.சி. பஸ், மினரல் வாட்டர், குரூப் இன்ஷூரன்ஸ் என எங்களது நிறுவனம் சிறந்த விஷயங்களையே வாடிக்கையாளர்களுக்குத் தருகிறது. சகல வசதியுடன்,

# அனுபவம்!



• கைலாஷில் பூஜை...

குறைவான கட்டணத்தில் ஸ்ரீ டிராவல்ஸ் மூலம் சுற்றுலா சென்று வருபவர்கள், தங்கள் பயணத்தை ஒரு இனிய அனுபவமாக உணர்கிறார்கள். இந்த ஆண்டு முதல் நைனிடால், முசௌரி, அல்மேரா போன்ற இடங்களுக்கும் டூர்களைத் துவங்கியுள்ளோம். புதுமணத் தம்பதியர், அவர்கள் விரும்பும் இடத்துக்குச் சென்றுவரவும் ஏற்பாடுகள் செய்து தருகிறோம்.

வருகிற மார்ச் 23ல் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள அனைத்து முக்கிய இடங்களுக்கும், ஜூலையில் சீனியர் சிட்டிஸன் டூரினையும் ஏற்பாடு செய்துள்ளோம்.

சுற்றுலா நாட்கள், தேதி, பயண நேர அட்டவணை மற்றும் விவரங்கள் எங்களது அலுவலகத்தில் கிடைக்கும். முப்பத்தைந்து நபர்கள் கொண்ட குழுவினருக்கு, அவர்களின் தேவைக்கேற்ப சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்து தருகிறோம்.

டெல்லியைச் சுற்றியுள்ள சுற்றுலாக்களுக்கு டெல்லியில் தங்கும் வசதி, சுற்றிப் பார்த்தல் அனைத்தும் பயணக் கட்டணத்திலேயே அடங்கும்.

சிறப்பு பஃபே உணவு, கேம்ப் ஃபயர் போன்றவற்றையும் ஏற்பாடு செய்து தருகிறோம்.

ஏற்கெனவே இருபது திருக்கயிலாய யாத்திரைகளை வெற்றிகரமாக முடித்திருக்கும் நாங்கள், பெரிய குழுவினராக வருபவர்களுக்கு பிரத்யேகச் சலுகை வழங்குகிறோம். மொத்தத்தில் ஒரு முறை எங்களது ஸ்ரீ டிராவல்ஸ் மூலம் சுற்றுலா சென்று வந்து பாருங்கள்... அதன் அருமை உங்களுக்குத் தானே தெரியும்" என்கிறார் இளந்திரையன்.

மேலும் தொடர்புக்கு:
044-6534081, 82, 83

**ஸ்ரீ டிராவல்ஸ்,**
**194 ஏ, 2வது தளம்,**
**அண்ணாசாலை, சென்னை - 6**

- ஆதித்யா

Advt.

# தராசு

● அ.சுஹைல் ரஹ்மான், திருச்சி - 21

? 'விலையை உயர்த்தாமல் ஒத்துழைப்பு தாருங்கள்' என்று தொழில் அதிபர்களுக்கு ப.சிதம்பரம் வேண்டுகோள் விடுத்துள்ளாரே?

! சரணாகதி!


● வே.ந.கதிர்வேல், வேலூர்

? சங்கடம் என்றால் தெரியும்; அதென்ன தர்மசங்கடம்...?

! மதுரை பிறந்தநாள் பிரும்மாண்ட கொண்டாட்டம் - சங்கடம். அதற்குப் போட்டியாக சென்னையில் பிறந்தநாள் அதி பிரும்மாண்ட கொண்டாட்டம் - தர்மசங்கடம்!







• பதற்ற வேண்டுகோள்!

• பேச்சுக்கு... • ... இடம்!

● லெ.நா.சிவகுமார், சென்னை -33

? ஒரிசாவில் உள்ள பூரி ஜகன்னாதர் கோயிலில் அமெரிக்கர் ஒருவர் நுழைந்த காரணத்தால், கோயில் முழுதும் சுத்தம் செய்யப்பட்டது மட்டுமின்றி ஏழாயிரம் பேருக்கான பிரசாதமும் குப்பையில் கொட்டப்பட்டுவிட்டதாமே...?

! ஹரே ராமா ஹரே கிருஷ்ணா... கிருஷ்ண கிருஷ்ணா ஹரே ஹரே! இறைவா அவர்களை மன்னித்துவிடு... ஹரே ராமா... ஹரே கிருஷ்ணா....

● டி.முருகேசன், திருவாரூர்

? மே மாத இறுதிக்குள் தமிழக காங்கிரஸ் புத்துணர்ச்சி பெறும் என்று வீரப்ப மொய்லி கூறியிருக்கிறாரே...?

! எந்த மே மாதம் என்று சொல்லவில்லை அல்லவா!

● ஆர்.மாதவராமன், கிருஷ்ணகிரி

? தெற்கு வளர்கிறது; வடக்கு வாடுகிறது என்கிற அளவுக்கு தமிழகம் வளர்ந்திருப்பதாகக் கூறுகிறாரே முதல்வர்...?

! அ.தி.மு.க. அல்லது வேறு கட்சி தனியாகவோ, கூட்டணியாகவோ தப்பித் தவறி தமிழகத்தில் ஆட்சிக்கு வந்தால், அவர் பார்வையில் மறுபடி தெற்கு தேய ஆரம்பித்துவிடும்.

● கே.வி.நாதன், நெய்வேலி

? கிரிக்கெட் போட்டியில் ஒழுங்காக விளையாடுங்கள்; பார்லிமெண்ட் எம்.பி.க்கள் போல் நடந்துகொள்ளாதீர்கள் என்று மக்களவை சபாநாயகர் சோம்நாத் சாட்டர்ஜி அறிவுரை

## நீங்கள் கேட்டவை

கூறியிருப்பது குறித்து...?

! வேடிக்கையாகச் சொன்னாலும் வேதனையான உண்மை. கிரிக்கெட் வீரர்களிடம் இவ்வாறு பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பது இரட்டிப்பு வேதனை!

● கவிதா ராஜேஸ்வரி, எசனை

? தாம் எம்.ஜி.ஆர். ரசிகன் என்பதால் அவரது கட்சியை அதிகம் விமர்சிக்க விரும்பவில்லை என விஜயகாந்த் கூறுவது சரியா...?

! டிராக் மாறுகிறார் என்றால், திசை மாறுகிறாரா அல்லது எதிரே வரும் ரயிலுக்கு வழி விடுகிறாரா என்பது உறுதியாக அவருக்குத் தெரிந்திருந்தால் சரி.

● பி.தாம்பரம் யோகநாதன், கிழக்குத் தாம்பரம்

? பெண்களின் வளர்ச்சியைப் பொறுத்துக்கொள்ள முடியாத ஆண்களுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்...?

! அப்படிப்பட்டவர்கள் ஏற்கெனவே மனம் ஊனப்பட்டவர்களாகத்தான் இருப்பார்கள். அதுவே அவர்களுக்குத் தண்டனைதான்.

● மு.செந்தில்குமார், திருச்சி - 102

? மோட்டார் சைக்கிளில் பயணம் செய்வோருக்கு ஹெல்மட் கட்டாயம் என்று உத்தரவிட்ட அரசு, அதை இலவசமாக வழங்கினால் என்ன?

! சரியாப் போச்சு! அடுத்து மோட்டார் சைக்கிளையும் இலவசமாகத் தரும்படி கேட்பீர்கள் போலிருக்கே!

● எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

? கருணாநிதியை முன் மாதிரியாகக் கொண்டு இளைஞர்கள் உழைக்க வேண்டும் என்கிறாரே ஜனாதிபதி?

! குடியரசுத் தலைவர் கவனமாகத்தான் பேசியிருக்கிறார். சுறுசுறுப்புக்கும் உழைப்புக்கும் கருணாநிதியை முன் மாதிரியாகக் கொள்வதில் தவறே இல்லை.

● எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்

? வைகோ, நெடுமாறன் ஆகியோர் விடுதலைப்புலிகளிடம் விலைபோய் விட்டனர் என்று ஈழ எழுத்தாளர் ஷோபா சக்தி ஒரு பத்திரிகைப்



★ மாய வளர்ச்சி!


# தெற்கு வளர்ந்து வடக்கு வாடுகிறதாமே?

❐ ரூ.100 பரிசு பெறுபவர் :
**ச.தமிழ்ச்செல்வி,**
நீதிமன்ற வளாகம்,
காரைக்கால் - 609 602

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
**எஸ்.ராமசாமி,** குட்டை தயிர்பாளையம்,
வடக்கு தயிர்பாளையம் அஞ்சல்,
சித்தோடு - 638 102 (வழி)
ஈரோடு.



● ரசிக விமர்சனம்!



● போலி புத்துணர்ச்சி!



● வேதனை அறிவுரை!

பேட்டியில் சொல்லியிருப்பது குறித்து உங்கள் கருத்து...?

! விலை போனார்களோ இல்லையோ, இப்படிப் பேச்சுக்கு இடம் தரும் அளவுக்குக் கண்மூடித்தனமாகப் புலிகளை ஆதரித்து வருவதை மறுக்க முடியாது.

● எஸ்.திருமலை, கோவை - 9

? ஒரு தெய்வத்தைக் குறைவுபடுத்தி மற்றொரு தெய்வத்தை ஏற்றிப் புகழும் விருப்பு - வெறுப்புமிக்க கட்டுரைகள் பல ஆன்மிக இதழ்களிலேயே காணப்படுவது வேதனையாக உள்ளதே?

! அரசியலில் ஆன்மிகம் அவசியம். ஆன்மிகத்தில் அரசியல் புகுவது ஆபத்து!

● ச.தமிழ்ச்செல்வி, காரைக்கால் ❒

? வழக்குகளின் பெருக்கத்தினால் நீதிமன்றங்கள் திணறிக் கொண்டிருக்க, குடும்ப வதை தடைச் சட்டம், வயதான பெற்றோர் பராமரிப்புச் சட்டம் எனச் சட்டங்களின் எண்ணிக்கையைக் கூட்டிக்கொண்டே போவதில் அர்த்தம் உண்டா?

! சமுதாய நலனுக்குரிய அவசியமான சட்டங்களைப் புகுத்துவது தவிர்க்க முடியாதது. அதே சமயம், நீதி பரிபாலன முறைகளைச் சீர்திருத்தி, வழக்குகள் வெகுவாகக் குறையவும், தேங்குவதைத் தவிர்க்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மனமிருந்தால் மார்க்கமுண்டு.

● எஸ்.சங்கர், திருப்பரங்குன்றம்

? இந்த ஆண்டு பட்ஜெட்டில் நாட்டின் பாதுகாப்புக்காக 96,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது, நாடு பரப்பளவில் பெரிது என்பதை உணர்த்துகிறதா அல்லது நமக்கு எதிரிகள் அதிகம் என்பதை உணர்த்துகிறதா?

! நாட்டின் பரப்பளவு மாறுவதில்லை. அண்டை நாடுகளுடனான நமது உறவு மேம்பட்டால் பாதுகாப்புச் செலவு குறையும். ஆனால், அதற்கு வழிவகை செய்யப்படவில்லை என்பதே சோகமான உண்மை.

● எஸ்.ராமசாமி, வடக்கு தயிர் பாளையம் ★

? 28.2.07 அன்று தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட் பற்றி அத்வானி கூறும்போது 'பஞ்சாப், உத்தர்காண்ட் தேர்தல் தோல்விகளிலிருந்து காங்கிரஸ் பாடம் கற்கவில்லை" என்று தெரிவித்துள்ளாரே... இது எப்படிச் சரியாகும்? தேர்தல் முடிவுகள் 27.2.07 மாலைதான் வெளியாயின. பட்ஜெட்டோ 28.2.07ஆம் தேதிதானே தாக்கல் செய்யப்பட்டுவிட்டது...?

! பட்ஜெட்டுக்கு முதல் நாள்தான் தேர்தல் முடிவுகள் வந்தன என்றாலும், விலைவாசி உயர்வு பற்றி எதிர்கட்சிகள் நீண்ட காலமாகவே எச்சரித்து வந்துள்ளன. காங்கிரஸ் தோல்விக்கு விலைவாசி உயர்வே காரணம் என்று சோனியாவும் ஒப்புக் கொண்டிருக்கிறார். எனவே, நிதி அமைச்சரைத் தோல்விக்குப் பொறுப்பாக்கி அத்வானி பேசியிருக்கிறார். ●



நியூ கல்யாண் வழங்குகிறது உலகிலேயே முதன்முறையாக
1 சேலையில் 4 சேலைகள் !
Kalyan Sarees
MULTIPLE PATTU
இதோ, உலக அற்புதங்களின் பட்டியலில் மேலும் ஒன்று. கல்யாண் மல்டிபின் பட்டு உலகிலேயே முதன்முறையாக ஸ்பெஷல் சிங்கிள் வார்ப் டெக்னாலஜி முறையில் நெசவு செய்யப்பட்ட இந்த புதுமையான படைப்பு, நியூ கல்யாண் சாரீஸின் அயராத ஆராய்ச்சியும், கைதேர்ந்த நெசவாளர்களின் விடாமுயற்சியும் இணை சேர்ந்து உருவானது.
4-இன்-1, 3-இன்-1, 2-இன்-1, 1-இன்-1 என பலவித ரகங்களில் கிடைக்கும் கல்யாண் மல்டிபின் பட்டின் அழகோ அமர்க்களப்படுத்தும், விலையோ ஆச்சரியப்படுத்தும். வாருங்கள் ! பட்டில் புதுமைகளை அனுபவித்து மகிழுங்கள்.
SSW
கல்யாண் மல்டிபின் பட்டின் பலவித ரகங்கள்
4 in 1 சேலைகள் ஒரு சேலை 4 சேலைகளாக மாறுகிறது. 4 பாடி கலர்கள், 4 முந்தானைகள், 4 பார்டர்கள்.
3 in 1 சேலைகள் ஒரு சேலை 3 சேலைகளாக மாறுகிறது. 3 பாடி கலர்கள், 4 முந்தானைகள், 3 பார்டர்கள்.
2 in 1 சேலைகள் ஒரு சேலை 2 சேலைகளாக மாறுகிறது. 2 பாடி கலர்கள், 2 முந்தானைகள், 2 பார்டர்கள்.
1 in 1 சேலைகள் சேலையின் உட்புறமும், வெளிப்புறமும் ஒரே மாதிரி நிறங்கள் மற்றும் டிசைன்கள்.
நியூ கல்யாண் சாரீஸில் மட்டுமே கிடைக்கப்பெறும்.
ஆர்டருக்கேற்ப நெய்து தரப்படும்.
NEW Kalyan Sarees
பட்டின் தலைநகரம்
100 FEET ROAD, COIMBATORE
Maitri.com




# கல்கி



2007 மார்ச் 18
விய பங்குனி 4
மலர் : 65
இதழ் : 33


தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.


## தள்ளாடும் பட்ஜெட்


இந்தியப் பொருளாதாரத்தைப் புதிய ஆக்கப் பாதையில் திசை திருப்பிய பெருமை முன்னாள் நிதி அமைச்சரும் இன்றையப் பிரதமருமான மன்மோகன் சிங்குக்கு உண்டு. ஆனால், அவர் தலைமையில் இன்று நிதி அமைச்சர் வழங்கியுள்ள 2007-08க்கான பட்ஜெட், விலைவாசி உயர்வுப் பாதையில்தான் நாட்டை திசை திருப்பி, தலைதெறிக்க ஓடச் செய்து கொண்டிருக்கிறது.

இந்த பட்ஜெட், விவசாயத் துறையில் கூடுதல் கவனம் செலுத்தியிருப்பதாக அரசுத் தரப்பில் சித்திரிக்கப்படுகிறது. ஆனால், விவசாயிகளுக்குக் கூடுதல் கடன் வழங்கி அவர்களை மேலும் கடனாளி ஆக்குவது நீங்கலாக வேறு எந்த முயற்சியும் இல்லை. நீர்வளச் சேமிப்புக்கும் பெருக்கத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ள கோடிகளும், பயிர்க் காப்பீடு, உர மானியத்துக்கான மாதிரி முயற்சிகளும் (pilot projects) உணவு தானிய உற்பத்தி பெருக எவ்வாறு உதவும் என்று புரியவில்லை. உணவு தானிய உற்பத்தி பெருகாத வரையில் விலைவாசிகள் குறையமாட்டா; விவசாய விளைபொருள் சார்ந்த தொழில்கள் பெருகாத வரையில் வேலைவாய்ப்புகள் அதிகரிக்காது; பொருளாதாரம் சமச்சீராக முன்னேறாது.

"நம் நாட்டில் இரண்டு ஹெக்டேர் நிலமே உடைய சிறு விவசாயிகள்தான் அதிகம் உள்ளனர். எந்தத் திட்டமும் இவர்கள் நலனை மனத்தில் கொண்டு தீட்டப்பட வேண்டும்" என விவசாய விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் போன்றோர் கூறி வருகின்றனர். இத்தனை நாளாக இதைப் பற்றி அரசு கவலைப்பட்டதேயில்லை.

இன்று விவசாய வளர்ச்சி சார்ந்த பட்ஜெட் அளிப்பதாகக் கூறும்போதுகூட சிறிதும் தொலைநோக்கின்றி சிறு விவசாயிகள் நலன் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.






அத்தியாவசியப் பொருட்கள் பற்றாக்குறை ஏற்பட்டால் அவற்றை அரசு இறக்குமதி செய்து ஈடுகட்டும் என்று பிரதமரே தெரிவித்திருக்கிறார். அவருக்கே தன்னிறைவு பற்றிய நம்பிக்கை இல்லை!

அடிப்படைகளுக்கே வழி செய்யாத இந்த பட்ஜெட்டை எந்த வகையில் சிறந்த பட்ஜெட் என்று ஒப்புக் கொள்வது?!

உற்பத்திக்கு நிகரான பணப்புழக்கம் நிலவும்போதுதான் விலைவாசி கட்டுப்பட்டுப் பண வீக்கம் பெருகாமல் இருக்கும். இது அடிப்படையான பொருளாதார விதி.

ஐ.டி., மோட்டார் கார் போன்ற துறைகளின் அபரிமித வெற்றியால், ஒரு சில மட்டங்களில் மட்டும் பொருளாதார வளர்ச்சியும் ஒரு சிலரிடம் மட்டும் பணப் புழக்கமும் காணப்படுகின்றன. இது போதாதென்று, அயல்நாடுகளில் கறுப்புப் பணத்தைப் பதுக்கி வைத்துள்ள முதலைகள், அதை 'உள்ளே' கொண்டு வந்து முதலீடு செய்ய அனுமதிக்கும் பி.என். (participatory note) முறையும் அமலில் இருக்கிறது. இதனால் கோடிக்கணக்கில் கறுப்புப் பணம் சந்தைக்கு வருகிறது. போதாக் குறைக்கு வரி விதிப்பில் உள்ள கடுமை காரணமாக வரி ஏய்ப்பும் அதன் விளைவான கறுப்புப் பணப் புழக்கமும் வேறு! இவை தவிர, அரசின் ஆடம்பரச் செலவினங்கள் குறையாததால், பட்ஜெட் பற்றாக்குறையை ஈடு செய்ய அச்சடிக்கப்படும் கூடுதல் நோட்டுப் பணம்... எல்லாமாகச் சேர்ந்து பண வீக்கத்தைக் கட்டுக்கடங்காமல் பெருகச் செய்கின்றன.

2007-08-ல் அரசு செலவினங்களுக்காக 1,50,948 கோடி ரூபாய் புதிதாகக் கடன் வாங்கப் போகிறது. அதே சமயத்தில், இதுவரை வாங்கிய கடன்களுக்கு 1,58,995 கோடி ரூபாய் வட்டி மட்டுமே செலுத்தப்போகிறது.

தனி நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் வருமான வரிச்சுமை போதாதென்று சர்வீஸ் டாக்ஸ், வாட், ஃப்ரிஞ் பெனிஃபிட் டாக்ஸ் போன்ற புதிய புதிய சள்ளையான சுமைகள் வேறு. வர்த்தக - வியாபாரக் கடனுக்கான வட்டி விகிதம், வங்கிக் கடன்களுக்கான வட்டி விகிதம் என்று எல்லாவற்றையும் சகட்டு மேனிக்கு உயர்த்த ரிசர்வ் வங்கி மூலம் ஆணை பிறப்பிக்கப்படுள்ளது. இந் நிலையில் உற்பத்தி எப்போது பெருகி, பண வீக்கம் எப்போது குறைவது? அலை ஓய்ந்து சமுத்திர ஸ்நானம் செய்யும் கதைதான்!

சாமானிய மனிதனின் மூக்கையும் மூடி, வாயையும் பொத்திவிட்டு, "ம்! நன்றாக மூச்சுவிடு பார்க்கலாம்" என்று சொல்லுகிற கேலிக் கூத்துதான் 2007-08 நிதிநிலை அறிக்கை. ●

# வட்டமேஜை

✉ பாலியல் கல்வியை முறைப்படியும் சரியான அணுகுமுறையுடனும் வழங்க ஆசிரியர்களுக்கும் பயிற்சி தர வேண்டும் என்ற கருத்து நூற்றுக்கு நூறு உண்மை.
**மணியக்காரன்பாளையம்,**
**ஏ.ஜி.கல்யாணசுந்தரம்**

✉ கெட்டிமேளம் முழங்கிட, இணைப்பு பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க வென்று புதுமணத் தம்பதிகளை வாழ்த்துவது போல அமைந்திருந்தது.
**வடலூர், வெ.லட்சுமிநாராயணன்**

✉ பதினாறு வயதிலிருந்து இருபத்தோரு வயதுள்ளவர்களுக்குப் பெரியவர்கள், 'தவறான வழியில் செல்ல வேண்டாம்' என்று அறிவுறுத்தி, புத்திமதிகள் கூறி அரவணைப்பது பண்பாட்டைச் சீரழிக்காமல் இருக்கும்.
**கோவை,**
**கிரிஜா ராகவன்**



# ஏட்டுமீ லட்டு!

✉ டாக்டர் எஸ்.கே.ராஜனின் 'வரத்துக்கு பதில் சாபமே' கட்டுரை நல்ல அறிவுரை!
**சென்னை, தர்மன் பெரியசாமி**

✉ பொங்கியது மனம்! தங்கியது இன்பம்! ஆமாங்க... இந்தவார மேலட்டையைப் பார்த்துத்தாங்க.. அடேங்கப்பா! அப்படியொரு ஆனந்தம்.
**சென்னை,**
**கவிக்கோலம் கிருஷ்ணமூர்த்தி**

✉ காதல் ஹைக்கூ எட்டும் அட்டகாச லட்டுகளாய் தித்தித்தன!
**போடிநாயக்கனூர்,**
**எஸ்.எம்.பாலசுப்ரமணியன்**

✉ சட்டசபைக்குப் போகிற ஜனநாயகக் கடமையைச் செய்யாமலிருப்பது கூட ஒருவித வன்முறைதான் என்று விஜயகாந்த்துக்கு தராசு அறிவுறுத்திய விதம் சபாஷ்!
**அயன்புரம்,**
**த.சத்தியநாராயணன்**

✉ கல்கி 11.03.2007 இதழில் 'காங்கிரஸ் டி.வி.' என்ற தலைப்பில் எங்களது இமயம் டி.வி.யை வசந்தகுமார் அவர்கள் வாங்கிவிட்டதாக செய்தியொன்றை பிரசுரம் செய்திருந்தீர்கள். இது முற்றிலும் தவறான தகவல். இந்தத் தவறான செய்தி எங்களது நிறுவனத்தின் நன்மதிப்பினைக் கெடுக்கும் வகையிலும் நிர்வாக சம்பந்தமான குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.
**- ஆர்.ஏ.ஜெபராஜ்,**
**நிர்வாக இயக்குநர்,**
**இமயம் டெலிவிஷன், சென்னை-83**

✉ விஜயின் விறுவிறு பேட்டி மொறுமொறுவென்று நல்ல சத்தான நொறுக்குத்தீனியாக அமைந்தது. அவரது ரசிகர்களின் மனத்தில் இருந்த எல்லாக் கேள்விகளுக்கும் விடை கிடைத்துவிட்டது. தேங்க்ஸ் டு கல்கி.
**சென்னை - 60, எஸ்.கமலா**

## போட்டி முடிவு

கடந்த 21.1.07 இதழில் கீழே இடம் பெற்றிருக்கும் புகைப்படப் பெரியவரின் பார்வை எங்கே என்று கேட்டிருந்தோம். போட்டியில் வென்று தலா ரூ.250/- பரிசு பெறும் எட்டுப் பார்வைகள்...

**வா**ழ்க்கைப் பாதையில் கடந்த தூரம் கொஞ்சமா! சுமந்த பாரம் கொஞ்சமா! இனி யாரை எதிர்பார்க்க?

- ஆர்.வி.சலபதி, காட்பாடி

**பொ**ங்கலுக்குக் கொடுத்த வேட்டி, சேலையை விற்று அலுமினியப் பாத்திரம் வாங்கிட்டோம். இனி அரிசி வாங்கணும்... அடுத்த இலவசம் எப்போ?

- வி.ஆர்.கிருத்திகா, திருச்சி

**இ**ந்தத் தோளில் சுமந்த மகன் இந்தப் பொங்கலுக்கும் வரலியே... தனிக் குடித்தனம் வழிவிடுமா? வருவாயா ராசா?

- எஸ்.ஏ.யூசுப், அதிராம்பட்டினம்

**ப**ட்டணத்துல இருக்குற மவனால பைசாவுக்குப் பிரயோஜனம் கெடையாது...! ஆனா அங்க போற வர ஆளுங்ககிட்டயெல்லாம் அய்யா வேலைக்கே போவக்கூடாதுங் கறானாம்... அந்தச் சின்னப் பயலுக்கு தெரியுமா... இருந்த கால் மூதேவி; நடந்த கால் சீதேவின்னு!

- பி.ஜி.பி.இசக்கி, அகஸ்தியர்பட்டி

**இ**லவசங்கள எதிர்பாக்க லீங்க... தீப்பெட்டி கம்பெனிக்கு வேலைக்குப் போன பத்து வயசுப் பேரன் இன்னும் வீடு திரும்பலீங்க!

- தி.சீனிவாஸ் சுதர்சனன், சென்னை

**இ**ந்த வாரம் கண்டிப்பா தவணைக் காரன்கிட்ட மாட்டத்தான் போறேன். எங்கே ஒளியலாம்?

- முத்தையாமோகன், வந்தவாசி


**வ**றண்டுபோன பூமியும் உலர்ந்து போன நாக்கும் எதிர்பார்ப்பது தண்ணீரைதானே...!

- கே.எம்.ரவிச்சந்திரன், மதுரை

**மீ**ன் பிடிக்கப் போன என் மகனே! விண் வெளிச்சம் போன பின்னும், ஏன் வரக்காணுமே!

- கே.ருக்மணி, சென்னை

# அடுத்த இலவசம் எப்போ?



**புத்தகம்**

# தன்னம்பிக்கை முயற்சி!

**ஏற்றுமதி கலபமே– து.சா.ப.செல்வம், கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.60/-**


ஏற்றுமதி என்றால் என்ன, எப்படி வெற்றிகரமாக நடத்துவது, குறிப்பாக வெற்றியைப் பெற்று லாபம் சம்பாதிப்பது எவ்வாறு என்றெல்லாம் விலாவாரியாகப் பேசும் நூல், உதாரணக் கதைகளையும் உள்ளடக்கியுள்ளது. இப்புத்தக ஆசிரியரின் முந்தைய படைப்பான 'நீங்களும் ஏற்றுமதி செய்யலாம்' தமிழக அரசின் பரிசு பெற்ற நூல் என்பது குறிப்பிடத் தக்கது.

**சாதனை படைக்கும் ஊனமுற்றவர்கள்–தொகுப்பு: மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.50/-**

பல்வேறு சோதனைகளையும் தாண்டி வாழ்வில் ஜெயித்த மாற்றுத் திறன் கொண்ட இருபத்திரண்டு நபர்களின் பேட்டிக் கட்டுரைகள். உருக்கமாகவும் ஊக்கமாகவும் அமைந்துள்ளது சிறப்பு. தன்னம்பிக்கை வளர்க்கும் நல் முயற்சி.

**எல்லைகளுக்கு அப்பால்– சித்தார்த்தன், பண்மொழி பதிப்பகம், 2, பெத்தலா ஹவுசிங், 12/59, வைத்தியர் அண்ணாமலை தெரு, மைலாப்பூர், சென்னை - 47. விலை ரூ.100/-**

ஐரோப்பாவைப் பற்றின பயணக் கட்டுரை புத்தகம். சோவியத் யூனியன் உடைந்த பிறகு ஐரோப்பிய நாடுகளின் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது. அவற்றைப் பற்றின அரிய தகவல்கள் நூலெங்கும் விரவிக் கிடக்கின்றன. படங்களை வண்ணத்தில் இன்னும் கூடுதலாக வெளியிட்டிருந்தால் அழகு கூடியிருக்கும்.




**அப்பா இது நியாயமா! – அழகிரி விசுவநாதன், கிரிஜா பதிப்பகம், 36, சக்தி நகர், மனோஜிப்பட்டி தெரு, தஞ்சாவூர் - 4. விலை ரூ.25/-**

பிரபல வார, மாத இதழ்களில் வெளியான முப்பத்தியோரு சிறுகதைகளின் தொகுப்பு. இரண்டு, மூன்று பக்கங்களிலேயே சுவையாகக் கதை சொல்ல முடியும் என்று நிரூபித்திருக்கிறார் ஆசிரியர். இனிமையும், எளிமையுமாய் அமைந்து, நம்மை ஒரு நிமிடம் சிலாகிக்கவும் மறுநிமிடம் மௌனிக்கவும் வைக்கும் கதைகள்.

**- அத்தியாயன்**

# ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!

ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனை குறைத்து, மனவலிமையை தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்யத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்சனை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி போன்ற காரியங்களை பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் தீமை உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவைகளுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திரமுண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறையிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் மறையகம் பாபா. உடனே அணுக வேண்டிய முகவரி



அருள்

## மறையகம்

1 B, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட், நெ. 3, அப்துல் ரசாக் தெரு,
நூர்ஜஹான் தியேட்டர் எதிரில்(தற்போது ராஜ் தியேட்டர் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது), சைதாப்பேட்டை,
சென்னை – 600 015. ஃபோன் : 2435 1190, 2433 2047.
செல்போன் : 98404 11551

குறிப்பு : வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சினை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சினைகளை எழுதி, ரூ. 10 (அ) அதற்கான அஞ்சல் தலையுடன் அனுப்பி வைத்து ஆலோசனை பெறவும்.



ESTD : 1959 ஸ்ரீ குரு ராகவேந்திராய நமஹ Phone : 28444538, 28442850

**புனித யாத்திரை** **48 வருட அனுபவமுள்ள ஸ்தாபனம்**

ஸ்தாபகர் : வி.சுப்பாராவ் உரிமையாளர் : எஸ்.பத்ரி . செல் : 9444019151

| | |
|---|---|
| 31.03.07<br>03.08.07 | : 14 நாட்கள் கொண்ட மஹாராஷ்டிரா யாத்திரை. பாம்பே, நாசிக், பஞ்சவடி, திரியம்பகேஸ்வர், சிரிடி, சனி சிங்கனாப்பூர், நாகநாதம், பண்டரிபூர், பீமாசங்கர், மகாகாளேஸ்வர், ஓங்காரேஸ்வர், வைத்தியநாதம், உஜ்ஜயின் அஷ்டகணபதி ஆகியவை. கட்டணம் ரூ.**7,500/-** |
| 31.03.07<br>03.08.07 | : 14 நாட்கள் கொண்ட பஞ்சதுவாரகா யாத்திரை. அகமதாபாத், டாக்கூர் துவாரகா, பேட்டிதுவாரகா, நாகேஸ்வரம், ஹரிசித்திமாதா, போர்பந்தர், புஸ்கர், மாத்ருகயா, அம்பாஜி, மவுண்டாபு, சோம்நாத், ஸ்ரீநாத்துவாரகா, காங்குரோலி, கோமதி துவாரகா ஆகியன. கட்டணம் ரூ.**7,100/-** |
| 16.03.07<br>16.06.07 | : 4 நாட்கள் கொண்ட மந்திராலய யாத்திரை. நெல்லூர், ஸ்ரீசைலம், மந்த்ராலயம், மகாநந்தி, அஹோபிலம் ஆகியன. கட்டணம் ரூ.**2,000/-** (புஷ் பேக் 2 x 2 சீட்) |
| 09.04.07<br>18.09.07 | : 15 நாட்கள் கொண்ட யாத்திரை. முக்திநாத் யாத்திரை. காசி, கயா, பொக்ரா, முக்திநாத், சித்ரகூடம், அயோத்தியா, நைம்மசாரண்யம் ஆகியவை. கட்டணம் ரூ.**8,500/-** (ஹெலிகாப்டர் கட்டணம் தனி) |
| 17.04.07<br>28.08.07 | : 15 நாட்கள் கொண்ட யாத்திரை. ஆக்ரா, மதுரா, டெல்லி, குருசேத்திரா, வைஷ்ணவதேவி, சிம்லா, குளு மணாலி, அமிர்சர் ஆகியன. கட்டணம் ரூ.**8,500/-** |
| 17.04.07<br>28.08.07 | : 13 நாட்கள் கொண்ட யாத்திரை. சிம்லா, குளு மணாலி, அமிர்சர், வைஷ்ணவிதேவி, குருசேத்ரா, டெல்லி ஆகியவை. கட்டணம் ரூ.**7,500/-** |
| 26.06.07 | : 8 நாட்கள் கொண்ட யாத்திரை. காசி, கயா, அலகாபாத் ஆகியவை. கட்டணம் ரூபாய் **4,200/-** |
| 05.05.07<br>20.05.07<br>05.06.07 | : 12 நாட்கள் கொண்ட காசியாத்திரை. பூரி, புவனேஸ்வர், கோனார்க், காசி, கயா, அயோத்தியா, அலகாபாத், நைம்மசாரண்யம் ஆகியன. கட்டணம் ரூ.**6,100/-** |
| 19.05.07<br>19.06.07 | 14 நாட்கள் கொண்ட யாத்திரை. டெல்லி, ஆக்ரா, மதுரா, பத்ரிநாத், கேதார்நாத், ஹரித்துவார், ரிஷிகேஷ். ரூ.**6,500**<br>-60 நாட்களுக்கு முன்பு ரயில்வே டிக்கெட் ரிசர்வேஷன் செய்யப்படும். |

மேலும் விவரங்களுக்கு : **ஸ்ரீ விஜயா டிராவல் சர்வீஸ்**

**Old No.29, New No.18, ஆரிமுத்து ஆசாரி தெரு, திருவல்லிக்கேணி,**
**சென்னை-5. ✆ : 28444538, 28442850 Cell : 9444019151**

ஜனங்களின் சாமி

# மாய மங்கை!

கழனியூரன்

சோழ நாட்டை ஆண்ட மன்னன் ஒருவனுக்கு ரொம்ப நாளாப் புள்ளையில்லை. நீண்ட காலத்துக்குப் பிறகு ராணி ஒரு பொம்பளப் புள்ளையைப் பெத்தெடுத்தா. ராசா அரண்மனை சோசியனை வரவழைச்சி, பிறந்த பிள்ளைக்கு ஜாதகம் கணிக்கச் சொன்னார்.

சோசியன் புள்ளை பிறந்த லக்னத்தைப் பார்த்துட்டு, "இந்தப் புள்ளை கோட்டைக்கே ஆகாது. நாட்டிலும் வாழாது. அதனால காட்டுல கொண்டு போய் போட்டுடுங்க. இந்தப் புள்ளை பேயோட அம்சத்துல பிறந்திருக்கு"ன்னு சொன்னான்.

சோசியன் சொன்னதைக் கேட்டுட்டு ராசா ரொம்பக் கவலைப்பட்டார். ராணியிடம் பேசினார். பெத்த மனம் கேக்குமா..? "சோசியன் கிடக்கான் போக்கத்த பய... அவன் என்னத்தக் கண்டான்"னு சொல்லிட்டு ராணி தான் பெத்த புள்ளையைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்தா.

ஒரு நாள் ராணியின் தோழிப் பெண் புள்ளையின் கன்னத்தில் முத்தமிடப் போனா. அப்ப புள்ளையின் வாயில் இருந்து பிணவாடை வர்றதைக் கவனிச்சா. 'இது என்னடா, அதிசயமா இருக்கு'ன்னு நினைச்சி ஓடிப்போய் ராணிகிட்ட விவரம் சொன்னா.

ராணி ஓடி வந்து தன் குழந்தையைப் பன்னீரால் குளிப்பாட்டி அத்தர், சந்தனம் முதலிய வாசனைத் திரவியங்களைப் பூசினாள்.

நடுச்சாமம் போல ராணி புள்ளைக்குப் பால் கொடுப்போமேன்னு நினைச்சி தொட்டிலில் கிடந்த புள்ளையைத் தூக்கப் போனா. தொட்டிலில் புள்ளை இல்லை. தொட்டில் காலியாக இருந்துச்சு. 'ராணி இது என்னடா, மாயமாயிருக்கே'ன்னு நினைச்சி, தன் தோழிமார்கிட்ட சொல்லி புள்ளையைத் தேடச் சொன்னா.

அவுகளும் அரண்மனையிலும் தோட்டம் தொரவுகளிலும் புள்ளையைத் தேடிப் பார்த்துட்டுத் திரும்பினாங்க.

கோழி கூப்பிடப் பார்த்தா, புள்ளை தொட்டிலில் கிடக்கு. ராணி புள்ளையைத் தூக்கப் போனாள். புள்ளையின் வாயிலிருந்து 'குப்'புனு பிண வாடை அடிக்குது. ராணிக்கு இது புள்ளை இல்லை 'பேய்'தான்னு தோணிட்டு.

மன்னரிடம் சென்று நடந்த அதிசயத்தையெல்லாம் ராணி அப்படியே சொன்னாள். ராசா, அரண்மனைச் சேவகர்களைக் கூப்பிட்டு, "இந்தப் புள்ளைக்கு தோச சாதகமிருக்கு. அதனால யாருக்கும் தெரியாம நடுக்காட்டுல கொண்டு போய் விட்டுடுங்க'ன்னு சொல்லிட்டார். நடுக் காட்டுல அந்தப் புள்ளை புலிப்பால் குடிச்சி வளப்பேச்சியா வளர்ந்து பெரிய மனுஷியாயிட்டு.

காவேரிப்பூம்பட்டிணத்தில் பெரிய வாணிகன் ஒருத்தன் இருந்தான். அவனுக்கு ஒரு ஆம்பளப் பிள்ளை. பேரு ஆனந்தன்.

வாணிபம் செய்வதற்காக நாடு விட்டு நாடு செல்ல காட்டு வழியே வந்து கொண்டிருந்தான்.

அவன் தனியே வருவதைப் பார்த்த இசக்கி, அழகான பெண் ரூபம் கொண்டாள். வழியில் கரையில் நின்ற ஒரு கள்ளி மரத்தின் கொப்பை ஒடிச்சாள். அந்தக் கள்ளிக் கொப்பு உடனே ஒரு பெண் குழந்தையாக உருப்பெற்று, உயிரும் பெற்றது. அதை இடுப்புல இடுக்கிக்கிட்டு காட்டு வழியே வரும் ஆனந்தனை வழிமறித்து, "காட்டு வழி போகிற வணிகனே,




எனக்குத் தாம்புலம் தரிக்கக் கொஞ்சம் சுண்ணாம்பு தாரும்'' என்றான்.

இவன் பயந்துபோய், "அம்மா தாயே, எனக்குத் தாம்புலம் தரிக்கும் பழக்கமே இல்லை''ன்னான்.

இசக்கி விடுவாளா? ''அத்தானே, என்னை மறந்துட்டீங்களா...? நான்தான் உம் பொண்டாட்டி. இதுதான் உமக்கும் எனக்கும் பிறந்த புள்ளை''ன்னு சொல்லி இடுப்பில் இருந்த புள்ளையைக் காட்டுனா.

இவனுக்கு நடுக்கம் வந்துட்டு. "உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? காட்டு வழியில் பெண்கள்தான் தனி வழி நடக்கப் பயப்படுவாங்க. ஆனால், ஆம்பளையான என்னை நடுக்காட்டுல வழிமறிச்சி ஏதேதோ சொல்லிக் கலாட்டா பண்றியே. எனக்குக் கல்யாணமே நடக்கலை. அப்புறம் எப்படி பொண்டாட்டி, புள்ளை..?''ன்னு பயந்து நடுங்கியபடியே கேட்டான்.

''நீ என்னைக் காதலிச்சுக் கல்யாணமும் பண்ணி, எனக்கு ஒரு புள்ளையும் கொடுத்துட்டு, 'இப்ப நான் கல்யாணமே பண்ணலை'ன்னு சொல்லி தப்பிக்கவா பாக்கற! பக்கத்தில் பழையனூர்னு ஒரு ஊர் இருக்கு. வாரும் அந்த ஊர் நாட்டாமையிட்ட போய் ஞாயம் கேட்போம்''னு சொல்லிக் கூட்டிட்டு வந்தா.

அங்குள்ள ஊர் மடத்தின் முன்னால்

நின்னு போவோர் வருவோரிடமெல்லாம் தன் வழக்கைச் சொன்னாள்.

சேதி ஊர் அம்பலக்காரர் வரை போயிட்டு.

"ஐயா... வாணிபம் செய்றதுக்காக நாடுவிட்டு நாடு போய்க்கிட்டு இருக்கேன். எனக்கு இன்னமும் கல்யாணமே நடக்கலை. இவள் யார்னே எனக்குத் தெரியாது"ன்னு அழாத குறையாகச் சொன்னான் ஆனந்தன்.

மாய மங்கை, "ஐயா, நான் இடுப்பில் இருக்கும் என் புள்ளையைக் கீழே இறக்கி விடுதேன். இந்தக் கூட்டத் துல யாரைப் பார்த்து அது 'அப்பா'ன்னு கூப்பிடுதுன்னு பாருங்க. அதுக்குப் பிறகாவது நான் சொல்றதை நம்புங்க"ன்னு சொல்லி, தன் இடுப்பில் இருந்த மாயக் குழந்தையை இறக்கித் தரையில் நிப்பாட்டினாள் இசக்கி.



**காட்டு வழியா போகிறவர்களுக்கு இசக்கி இப்போது காவல் தெய்வம்!**

புள்ளையும் "அப்பா"ன்னு சொல்லிக்கிட்டு ஆனந்தனோட கால்கள் ரெண்டையும் கட்டிப் பிடிச்சிக்கிட்டு.

அம்பலக்காரரும் மற்ற ஊர்ப் பெரியவர்களும் இந்தக் காட்சியைப் பார்த்துட்டு, இசக்கி சொல்கிறது ஞாயம்தான்னு நினைச்சி, "இப்ப பொழுது இருட்டிட்டு. நாளைக் காலையில பேசித் தீர்ப்புச் சொல்றோம்"னு ஒரு மனதா சொன்னாங்க.

பெரியவர்கள் சொன்னபடியே ராத்திரிக்கு ஊர் மடத்தில் இருவரும் தங்கினர்.

இலை குலுங்கா நடுச்சாம வேளையில் இசக்கி, ஆனந்தனை எழுப்பினா. படுத்துக் கிடந்த புள்ளைய எடுத்து ஓங்கித் தரையில அடிச்சா. அது கிள்ளிக் கொப்பா ஒடிஞ்சி சிதறிச்சி. அதைப் பார்த்து ஆனந்தன் பயந்து நடுங்கினான். பேய் இசக்கி "பழிகாரா... சண்டாளா... என் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டுக் கொன்ற பாதகா... இப்ப உன்னை என்ன செய்றேன் பார்"னு சொல்லி, அவனை மட்ட மல்லாக்கத் தரையில் தூக்கிப் போட்டு, வயிற்றைக் கிழிச்சி மணிக் குடல்களை உருவி தனக்கு மாலையாகப் போட்டுக்கிட்டு பேயாட்டம் ஆடினா. பிறகு அறைக் கதவை உடைச்சிக்கிட்டுத் திரும்பவும் நடுக்காட்டுக்குப் போயிட்டா. அதுக்கப்புறமும் சுண்ணாம்பு கேட்டுத் தொடர்ந்தது அவ அலம்பல்.

இசக்கியின் ஆதாளியைத் தாங்க மாட்டாம மக்கள் முப்பந்தல்ங்கிற ஊர்ல இசக்கிக்கு நிலையம் போட்டுக் கொடுத்து, சிலையும் வச்சி, பூஜை புனஸ்காரம் பண்ணி, கொடையும் கொடுத்து அவளைத் தெய்வமாக் கும்பிட்டுக்கிட்டு வாராங்க. காட்டு வழியே போகிறவர்களுக்கு இசக்கி இப்ப காவல் தெய்வமா இருக்கா.

ஒரு பிறவியில தன்னைக் கொன்னவனை, மறுபிறவி எடுத்துக் கொன்னு பழி தீர்த்துக்கிட்டதால இசக்கியை உக்ரமான பெண் தெய்வமா மக்கள் கும்புடுறாங்கன்னு இசக்கி கதையைச் சொன்னார் சிந்தாமணி ஊரைச் சேர்ந்த கருப்பன்.


(தொடரும்)

## அக்கம் பக்கம்

**கா**ங்கிரஸ்காரர்கள் மத்தியில் நிதியமைச்சர் சிதம்பரத்துக்கு நல்ல பெயர் இல்லை என்பது டெல்லி வட்டாரத்தில் பரவலான பேச்சு. சமீபத்திய காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டத்தில் ஆளாளுக்கு சிதம்பரத்தைக் கடுமையாக அர்ச்சனை செய்ய, இரண்டு சந்தர்ப்பங்களில் சிதம்பரத்துக்காகப் பரிந்து பேசிய பிரதமர், அதன் பிறகு மௌனம் காத்தார் என்பது கட்சி ஆபீஸ் செய்தி. இவ்வளவு நடந்த பிறகும் சோனியா காந்தி வாய் திறக்காமல்




# அமைதி... அன்னை... அர்ச்சனை!



நடப்பவற்றை அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்தாராம்.

**டெ**ல்லியில் பல மத்திய அரசு அலுவலகங்கள் செயல்பட்டு வரும் சாஸ்திரி பவன் வளாகத்தில், குரங்குகளின் கும்மாளம் தாங்க முடியாத அளவுக்குச் சென்றுவிட்டது. அங்கிருக்கும் ஜன்னல்கள் வழியாகக் கைகளை நீட்டி, மேஜைகளிலிருந்து எதையாவது எடுத்துக்கொண்டு போய்விடுகின்றன. அண்மையில் ஒரு ஹைடெக் குரங்கு, கம்ப்யூட்டர் ஒன்றின் மௌசை கூலாக லவட்டிச் சென்று விட்டிருக்கிறது!

**வி**ருது விழாவுக்காக திருவனந்தபுரத்துக்கு வந்திருந்த ஏ.ஆர்.ரஹ்மான், முதுபெரும் இசை அமைப்பாளர் எம்.கே.அர்ஜுனனைக் கண்டதும் மனம் நெகிழ்ந்து போனார். ரஹ்மானின் தந்தை ஆர்.கே.சேகரின் நெருங்கிய நண்பரான அர்ஜுனன். இசையமைப்பில், தமது பன்னிரெண்டு வயதில் ரஹ்மான் பணியாற்றி இருக்கிறார்.

- எஸ்.சி.எம்.



• ஷைனி



• சாந்தி

# துடிப்பை உணர்ந்தவள்...

**இந்தியத் தடகள விளையாட்டு வீரர்களைத் தேர்வு செய்யும் குழுவிலிருக்கும் ஷைனி வில்சன், குழந்தை, கணவர் என்று சந்தோஷ வாழ்க்கை நடத்துகிறார். மகிழ்ச்சி அவரின் முகமெங்கும் முகாமிட நம்மிடம் பேசினார்...**

“என் மூன்றாவது வயதில், ஸ்கூல் விழாவில்தான் என் விளையாட்டு ஆசை மலர்ந்தது. ஏழு வயதில் மாநிலத் தடகளப் போட்டியில் வெற்றி பெற்றேன். பதின் மூன்று வயதிலேயே தேசிய அளவில் பங்கேற்க ஆரம்பித்து விட்டேன். இன்று போல் அன்று, தனியார் நிறுவனங்களோ, மத்திய-மாநில அரசோ உதவியது இல்லை... தொடர்ந்த என் வெற்றிகள் மட்டுமே என்னை அடையாளம் காட்டின. இப்போது அரசாங்கங்கள் கொடுக்கும் ஆதரவு மகத்தானது. இது விளையாட்டு வீரர்களுக்கு வரப்பிரசாதம்!

1986-ல் ஏசியன் விளையாட்டில் முதல் பரிசுக்கான தகுதியை நான் பெற்ற பின்னும் கடைசியில் தடம் மாறி ஓடியதால் தேர்வுக் குழுவினரால் எனது முதல் பரிசு மறுக்கப்பட்டது. விளையாட்டு வாழ்க்கைப் பாதையில் நான் அடைந்த மிகப்பெரிய வேதனை அது. என் முதல் குழந்தை பிறந்த மூன்றாவது மாதத்திலேயே தேசிய அளவிலான 800 மீட்டர் தடகளப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்றேன். குழந்தைப்பேறு விளையாட்டுக்குத் தடையானதல்ல. அஞ்சு ஜார்ஜுக்கும் பதினான்கு வயதில் மகன் உள்ளான். ஆனால் இன்றும் அவர் தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்று வருகிறார். எனது மூத்த மகளுக்கு விளையாட்டில் கொஞ்சம்கூட ஆர்வம் இடையாது. இரண்டாவது பெண்ணுக்கு உண்டு'' என்றவரிடம் 'சாந்தி' என்றோம்.

''அது வேதனையான ஒரு நிகழ்வு. சாந்தியின் திறமை மீது எள்ளளவும் சந்தேகம் இல்லை. தேர்வுக் குழுவில் நானும் இருந்ததால் அவளின் துடிப்பை என்னால் உணர முடிந்தது. எந்தவிதத் தவறான பழக்கமும் இல்லாதவள். அவள் பெற்ற பதக்கத்துக்குச் சோதனை வந்தபோது மனதளவில் நானும் பாதிக்கப்பட்டேன்.''

• தாகூர்

ஒரு பக்கக் கதை

டாக்டர் பிரேமி புன்னகையுடன் வரவேற்று, ஸ்கேனிங் ரிப்போர்ட்டை வாங்கிப் பார்த்தார். பெண் குழந்தை!

"சொல்லு, உமா! உடம்புக்கு என்ன?"

"உடம்புக்கு ஒண்ணுமில்லே டாக்டர். எனக்கு இந்தக் குழந்தை வேண்டாம். அழிச்சிடுங்க"


டாக்டர் திடுக்கிட்டார். "ஏன் உமா? பெண் குழந்தை என்பதாலா?"

"இல்லை, டாக்டர். எனக்கு ஏற்கெனவே ஒரு குழந்தை இருக்கு; அதுவே எனக்குப் போதும்!"

அவள் கண்கள் கலங்கின.

உமாவை டாக்டருக்கு நன்றாகத் தெரியும். பல

# உயிரோடு உயிராக...



ஆண்டுகள் பழக்கம். குடும்பத்தில் ஒருத்தி போல பழகுவாள். மணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை இல்லை. பிரேமியிடம்தான் ஆயிரக்கணக்கில் செலவழித்து எல்லா சிகிச்சையும் எடுத்துக் கொண்டாள்.

இப்போது அவள் கர்ப்பம்! கிடைக்காத ஒன்றுக்காக ஏங்கிப் போராடி, அது கிடைத்த பிறகு இப்படி அழிக்கச் சொல்கிறாளே!

"உமா! உனக்கென்ன பைத்தியமா? ஆக்கல், அழித்தல் இரண்டுமே கடவுளுக்கு மட்டுமே உரிய செயல். அழித்தல் மட்டும் மனிதனுக்குக் கூடாத செயல். இப்படியொரு கண்மூடித்தனமான முடிவு ஏன்?" பிரேமி அவள் தலையை வருடியபடி கேட்டாள்.

அந்த வாஞ்சையில் உமா உருகி விட்டாள்.

"டாக்டர்! நான் அனாதைக் குழந்தையைத் தத்தெடுத்து உயிரோடு உயிராக வளர்க்கிறேன். என் வயிற்றில் பிள்ளை பிறந்து... அதன் மீதே என் முழுக் கவனமும் பாசமும் திரும்பினால்... தத்துக் குழந்தையின் மனம் நொறுங்கி விடுமே..."

சற்றே நேர மௌனத்துக்குப் பின்...

"உன் பயம் நியாயமானதுதான் உமா. ஆனால் தேவையில்லாதது."

"டாக்டர்!"

"என் தாயும் இதே நிலையில்தான் என்னைப் பெற்றெடுத்தாள். என் மீதான என் தாயின் அன்பில் என்றும் குறையில்லை. என் சகோதரியும் ஒரு நொடிகூட என்னைவிட்டுப் பிரிவதில்லை. துளி பாசமும் குறைவதில்லை. நீ தைரியமாய்ப் போ." பிரேமி சொல்ல, உறுதியும் நம்பிக்கையுமாய் வெளியேறினாள் உமா. ●

❖ தமிழ்நாயகி ❖

**அமரர் கல்கி**

# வேடிக்கை



அநாவசியமான காரியங்களை எல்லாரும் செய்யத் தயாராயிருக்கிறார்கள்; ஆனால் அவசியமான காரியங்களை 'நம்மை'த் தவிர யாரும் செய்ய முன் வருவதில்லை. இந்த உண்மையை நாம் ஒவ்வொருவரும் அனுபவத்தில் கண்டறிந்திருக்கிறோம்.

இதற்கு உதாரணம் காட்டுவதற்காக, ஒரு பொதுக் கூட்டத்தில் ஒருவரை மூர்ச்சை போட்டு விழச் செய்யலாம். வெயில் காலமாகையால், புழுக்கம் அசாத்தியமாயிருக்கிறது. பெயர் பெற்ற பிரசங்கியாகையால், கூட்டம் அபரிமிதம். இந்த நிலைமையில், பிரசங்கி வெகு ஆத்திரமாக அபிஸீனியாவில் நடக்கும் அநியாயத்தைப் பற்றிப் பேசுகிறார்; ஐரோப்பிய தேசத்தினர் எல்லாரும் வாய் அனுதாபம் காட்டுகிறார்களே தவிர, காரியத்தில் ஒத்தாசை ஒன்றும் செய்யவில்லையே என்று கதறுகிறார். அந்தச் சமயத்தில், கூட்டத்தில் ஒருவர், புழுக்கமும் உணர்ச்சியும் சேர்ந்து தாக்கியதன் காரணமாக மூர்ச்சையடைந்து விழுகிறார். அப்போது பக்கத்திலுள்ளவர்கள் எல்லாம் என்ன செய்கிறார்கள்?

"தண்ணி கொண்டா, தண்ணி கொண்டா!" என்கிறார் ஒருவர்.

"ஜலம், ஜலம்!" என்று கதறுகிறார் இன்னொருவர்.

"யாராவது கொஞ்சம் 'வாட்டர்' கொண்டு வரப்படாதா?" என்று வேறொருவர் கேட்கிறார்.

"இன்னும் ஜலம் வரவில்லையா?" என்று அதிகாரமாய் வினவுகிறார் முதல் மனிதர். மூர்ச்சை போட்டவனைச் சுற்றிக் காற்று வர இடமில்லாமல் நூறு பேர் நிற்கிறார்கள். ஒருவராவது தண்ணீர் கொண்டு வரப் போவதில்லை. கடைசியில் நீங்களாவது, நானாவது போய்த்தான் கொண்டுவர வேண்டியிருக்கிறது!

> "மூர்ச்சை போட்டவனைச் சுற்றி காற்று வர இடமில்லாமல் நூறு பேர் நிற்கிறார்கள்."

இம்மாதிரிச் சந்தர்ப்பங்கள் சில சமயங்களில் கல்யாண வீடுகளிலேகூட ஏற்படுவதை நாம் கவனித்திருக்கிறோம். ஒரு கல்யாணத்தில், திருமாங்கல்யதாரணம் ஆவதற்குச் சற்று முன்பு ஒரு பெரிய குழப்பம் ஏற்பட்டு விட்டது.

"பிரம்பு எங்கே?" என்று முதலில் வாத்தியார் ஒரு கூச்சல் போட்டார். "அடே! பிரம்பு எடுத்துண்டு வா!" என்று பெண்ணின் மாமா கத்தினார். "பிரம்பு! பிரம்பு!", "பிரம்பு எங்கே?", "பிரம்பு வரவில்லையா?" என்று கொஞ்ச நேரம் அமர்க்களப்பட்டது. மாப்பிள்ளையோ திருதிருவென்று விழிக்கிறார்! கல்யாணம்

என்று அழைத்துக்கொண்டு வந்து பிரம்பினால் வெளுத்துவிடப் போகிறார்களா என்னவென்று அவர் பயந்து போனார். அப்படி நேர்ந்தால், அம்மாமிக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு விடுவது என்றும் அவர் தீர்மானித்திருந்தார். கடைசியாக, அரைமணி நேரம் காத்திருந்தும் பிரம்பு வராமற்போகவே, கல்யாணப் பெண் குடுகுடுவென்று ஓடிப்போய்க் குதிர் இடுக்கிலிருந்த பிரம்பைக் கொண்டு வந்து வாத்தியாரிடம் கொடுத்தது. வாத்தியார் அதை மாப்பிள்ளையிடம் கொடுக்க, மாப்பிள்ளை காசி யாத்திரை கிளம்பினார்!

இதுபோன்ற நெருக்கடியான நிலைமைகளில், செய்ய வேண்டியதைச் செய்ய அநேகர் முன் வராததற்கு ஒரு முக்கிய காரணம், வேடிக்கை பார்ப்பதில் அவர்களுக்கிருக்கும் விருப்பந் தான் என்று நினைக்கிறேன். குளத்தில் யாராவது விழுந்தால் அது ஒரு வேடிக்கை; குளத்தில் விழுந்தவனை இன்னொருவன் காப்பாற்றினால் அதைப் பார்ப்பதும் ஒரு வேடிக்கை; ஆனால் நாமே அதைச் செய்வதில் வேடிக்கை என்ன இருக்கிறது? அசௌகரியந் தானே?

**– 'கல்கி களஞ்சியம்'**
**வானதி வெளியீடு**

# விவகாரம்!



**உலகம்!**

பெட்ரோலுக்கு மாற்று என்கிற வகையில் எத்தனால் உலகமெங்கும் ஆராய்ச்சியாளர்களின் தனிக் கவனத்தைப் பெற்று வருகிறது.

பிரேசிலோடு அமெரிக்கா செய்யவுள்ள ஒப்பந்தம் இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டது. இந்த இதழ் வெளியாகும்போது அந்த ஒப்பந்தத்தில் இரு நாடுகளின் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டிருக்கக் கூடும். இலத்தீன் அமெரிக்காவிலும் கரீபியத் தீவுகளிலும் எத்தனால் தயாரிப்பு மற்றும் எத்தனால் பயன்பாடு ஆகியவை குறித்தது இந்த ஒப்பந்தம்.

சொல்லப்போனால் பிரேசில், அமெரிக்கா ஆகிய இரண்டுமே எத்தனால் தயாரிப்பில் முன்னணியில் உள்ளன. உலகின் மொத்த எத்தனால் தயாரிப்பில் எழுபது சதவிகிதம் இவர்களுடையதுதான். என்றாலும் அமெரிக்காவினால் எத்தனால் உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடியவில்லை. போன வருடம் அறுபது கோடி காலன் எத்தனாலை அமெரிக்கா இறக்குமதி செய்தது. அதில் மூன்றில் ஒரு பங்கு பிரேசிலிடமிருந்து.

மேலே குறிப்பிட்ட ஒப்பந்தத்தின்





## வேற்று நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டிய அவலத்திலிருந்து விடுபட வேண்டாமா?

படி எத்தனால் தயாரிப்புத் தொழில் பிரேசிலில் வெகுவேகமாக விரிவடைய, அமெரிக்கா அனைத்துத் தொழில்நுட்ப உதவிகளையும் செய்யும்.

'அமெரிக்காவுக்கு எதனால் இந்தத் தாராள குணம்? தனது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அமெரிக்காவே எத்தனால்

உற்பத்தியை அதிகரிக்கலாமே?

அமெரிக்காவில் தயாரிக்கப்படும் எத்தனால் சோளத்திலிருந்து உருவாக்கப்படுகிறது. குறைந்தபட்ச விலை இவ்வளவாவது இருக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்குமளவுக்கு இதன் உற்பதியாளர்கள் சக்தி படைத்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால், பிரேசிலில் இந்தக் கட்டுப்பாடுகள் இல்லை. தவிர, அங்கு



# அமெரிக்காவுக்கு ஏனிந்த தாராளம்?



கரும்பிலிருந்து எத்தனால் தயாரிக்கப் படுவதால், அது குறைவான விலையிலேயே கிடைக்கிறது.

அமெரிக்கா தான் இறக்குமதி செய்யும் எத்தனாலுக்கு டாலருக்கு 54 சென்டுகள் வரி விதிக்கிறது. ஆனால் கரீபிய நாடுகளுக்கும், மத்திய அமெரிக்க நாடுகளுக்கும் இந்த ஒப்பந்தத்தின் மூலம் விலக்கு அளிக்கப்படுகிறது. ஒரே நிபந்தனை - அவர்கள் நாட்டில் விளைகிற கரும்பிலிருந்துதான் இந்த எத்தனால் தயாரிக்கப்பட வேண்டும்.

இதைத் தொடர்ந்து அமெரிக்க அரசியல்வாதிகளில் ஒரு பகுதியினர், அவர்களுக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பி இருக்கிறார்கள். உள்ளூர் எத்தனால் தயாரிப்பாளர்கள் இந்த ஒப்பந்தத்தினால் பாதிக்கப்படுவார்களே!

"இதையெல்லாம் பார்த்தால் முடியுமா? விஷமாக ஏறும் பெட்ரோல் விலை மற்றும் இதற்காக வேற்று நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டிய அவலம் இவற்றிலிருந்து விடுபட வேண்டாமா?" என்பது அமெரிக்க அரசின் வாதம்.

முக்கியமாக, பெட்ரோல் வளமிக்க வெனிசுலாவின் ஆதிக்கத்தை எப்படியாவது அடக்க வேண்டும் என்பதில் முனைப்புக் காட்டுகிறது அமெரிக்கா. ●

**ஜி.எஸ்.எஸ்.**



**பரட்டை என்கிற அழகுசுந்தரம் - தனுஷ் நடிக்க, சுரேஷ் கிருஷ்ணா இயக்கத்தில் வளர்ந்து வரும் படம். 'ரஜினி நடிக்க வேண்டிய படம்' என்கிற அடைமொழியுடன் தயாராகும் இப்படத்தின் தயாரிப்பாளர் கேயாரிடம் படத்தைப் பற்றிக் கேட்டோம்... சத்தான தகவல்களை முத்தாய் உதிர்த்தார்.**

- கன்னடத்தில் வெளியான இப் படத்தை ரஜினி பார்த்து மெய்மறந்துபோய்விட, உடனே என்னைக் கூப்பிட்டு 'எப்பாடு பட்டாவது இந்தக் கதையை வாங்கிவிடுங்கள்; நானே நடிக்கிறேன்' என்று கூறினார். ஆனால், சந்திரமுகி குறுக்கிடவே, அதில் நடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் நான் படத்தை வாங்கி விட்டேன். ரஜினியை வைத்து எடுப்பதாய் நினைத்துத்தான் அவருடைய மாப்பிள்ளையை வைத்து எடுக்கிறேன்.
- 'சிவாஜி', 'தசாவதாரம்' மாதிரி இந்தப் படத்தில் தனுஷுக்கு பலவித கெட்டப்புகள். ஐயங்கார் வேஷத்தில் அவரை அவருக்கே பிடித்துப் போய்விட்டது. கூடுதலாக இம்ப்ரஸ் ஆனது ஐஸ்வர்யா தனுஷ்.
- சினிமாவை விட்டு விலகியிருந்த நடிகை அர்ச்சனா, தமது பதினான்கு ஆண்டுகால தவத்துக்குப் பிறகு, இந்தப் படத்தின் கதையை உணர்ந்து தனுஷின் அம்மாவாக நடிக்க ஒப்புக்கொண்டார். அவரது பிரமாத நடிப்பு, பிரமிப்பாக நிச்சயம் பேசப்படும்.



● மீரா ஜாஸ்மின்தான் நாயகி. ஜர்னலிஸ்ட்டாக நடிக்கிறார். தனுஷோடு இவர் பண்ணும் குறும்புத்தனங்கள் குளுகுளு. 'மீரா' கெட்டப்பில் மீராவாகவே மாறி விட்டார். தன் வீட்டு ஹாலில் மாட்ட ஆளுயர படத்துக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறார் என்றால் பாருங்கள்!

● செஞ்சிக்கோட்டையில் ஒரு பாடலை எடுத்தோம். ராஜகிரி கோட்டை என்ற ராணிக் கோட்டை உச்சிக்குச் செல்ல 567 படிக்கட்டுகள். ஹீரோ, யூனிட் எல்லோரும் அங்கே சென்ற பிறகு மீரா, தன்னால் ஏற இயலாது என்று கூறிவிட்டார். எங்கள் கேமராமேன், உச்சியில் உள்ள அழகை டிஜிட்டல் கேமராவில் படம் பிடித்து வந்து காட்ட, ரசிக்க ஆரம்பித்துவிட்ட மீரா, கஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் ஒரே மூச்சில் உச்சிக்குப் பறந்தார்.

# தனுஷின் தசாவதாரம்!



● கேமராமேன் வேல்ராஜின் திறமையைப் பார்த்து வியந்த தனுஷ், தமது அடுத்த படமான 'பொல்லாதவ'னுக்கும் அவரையே ஒளிப்பதிவாளராக்கி விட்டார்.

● இப் படத்தின் ஆடியோ ரிலீஸ் ஃபங்ஷனில் ரஜினி நிச்சயம் கலந்து கொள்வார். அப்போது இந்தப் படத்தைப் பற்றிய அபூர்வமான விஷயங்கள் சிலவற்றை அவர் சொல்லக்கூடும்.

தொகுப்பு : **விக்டர்**

சிறப்புச் சிறுகதை

# உறக்கத்தின் கனவில் சந்தியா

கா.சீ.சிவகுமார்

நடேசன். வயது இருபத்தெட்டு. கிட்னி இரண்டும் பழுது. இப்படி எழுதுவது குரூரமாகத் தோன்றலாம். அந்த இளைஞன் மீது இயற்கை நிகழ்த்திய குரூரத்தைவிட, இது அதிகமானதல்ல. மற்றபடி அவன் இளைஞன் என்பதற்காக அல்ல, குழந்தை முதல் முதியோர் வரை எந்த வயதில் கிட்னி பழுதடைந்தாலும் வேதனைதான். வெளியேற வழியில்லாத உப்புகளும் கழிவுகளும் இரத்தத்தோடே சங்கமமாகி, எடை கூடிக் குருதியழுத்தம் அதிகமாகி உடலெங்கும் நோவுற்றுப் படுக்கையில் விழும் அவர்கள், எந்த வயதினராக இருந்தாலும் தம் வயதினை இழந்து, அந்த வேதனை ஒன்றேயாக மிஞ்சுவர். சுத்திகரிக்கப்படாத ரத்தத்தின் வேதனை.

நகரத்தின் கிழக்கு ஓரமாக இருந்தது நடேசன் வைத்தியம் பார்த்துக் கொள்ளும் மருத்துவமனை. வார்டுகளுக்கு வெளியே எந்த நோயாளித் தன்மையையும் காண முடியாது. மரங்கள் அடர்ந்த சுற்றுப்புறம், மதில் சூழ்ந்த வளாகத்துக்குள்ளேயே மருத்துவக் கல்லூரி, செவிலியர் விடுதி ஆகியன உண்டு.

செவிலியர் விடுதியில் அதிகமாக விளிக்கப்படும் வார்த்தை 'சேச்சி!' விடுதிக்கு முன்னால் கம்பி வேலியால் சூழப்பட்ட பூங்கா. அதில் மான்களும், மயில்களும் சில வகைக் கோழியினங்களும் உலவும். அவை, அகவவும் கத்தவும் மட்டுமே தெரிந்த வகையினங்கள் என்பதால், 'சேச்சி' என்று கூப்பிட்டுப் பழகவில்லை.

சந்தியா காலை ஏழு முப்பது மணி டியூட்டிக்காக விடுதியில் இருந்து புறப்பட்டாள். கம்பி வலைக்குள் உழலும் பதினெட்டு மான்களுள் ஒன்றுக்கு 'நடேசன்' எனப் பெயரிட்டிருந்தாள். அந்த மானைப் பார்க்கப் பார்க்க சிரிப்பாக வந்தது. மெதுவான குரலில், "இன்னிக்கு டயாலிஸிஸ் யூனிட்டுக்கு வருவீல்ல, வா... வா" என்றாள்.

நோயாளியாகத்தான் வருவான் என்றாலும் அவனது வருகை மகிழ்ச்சி தருவதாய் இருக்கிறது. 'அவன் நோயாளியாகவே நீடிப்பதை விரும்புகிறேனோ' என்ற எண்ணம் மேலிட்டபோது சந்தியா துணுக்குற்றாள்.

**உங்க ரத்தத்துல ஹீமோகுளோபின் அளவு என்ன?**

சிறுநீரகத்தின் தோல்வியை நோய் என்று குறிக்கலாமா... தெரியவில்லை. ஆனால், மருந்துகளாலான உலகம், பிரசவத்துக்காக வருவதைத் தவிர பிற அனைத்தையும் நோய் என்றே வழங்குகிறது.

சந்தியா முதன்முதலாக வந்த நாளில் நடேசனைப் பார்த்து, "ஹலோ, பேஷண்ட்ஸ் தவிர மத்தவங்க

இருக்கக் கூடாது" என்றான்.

"உண்மையிலேயே நான் பேஷண்ட் தாங்க" என்றான் நடேசன் அமைதியாக.

அவஸ்தைக்கான சமிக்ஞைகள் வருவதன் முன்பாகவே ஆஸ்பத்திரிக்கு வந்துவிடும் தீர்க்கத்தை அவனது பதின்மூன்று ஆண்டுகால அனுபவம் கற்றுத் தந்திருந்தது. நடேசன் சிகிச்சை முடிந்து வெளியேறும் போது - அவனது நோய் பற்றித் தெரியாத நிலையில் - கேண்டீன் பக்கத்தில் தேநீர் அருந்தும் யாராவது ஓர் இளம்பெண், அவன் மீது மையல் கொள்ளும் வாய்ப்பு இப்போதும் இருக்கிறது.

நடேசன் தன் நிலை கருதி ஓரிரு காதல்களை மறுத்திருக்கிறான்.


"உங்களுக்காக எதையும் செய்வேன்" என்று அர்ச்சனா ரெட்டைக் காலில் நின்றபோது "காதலிச்சவன் படுக்கையில் விழுந்திட்டா பலவகையில் கவனிச்சுக்கலாம்தான். ஆனா என்னை மாதிரி ஆளைக் கட்டினா பிச்சை எடுக்க வேண்டி வரும்" என்று மறுத்தான். அவன் கூறியதில் உண்மைக்கான எல்லா சாத்தியக் கூறுகளும் இருந்தன.

நடேசனுக்கு இந்த சிகிச்சை தொடங்கியபோது பெரும் நிலச்சுவான்தார்களாய் அவனது அன்புக்குரிய குடும்பம் இருந்தது. இப்போது, யாரும் விலை கோராத பத்து ஏக்கர் நிலம் தான் மிஞ்சியுள்ளது. பதினைந்தாம் வயதிலிருந்தே வீட்டில் ஒரு படுக்கை, ஆஸ்பத்திரியில் ஒரு படுக்கை என உத்தரவாதமாகிவிட்டது அவனுக்கு.

இருபத்திரண்டு வயது நடக்கும்போது வீட்டார் பெண் பார்க்கத் தலைப்பட, முழுவலிமையுடன் மறுத்துவிட்டான்.

பெற்றோர்கள் எப்போதும் அப்படித்தான்... தம் மக்களுக்கு மனநோய் முதல் எவ்வகை நோயாக இருந்தாலும் 'ஒரு குடும்பம்னு ஆயிட்டா எல்லாஞ் சரியாப் போகும்' என்றுதான் நினைப்பார்கள். தம்மைவிட மோசமாக வாழ்ந்துவிட மாட்டார்கள் என்ற எண்ணமோ, என்னவோ!

சந்தியா, மருத்துவமனைக்குள் நுழைகிறபோது, அவன் பாதி உபத்திரவம் நீங்கியவனாவதைப் பெற்றோர் அறிய மாட்டார்கள். அவனது வேதனைகளை, வேதனைகளால் அவன் கனிந்து கொண்டிருப்பதையும்கூட அவர்கள்



## சங்கீதச் சமையலறை



• எஸ்.வி. கிருஷ்ணன்

"விஜயநகரம் வானொலியில் கர்நாடக இசைக் கச்சேரியைப் பிற்பகல் இரண்டரை மணிக்குக் கேட்டுவிட்டு, பாடகரின் முகவரியை முயன்று தேடிப் பிடித்து, சென்னைக்கு வரச் சொல்லி, தன் 'நாத இன்பம்' சார்பாக ராககுதா ஹாலில் பாடச் செய்தவர் எஸ்.வி.கிருஷ்ணன்!" என்றார் பாடகி வேதவல்லி. "தம் அறுபதாம் ஆண்டு விழாவுக்காக ஒதுக்கி வைத்திருந்த பணத்தை, வசதியற்ற குடும்பத்துப் பெண் ஒருத்திக்குத் திருமணம் செய்து வைக்க அப்படியே தூக்கிக் கொடுத்தது பலருக்கும் தெரியாது!" என்றார். நாத இன்பம் அமைப்பைத் தொடங்கி, தமது இல்லத்தின் ஒரு பகுதியையே ராககுதா அரங்கமாக்கி, நல்ல சங்கீதத்துக்கு வாய்ப்பளித்து மகிழ்ந்த எஸ்.வி.கே. மறைவுக்கு அஞ்சலியும் அவ்வரங்கிலேயே நடைபெற்றது.

"தரம் இருந்தால் போதும்; புதிய பாடல் ஆயிற்றே, ரசிகர்கள் வந்து கேட்பார்களோ என்றெல்லாம் தயங்கிக் கொண்டிருக்காமல், துணிந்து 'ராககுதா'வில் பாட வைப்பார் எஸ்.வி.கே. பாட்டில் எந்தெந்த இடம் எல்லாம் பரிமளிக்கவில்லையோ, அதை எல்லாம் முகத்துக்கு நேரே சொல்லியும் விடுவார்!" என்றனர் நாதோபாசனா சீனிவாசனும், திருவான்மியூர் ஆஸ்திக சமாஜம் செயலர் நரசிம்மனும்.

"தம் சொந்தச் செலவில் க்ளீவ்லந்த் இசை விழாவுக்கு இரண்டு இசைக் கலைஞர்களை அந்த நாளிலேயே அழைத்து வந்தவர் எஸ்.வி.கே!" என்றார் க்ளீவ்லந்து சுந்தரம்.

"அப்பாவுக்குச் சங்கீதம்தான் குடும்பம். நாங்கள் எல்லாம் இணைப்பு(அனெக்ஸ்)தான். அவரோட சங்கீத கிச்சன்ல அவரே சமைச்சுப் பரிமாறினார். நாங்கள் எல்லாம் சாப்பிட்டோம். கிச்சனுக்குள்ளேயே போனதில்லை... இனிமேல் போகத்தான் வேண்டும்!" என்றார் எஸ்.வி.கிருஷ்ணனின் புதல்வி ஜெயலட்சுமி. அதைச் சொல்லும்போது அவர் உதட்டில் புன்னகை இருந்தாலும், முகமும் கண்களும் அழுத்தமாகச் சோகத்தை வெளிப்படுத்தின.

- சாருகேசி

முழுவதுமாக அறிய மாட்டார்கள்தான்.

சந்தியா ஒரு முறை நடேசனின் பக்கத்து இருக்கை நோயாளியின் பாதுகாவலரிடம்,

"ரத்தத்துல பொட்டாசியம் அளவு அதிகமாகியிருக்கு. இம்மீடியட்டா இன்ஜெக்‌ஷன் வாங்கிக்கிட்டு வாங்க. அது கொஞ்சம் அதிகமானாலும் ஹார்ட்டுக்கு ப்ராப்ளம்" என்று கூறியபோது, அதற்குப் பிந்தைய தனிச் சந்தர்ப்பத்தில், "ஏங்க, ப்ராப்ளம்னு மட்டும் சொல்லுங்க... ஹார்ட்டுக்கு ப்ராப்ளம்னெல்லாம் ஸ்ட்ரெய்ட்டா சொல்லி அவங்களைப் பயமுறுத்தாதீங்க" என்று கேட்டுக் கொண்டான்.

நடேசனை நோக்கி நடந்து கொண்டிருக்கையிலேயே கடந்த முறை அவன் டிஸ்சார்ஜ் ஆகிப்போவதற்கு முன் நடந்த உரையாடல் சந்தியாவின் நினைவுக்கு வந்தது.

அவனது இயல்பான பேச்சிலும், யதார்த்தமான தொனியிலும் சந்தியாவுக்கு எப்போதுமே ஈர்ப்பு உண்டு. அந்த வியாழக்கிழமை, புதிதாக வாங்கியிருந்த காதணியை மாட்டியிருந்தாள் சந்தியா. அதை நடேசனிடம் காட்டி, "இது எப்படியிருக்கு?" எனக் குதூகலமாக வினவினாள்.

"பொதுவாவே ஆம்பளைங்க நோய்ப் படுக்கைல இருக்கறப்ப பெண்கள் பேரழகாத் தெரிவாங்க. மத்தபடி கண்ணாடில பாக்கறப்ப உங்களுக்கு உங்களைப் பிடிச்சிருந்தா அதுவே போதும்."

"அய்யோ என் அறிவே! பேசாம நானே உங்களைக் கல்யாணம் கட்டிக்கலாம் போல இருக்கே."

ஒரு தற்காலிக உண்மை, பரிவு, புரிதல், வாழ்வின் நீடித்த தன்மை குறித்த பெருமூச்சு, நட்புணர்வின் பால்பட்ட உரிமை, நகைச்சுவைப் பொதிவு அவ்வளவும் கலந்திருந்தன—அவளது வார்த்தைகளில். நடேசன் கொஞ்ச நேரம் அமைதி காத்தான். பனித்தாற் போலத்

தோன்றிய கண்களைப் புறங்கையால் துடைத்துக் கொண்டான். பிறகு இலேசான சத்தத்துடன் சிரித்தான்.

"உங்களுக்கு இந்த யூனிஃபார்மும் வெள்ளை கலரும் ரொம்ப நல்லா இருக்கு. ஆனா முழு நேரமும் வெள்ளை கலர் அவ்வளவு பொருத்தமா இருக்காதுன்னு நினைக்கிறேன்."

சந்தியா, நடேசனுக்கு அருகில் வந்த ஷாலினி, "என்னடி... காலங்கார்த்தால கடலையா?" என்று கேட்டவள்,

"இந்தா ஹேண்ட் ஓவர் புடி!" என்று சிகிச்சை சார்குறிப்புத் தாள்களைத் தந்துவிட்டு நகர்ந்தாள்.

சந்தியா காகிதங்களைப் பார்த்துவிட்டு நடேசனிடம், "ஓ! மீண்டும் உங்களுக்கு ரத்தம் தேவைப்படற டயம் வந்தாச்சு" என்றாள்.

"ஆமாங்க."

நடேசனின் கண்களை ஆழமாக ஊடுருவிப் பார்த்தாள்.

"நான் உங்களுக்கு ஒரு தடவை ரத்தமாவது கொடுக்கறேனே."

"உம். ரொம்ப சந்தோஷம். ரத்தத்துல உங்க ஹீமோகுளோபின் அளவு என்ன?"

"எதுக்குக் கேட்கறீங்க... ஒன்பது."

"இல்ல ஒரு பன்னெண்டு, பதிமூனு இருந்தாலும் பரவாயில்ல... உங்க ரத்தத்தை எனக்குத் தரலாம். நீங்களே இவ்வளவு வீக்கா இருக்கீங்களே... ப்ச்.. நானும் உங்களுக்கு ரத்தம் தர முடியாதவனாயிட்டேன்.."

"சரி, பரவாயில்லை."

"சந்தியா, நீங்க ஆரோக்கியமா இருக்கணும். இன்னும் எத்தனை எத்தனையோ பேர் வரப்போறாங்க. அவங்களையெல்லாம் கவனிச்சுக்க நீங்க நல்லா இருக்கணுமில்லையா... அதனால இப்பவே என் கட்டை அவுத்து வுடுங்க. போய் பேரீச்சம்பழம் வாங்கிட்டு வர்றேன்."

சந்தியா புன்னகைத்தாள். இம்முறையும் நடேசனின் கண்கள் பனித்ததற்கு அதிகமாக எதுவும் நடக்கவில்லை. கலங்கிப் பிரிகிற சுத்திகரிப்புக்குப் பிறகு அவனுக்கு நேர்ந்த உறக்கத்தின் கனவில் சந்தியா வரவேயில்லை. ●



## கவனிக்குமா அரசு?

ஒருங்கிணைந்த திருச்சி மாவட்ட எலுமிச்சை விவசாயிகள், திருச்சி கலெக்டர் அலுவலகம் முன்பு கைதட்டி தங்கள் போராட்டத்தை மேற்கொண்டனர்.

"வருடம் முழுக்க எலுமிச்சை விளைகிறது. ஒவ்வோர் ஆண்டும் பராமரிப்பு மற்றும் இடு பொருள் செலவுகள் ஏறிக்கொண்டே போகின்றன. ஆனால், விவசாயிகளுக்குத்தான் எலுமிச்சைக்குக் கட்டுப்படியாகும் விலை கிடைப்பதில்லை. இதனால் பாதிக்கப்பட்ட சிறு, குறு விவசாயிகள் பலரும் எலுமிச்சை சாகுபடியைக் கைவிட்டு வருகின்றனர். தமிழக அளவில் எலுமிச்சை சாகுபடி செய்யும் பரப்பு படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது. விவசாயிகளிடமிருந்து இருபது, முப்பது பைசாக்களுக்குக் கொள்முதல் செய்யும் வியாபாரிகள், அதனைக் கொள்ளை லாபத்துக்கு விற்கின்றனர். இந்த விலை மோசடியைத் தடுத்து நிறுத்திட காய்கறி, தானியம் மற்றும் இதர பழ வகைகளைப் போல எலுமிச்சைக்கும் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்து, அதனை கிலோ கணக்கில் கொள்முதல் செய்திட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார் தமிழக விவசாயிகள் சங்க மாநிலச் செயலாளர் பெரம்பலூர் ராஜா சிதம்பரம்.

இந்தியாவில் எலுமிச்சை விளைச்சலில் இரண்டாம் இடம் வகிப்பது தமிழ்நாடாம்! வேதனைதான்.

- திருநாவுக்கரசு



"இந்தப் பிச்சைக்காரன் தினமும் வந்து சாப்பாடு கேட்டுத் தொந்தரவு பண்றான்... இன்னைக்கு நான் சமைச்சதை போடறேன்..."

"விட்டுத் தொலை விமலா... அவன் ஏதோ தெரியாம தொந்தரவு பண்ணினதுக்கு இவ்வளவு பெரிய தண்டனை தரணுமா?"

- கே.ஆனந்தன்

# மனைக்குப் பிறந்தது

"அவங்க முப்பாட்டன் காலத்திலிருந்தே ஜவ்வு மிட்டாய் வியாபாரம் தான் செய்றாங்க..."

"ஏன் இவரு மட்டும் தொழிலை மாத்திட்டாரு?"

"இல்லையே.... சீரியல்தானே எடுக்கறார்!"

- 'திருமயம்' பெ.பாண்டியன்





"ஹோட்டல், பார்க், பீச்னு எத்தனை நாள்தான் ஒண்ணா சுத்திக்கிட்டு இருக்குறது?"

"கவலையே படாதீங்க, கல்யாணம் பண்ணிக்கிட்டு தனித்தனியா போயிருவோம்."

- மு.செந்தில்குமார்



‘‘போர் புரிவதில் இள வரசர் எப்படி அமைச் சரே?’’

‘‘பூனைக்குப் பிறந்தது புலியாகுமா மன்னா...!’’

- எம்.எஸ்.வி.அருண்

# புலியாகுமா!

‘‘நூறு பொற்காசுகள் பரிசு அறிவித்துவிட்டு ஐம்பது பொற் காசுகள் தருகிறீர்களே, மன்னா!’’

‘‘புலவரே, நீர் பாடியதும் ரீமிக்ஸ் பாடல்தானே!’’

- எஸ்.தமிழ்மணி





‘‘யாருக்கு அர்ச்சனை பண்ணணும்?’’

‘‘என் கணவருக்கே பண்ணிடுங்க சாமி...’’

‘‘இங்கேயுமா கமலா...!’’

- கே.ஆனந்தன்

# ஆனா... ஆவன்னா!

**முதல்வன்**

எந்தக் கணினியிலும் ஹார்ட்வேர், சாஃப்ட்வேர் பாகங்களை ஒன்றாக இணைத்துச் செயல்படச் செய்யும் அத்தியாவசியமான சமாசாரம் ஒன்று உண்டு. அதன் பெயர், ஓஎஸ் (operating system).

கம்ப்யூட்டரின் இதயம் போன்ற இந்த 'ஓஎஸ்'தான், பொம்மை காட்டுகிற மானிட்டர், டைப் அடிக்கும் கீ போர்ட், மவுஸில் தொடங்கி, கணினியின் சகல பாகங்களையும் அதட்டி விரட்டி வேலை பார்க்கச் செய்கிறது; சாஃப்ட்வேர்களை இயக்கி, கம்ப்யூட்டரைப் பயனுள்ள தாக்குகிறது.

ஐ.பி.எம் நிறுவனத்தினர், தங்களுடைய பர்ஸனல் கம்ப்யூட்டர்களுக்குத் தேவையான ஹார்ட்வேரை அவர்களே தயாரித்துக்கொண்டார்கள். சாஃப்ட்வேர் மென்பொருளை மைக்ரோசாஃப்ட் எழுதித் தந்துவிடும். அப்படியானால், ஓஎஸ்? அது இல்லாவிட்டால், மொத்த கம்ப்யூட்டரும் வெறும் காலிப் பெருங்காய டப்பாவாகிவிடும்!

'பேசாமல், நீங்களே எங்களுக்கு ஓர் ஓஎஸ் எழுதிக் கொடுத்து விடுங்களேன்' என்று மைக்ரோசாஃப்டைக் கேட்டது ஐ.பி.எம். இதற்கு என்ன பதில் சொல்வதென்று புரியாமல் தலையைச் சொறிந்தார் பில் கேட்ஸ். பலவிதமான சாஃப்ட்வேர்களை எழுதி நல்ல அனுபவம் பெற்றிருந்த மைக்ரோசாஃப்டுக்கு, ஓஎஸ் விஷயத்தில் ஆனா, ஆவன்னா கூடத் தெரியாது. இதனால் கேட்ஸ் தர்மசங்கடமான நிலைமையில் சிக்கிக் கொண்டார்.

மைக்ரோசாஃப்டுக்கு ஐ.பி.எம். என்பது மிகப்பெரிய வாடிக்கையாளர், கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கப்போகிற தெய்வம். அவர்களிடம் சென்று, 'எங்களால் இதைச் செய்ய முடியாது' என்று சொல்லத் தயங்கினார். அதே நேரம், ஓஎஸ் விஷயத்தில் ஆழம் தெரியாமல் காலை விடுவதும் ஆபத்து.



• ஊழியர்களுடன் பில் கேட்ஸ்...

# 10 "நீ சொன்ன ஆள் சரியில்லை... நீயே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்!"

நிலைமையைச் சமாளிப்பதற்காக புத்திசாலித்தனமான ஒரு வேலை செய்தார் பில் கேட்ஸ். 'எங்களுக்கு ஓஎஸ் எழுதத் தெரியாது' என்று சொன்னால்தானே தப்பு? அதற்குப் பதிலாக, 'எங்களை விடச் சிறப்பாக ஓஎஸ் எழுதத் தெரிந்த சில கில்லாடிகள் இருக்கிறார்கள்' என்று சொல்லிவிட்டால், நாம் தப்பித்து விடலாம் இல்லையா?

உடனடியாக ஐ.பி.எம்.மைத் தொடர்பு கொண்டவர், 'டிஜிட்டல் ரிஸர்ச்' என்ற வேறொரு நிறுவனத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். இந்த நிறுவனம் தயாரித்திருந்த CP/M-86 என்ற ஓஎஸ், ஐ.பி.எம். பர்ஸனல் கம்ப்யூட்டர்களுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று சிபாரிசு செய்தார்.

ஐ.பி.எம்.மின் கவனம் டிஜிட்டல் ரிஸர்ச் பக்கம் திரும்பிவிட்டால், நாம் ஒழுங்காக சாஃப்ட்வேர் எழுதும் வேலையைக் கவனிக்கலாம் என்பது பில் கேட்ஸின் கணக்கு.

பில்கேட்ஸ் நினைத்ததைப்போலவே, ஐ.பி.எம். பிரதிநிதிகள், டிஜிட்டல் ரிஸர்ச் நிறுவனத்துடன் இது பற்றிப் பேசுவதாக ஒப்புக்கொண்டார்கள்.

'அப்பாடா!' என்று நிம்மதிப் பெருமூச்சுவிட்ட கேட்ஸ், உடனடியாக டிஜிட்டல் ரிஸர்ச் அலுவலகத்தைத் தொலைபேசியில் அழைத்தார். 'நாளைக்குச் சில முக்கியமான பிஸினஸ் புள்ளிகள் உங்களைச் சந்திக்க வருகிறார்கள். தயாராக இருங்கள்' என்றார்.

இந்தத் தொலைபேசி அழைப்புடன் கேட்ஸின் ஓஎஸ் தலைவலி தீர்ந்து விட்டது. இனிமேல், ஐ.பி.எம்.முக்காச்சு, டிஜிட்டல் ரிஸர்ச்சுக்காச்சு... நடுவில் தன் தலையை யாரும் உருட்ட மாட்டார்கள் என்று சந்தோஷமானார்.

ஆனால், மைக்ரோசாஃப்டின் நல்ல நேரமோ அல்லது டிஜிட்டல் ரிஸர்ச் நிறுவனத்தின் கெட்ட நேரமோ... அந்தச் சந்திப்பு வெற்றிகரமாக நடைபெறவில்லை. ஐ.பி.எம். அலுவலர்கள் 'டிஜிட்டல் ரிஸர்ச்' தலைவரைச் சந்திக்கச் சென்றபோது, அவர் வேறு எங்கோ விமானத்தில் பறந்து கொண்டிருந்தார்.

இதனால், அன்றைய கூட்டத்தில் 'டிஜிட்டல் ரிஸர்ச்' சார்பாக இரண்டாம் மட்டத் தலைவர்களே கலந்து கொண்டார்கள். அவர்களிடம் ஐ.பி.எம். எந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டாலும், 'பெரியவரைக் கலந்துகொண்டு சொல்கிறோம்' என்று திரும்பத் திரும்ப எல்லோரும் ஒரே பாட்டையே பாடிக் கொண்டிருந்தார்கள்.

எரிச்சலடைந்த ஐ.பி.எம். பிரதிநிதிகள், எந்த முடிவும் சொல்லாமலே வெளியேறி விட்டனர். நேராக பில் கேட்ஸிடம் வந்தவர்கள், 'நீ சொன்ன ஆள் சரியில்லை. பேசாமல் நீயே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்' என்றார்கள் நேரடியாக.

இதைக் கேட்டதும் பில் கேட்ஸ் திகைத்துப் போய்விட்டார். ஒரு வழியாக ஓ.எஸ். தலைவலி தீர்ந்தது என்று நிம்மதியாக உட்கார்ந்தால், இது என்ன புதுக் குழப்பம்?

ஐ.பி.எம். பர்சனல் கம்ப்யூட்டர்களுக்குப் பொருந்தக்கூடிய ஓர் ஆபரேட்டிங் சிஸ்டம் 'டிஜிட்டல் ரிஸர்ச்' நிறுவனத்திடம் இருந்தது. அதைக் கொஞ்சம் தட்டிக் கொட்டிச் சரி செய்துவிட்டால், அதிக நேரம் செலவிடாமலே ஐ.பி.எம்.மின் புது கம்ப்யூட்டர்களுக்கு ஏற்ற ஓ.எஸ் கிடைத்துவிடும் என நம்பினார் கேட்ஸ்.

ஆனால், அவர் எவ்வளவோ முயன்றும் ஐ.பி.எம்-டிஜிட்டல் ரிஸர்ச் கூட்டணி சரிப்படவில்லை. 'முக்கியமான இந்த ப்ராஜெக்டில், நாங்கள் கண்ட மூன்றாம் நபர்களையெல்லாம் நம்பிக் கொண்டிருக்க முடியாது' என்று தெளிவாகச் சொல்லிவிட்டது ஐ.பி.எம்.

(தொடரும்)

**என்.சொக்கன்**

# டிராஃபிக் சிக்

பிரகாஷ்ராஜ் மட்டும் இருந்தாலே அந்த இடத்தில் கலகலப்புக்குப் பஞ்சம் இருக்காது. கூட ரேவதி, ரோகிணி, சுஹாசினி மூவரும் சேர்ந்தால் கேட்கவே வேண்டாம்... 'மொழி' படம் பார்த்த மாதிரி ஆகிவிட்டது. 'லைட்ஸ் ஆன்' அமைப்பின் சார்பில் இவர்கள் நால்வர் பங்கு பெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சி சென்னை சத்யம் தியேட்டர் வளாகத்தில் நடந்தது. ஏற்பாடு செய்திருந்தவர் பிரசன்னா ராமசாமி. சினிமா முகத்தைக் கழற்றி வைத்துவிட்டு, யதார்த்தமாகத் தங்களைப் பதிவு செய்த நட்சத்திரங்களின் உரையாடலிலிருந்து முக்கியமான சில பகுதிகள் இங்கே...

**ரேவதி :** நான் நடிக்க வந்ததே ஒரு விபத்து. என் முதல் பட ஷூட்டிங்கின் போது, ஹீரோ பாண்டியனுடன் அவ்வப்போது கேஷுவலாகப் பேசுவேன். உடனே எங்கள் இருவருக்கும் காதல் என்று கிசுகிசு எழுதினார்கள். அதைப் படித்துவிட்டு நான் ரொம்பவும் அப்செட் ஆகிவிட்டேன்!

**ரோகிணி :** நான் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவள். முதல் காட்சியில் எஸ்.வி. ரங்காராவுடன் நடித்தேன். அவரது பெரிய மீசையையும், ஆஜானுபாகுவான உருவத்தையும் பார்த்துப் பயந்து விட்டேன். விசித்திரம் என்னவென்றால், கதைப்படி, அவர் என்னைப் பார்த்துப் பயப்பட வேண்டும்.

**சுகாசினி :** பரமக்குடியிலிருந்து வந்த பட்டிக்காட்டுப் பெண் நான். சின்ன வயது



# ...ல் எரிச்சல்!

முதலே எளிதில் என்னைக் கட்டுப்படுத்திவிட முடியாது. எனக்கென்று சில கொள்கைகள் உண்டு. அவற்றை விட்டுக் கொடுத்தால், என் சுய கௌரவம் பாதிக்கப்படும் என்று நினைப்பேன். நான் திரைப்படக் கல்லூரியில் சேர்ந்தபோதும், நடிக்க வந்த பிறகும்கூட, 'எப்படியும் இந்த ஆணாதிக்க உலகில் ஜெயித்து விட முடியும்' என்கிற அசாத்தியமான தன்னம்பிக்கை எனக்குள் இருந்தது. அதேசமயம், நமக்கு எதுவுமே தெரியாதே! எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள வேண்டும்!' என்கிற அடக்க உணர்ச்சியும் இருந்தது.

**ரேவதி :** 'மண் வாசனை' படம் வெளிவந்தவுடனே டைரக்டர்கள் என்னை நடிக்க வேண்டும் என்று கேட்டபோது, படத்தின் கதையைக் கேட்டேன். நான் ஏதோ பேசக்கூடாததைப் பேசிவிட்டதாக நினைத்து அதிர்ச்சியடைந்தார்கள். 'ஹீரோயின்களுக்கெல்லாம் கதை சொல்றது வழக்கமில்லை' என்றபோது, 'கதை கேட்காமல் நடிக்கும் வழக்கம் எனக்கில்லை' என்று அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டேன்.

**சுகாசினி :** விசுவின் படத்தில் எஸ்.வி. சேகருடன் ஒரு காட்சி. என் கணவராக நடித்த அவரது காலைத் தொட்டுக் கும்பிட வேண்டும். நான் நடிக்க மறுத்துவிட்டேன்.

நடிகை ஷோபனா, ஒரு படத்தின் ஷூட்டிங்கில், தமக்குத் தரப்பட்ட உடைகளைப் பார்த்து அதிர்ச்சியடைந்து 'இந்த உடைகளை அணிந்து நான் நடிக்க மாட்டேன்' என்று மறுத்திருக்கிறார்.





அப்போது அந்தப் படத்தின் டைரக்டர் 'உங்களுக்கென்ன சுகாசினி என்று நினைப்பா?' என்று கேட்டாராம்!

**பிரகாஷ்ராஜ்** : அந்தக் காலத்தில் ஹீரோயின்கள் தைரியமாக இருந்தார்கள். எம்.ஜி.ஆர். கத்திச் சண்டை போடும் காட்சியை வெகுநேரம் படம் பிடித்துக் கொண்டிருந்தார்களாம். காத்துக் கொண்டிருந்த பானுமதி, 'எம்.ஜி.ஆர்., நீங்களே எவ்வளவு நேரம்தான் சண்டை போட்டுக் கிட்டிருப்பீங்க. என்கிட்டே கத்தியைக் குடுங்க; நானும் கொஞ்ச நேரம் சண்டை போடறேன்' என்று சொன்னாராம்.

**ரேவதி** : ஒரு கட்டத்தில், நடிப்புக்கு அடுத்து என்னவென்று எனக்குள்ளே கேள்வி எழுந்தது. இளையராஜா இசையமைக்கிறபோதும், பின்னணி இசை சேர்க்கிறபோதும், கிட்டே இருந்து கவனிக்க ஆரம்பித்தேன். சுரேஷுடன் திருமணத்துக்குப் பிறகு கேமரா, இயக்கம் பற்றிக் கற்றுக் கொண்டேன். ஒரு நல்ல ஸ்கிரிப்ட் கிடைத்தபோது, எல்லோரும் பெண்களாக இருக்கும்படி ஒரு யூனிட்டை உருவாக்கி, என் முதல் படத்தை இயக்கினேன்.

**சுகாசினி** : சினிமா உலகில் இருக்கும் ஆண்கள், பெண்களைப் புத்திசாலிகளாக ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். பொது மக்கள்கூட அப்படித்தான்! எனது 'பெண்' சீரியல் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த போது, சென்னையில் நான் டிராஃபிக் சிக்னலில் காத்துக் கொண்டிருந்த நேரம். ஒருவர் என் வண்டியருகில் வந்து, 'பெண் சீரியல் ரொம்பப் பிரமாதம்! நிச்சயமா அதுக்கு நீங்க டைரக்டரா இருக்க முடியாது. உண்மையான டைரக்டர் யார்?' என்று கேட்டு எரிச்சலைக் கிளப்பினார்.

**பிரகாஷ்ராஜ்** : அன்றைய படங்களில் காதலில் இருந்த மெச்சூரிட்டி, இன்றைய படங்களில் மிஸ்ஸானது ஏன்?

**ரேவதி** : அப்போது ஆணும், பெண்ணும் காதலித்தார்கள், காதலில் மெச்சூரிட்டி இருந்தது. இன்றைக்குப் பையனுக்கும், சிறு பெண்களுக்கும்தானே காதல். மெச்சூரிட்டி எப்படி, எங்கிருந்து வரும்?

**சுகாசினி** : வழக்கமாக வயதான ஹீரோக்கள், இளம் ஹீரோயின்களுக்கு ஜோடியாக நடிப்பார்கள். ஆனால் நான், என்னைவிட சில வயது குறைந்த நடிகரின் மனைவியாக நடித்திருக்கிறேன்.

**பிரகாஷ்ராஜ்** : *(சிரித்தபடி)* அவங்க சொல்கிற கணவன் நான்தான்!

தொகுப்பு : **எஸ்.சந்திரமௌலி**
படங்கள் : **ஸ்ரீஹரி**

# யாத்திரை

தனி 3 -Tier கேரேஜ் மற்றும் ரிசர்வேஷன் மூலம் முதல் தரமான சைவ உணவு, தங்கும் வசதிகளுடன் கீழ்கண்ட பயணங்கள் புறப்பட உள்ளன.

16. 03. 07 - 16 நாட்கள் பஞ்சதுவாரகை யாத்திரை
02. 04. 07 - 13 நாட்கள் குலு.மணாலி பயணம்
16. 04. 07 - 20 நாட்கள் காசி யாத்திரை (தனி கேரஜ்)
18. 04. 07 - 12 நாட்கள் டார்ஜிலிங் பயணம்
30. 04. 07 - 13 நாட்கள் நேபாளம் - முக்திநாத் யாத்திரை
13. 05. 07 - 8 நாட்கள் ஆந்திரா பயணம்
26. 05. 07 - 6 நாட்கள் கேரளா பயணம்
09. 05. 07 - 20 நாட்கள் காசியாத்திரை (தனி கேரேஜ்)

மற்றும் அந்தமான் பயணம். -:விபரங்களுக்கு:-

Murali/slm/9362110604

®

**ஸ்ரீஸ்வர்ணாம்பிகை ஆல் இந்தியா டிராவல் கம்பெனி**

( Recognized by the Ministry of Tourism, Government of India )

ஸ்ரீதர் காம்ப்ளக்ஸ், 124/1, டவுன் இரயில்வே ஸ்டேஷன் ரோடு, சேலம் - 636 001

போன்: 0427 - 2450622, 2450633, 2450644, 4051991, வீடு: 2416387

---

# சரோஜா வைத்யநாத ஐயர் பரம்பரை ஜோதிடர்

ஜோதிடத்தில் 50 வருட அனுபவம் கொண்ட

"ஜோதிட வாணி"

**ஸ்ரீமதி சரோஜா வைத்யநாத ஸ்வாமி ஐயர்**

கைரேகை, ஜாதகம், நியூமராலஜி, வாஸ்து, சாமுத்ரிகா லக்ஷணம், திருமணப் பொருத்தம், அனைத்தும் பார்க்கப்படும்.

அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்படும்.

*வெளியூரில் வசிப்பவர்கள் அதிகபட்சமாக 5 கேள்விகள் வரை கேட்க ரூ.500/- கட்டணத்தை முன்னதாகவே அனுப்பவும்.*

V.சரோஜா, 45/18, ஸ்ரீநிவாச ஐயர் தெரு, மேற்கு மாம்பலம்,
அயோத்யா மண்டபம் அருகில்,
பிள்ளையார்கோவில் அருகில் உள்ள தெரு.
Ph: 23716892, Cell: 9444230523, 9444684006, 9444506218

# நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்



**11.3.07 முதல் 17.3.07 வரை**

**மேஷம்:** நன்மையான வாரம். தனம், கல்வி, வாக்கு, நாணயம் மேலோங்கும். திருமணம் கைகூடும். எதிர்பாராத தன யோகம் கிட்டும். ராகு/கேது/சனி/குரு வழிபாடு நற்பலனை உண்டாகும்.

**ரிஷபம்:** திருமணம் கைகூடும். வாக்கு வன்மை மேலோங்கும். கல்வி வளம் மேலோங்கும். ஊதிய உயர்வு ஏற்படும். கடன் தொல்லை விலகும். புதிய தொழில் முயற்சி நற்பலனைத் தரும். ராகு/கேது வழிபாடு நலம் தரும்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் ஏற்படும். புண்ணியத் தலம் செல்ல நேரிடும். உடல் ஆரோக்கியம் சீராகும். வராத கடன்கள் வந்து சேரும். செலவுகள் சுமாரானதாக இருக்கும். குரு/சனி வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

**கடகம்:** சுபகாரியம் கைகூடும். குழந்தை பாக்கியம் கிட்டும். கல்வியில் கவனம் செலுத்தவும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுவது நற்பயனை அளிக்கும். ராகு/கேது/சனி வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

**சிம்மம்:** சற்று முற்போக்கான சூழ்நிலை உண்டாகும் வாரம். காரியம் நடக்கும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். வீடு/மனை வாங்க நல்ல காலம். கொடுக்கல், வாங்கல் சிக்கல் தீரும். புதிய முயற்சி கைகூடும். ராகு/கேது/சனி/ குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

**கன்னி:** மன மகிழ்ச்சியான வாரம். நினைத்தது நடக்கும். திருமண காரியம் கைகூடும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். கணவன் - மனைவி உறவு நன்றாக இருக்கும். சொத்துகள் வாங்க நல்ல காலம். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். குரு வழிபாடு நல்லது.

**துலாம்:** நற்பலன்கள் நிறைந்த வாரம். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். கல்வி வளம் மேலோங்கும். பூர்வீகச் சொத்துகள் பாகப்பிரிவினை ஆகும். வேலை மாற்றம் ஏற்படும். ராகு/கேது/சனி வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

**விருச்சிகம்:** மேன்மையான வாரம். வெளிநாட்டு அழைப்பு வந்து சேரும்.

# பரத்வாஜ் பதில்கள்

**என்** மகனுக்கு எப்போது திருமணம் நடக்கும்?

**- விஜயா, சென்னை**

உங்கள் பையனுக்கு முப்பது வயதில் திருமணம் நடக்கும். மனைவி சாந்த குணம் உடையவளாக அமைவார்.

**என்** மகள் வாழ்க்கை எப்படி அமையும்?

**- பானு, வேலூர்**

உங்கள் மகளுக்கு 2007ல் திருமணம் நடக்கும். சர்ப்பதோஷம் உள்ள வரனாகப் பார்க்கவும். உறவு கிடையாது. வெளிநாட்டில் பணியாற்றும் வரன் அமையும்.


கல்வி வளம் மேலோங்கும். வராத நிலுவை வசூலாகும். திருமண காரியம் கைகூடும். நீண்டகால கடன் தொல்லை விலகும். ராகு/கேது/குரு வழிபாடு நற்பலனைத் தரும்.

**தனுசு:** தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். தடை விலகித் திருமணம் நடக்கும். நீண்டகால கடன் தீரும். நண்பர், உறவினர்களால் ஆதாயம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைப் பளு அதிகரிக்கும். குரு/சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

**மகரம்:** திருமண காரியம் கைகூடும். வீடு/மனை வாங்க நல்ல தருணம். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். குழந்தைகளால் மனசந்தோஷம் கிட்டும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். ராகு/கேது/சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

**கும்பம்:** முன்னேற்றமான வாரம். புதிய தொழில் முயற்சி கைகூடும். நீண்டதூரப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல அபிவிருத்தி ஏற்படும். ராகு/கேது/குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனை அளிக்கும்.

**மீனம்:** மகிழ்ச்சியான வாரம். நீண்டதூரப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். எண்ணிய காரியம் நிறைவேறும். குழந்தை பாக்கியம் கிட்டும். நண்பர் வழியில் ஆதாயம் கிட்டும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல் தீரும். ஆஞ்சநேயர் வழிபாடு நற்பலனை அளிக்கும். ○





ஷார்ப்பான வசனம் எழுதுவது அவரது பலம். சூப்பர் குட் ஃபிலிம்ஸில் தன்னுடைய 'மழைக்காலம்' ஸ்கிரிப்டைக் கொடுத்து டைரக்ஷன் வாய்ப்புக் கேட்டிருந்தார் சாரதி. அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கும்போது தான், 'மனசந்தா நுவே' படத்தைத் தமிழில் 'நித்திக்குதே'வாக எடுக்க முடிவு செய்யப்பட்டது. எனவே, அந்தப் படத்தை இயக்கும் வாய்ப்பை பிருந்தா சாரதிக்குக் கொடுக்க என் அப்பா முடிவு செய்தார்.

தென்காசி உள்ளிட்ட இடங்களில் லோக்கலாக 'தித்திக்குதே' படத்தின் ஷூட்டிங்கை முடித்துக்கொண்டு, ஸ்விட்சர்லாந்துக்குப் போய் ஒரு பாட்டு எடுத்தார் சாரதி. முதல் படமான 'ஆசை ஆசையாய்'க்கு நேரெதிரான

# தளர்ந்து போன தன்னம்பிக்கை!

'மனசந்தா நுவே' தெலுங்குப் படத்தை தமிழில் சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிக்க, நான் நடிப்பதென்று தீர்மானமாயிற்று. இயக்குநர் புதியவர் - பிருந்தா சாரதி. துடிப்பான இளைஞர். ஆனந்தம், ரன், சண்டக்கோழி முதலிய சூப்பர் ஹிட் படங்களை இயக்கிய லிங்குசாமியின் இணை இயக்குநர்.

படம் தித்திக்குதே. எனக்கு மாறுபட்ட அனுபவம். இதிலும் எனக்கு நாசருடன் இணைந்து ஒர்க் பண்ணும் வாய்ப்புக் கிடைத்தது. இப்போதும் நாசர் எனக்கு நடிப்பைப் பற்றி நிறையச் சொல்லிக் கொடுத்தார். என்னாலும் என்னுடைய நடிப்பின் மூலம் முத்திரை பதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையை எனக்கு ஏற்படுத்தினார். 'இந்தப் படம் எப்படியும் ஒரு வெற்றிப் படமாக அமைய வேண்டும்' என்று உள்ளூர ஒரு டென்ஷன் இருந்தது. படம் ரிலீசுக்குத்

# ஒரு வீரன்... சிலையாகி விட்டேன்!

தயாரானதும் என் பயம் அதிகரித்தது. அந்தச் சமயத்தில் 'காதல் கொண்டேன்', 'ஜெயம்' போன்ற படங்கள் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருந்ததுதான் காரணம்.

'தித்திக்குதே' குடும்ப சென்டிமென்ட் படம். நன்றாக வந்திருந்தாலும் எந்த அளவுக்கு மக்களிடையே வரவேற்பைப் பெறும் என்பது பெரிய கேள்விக்குறியாக இருந்தது. ஆனாலும், நடிப்பைப் பொருத்த அளவில் எனக்குப் பரம திருப்தி. ஆனால், சந்தேகப்பட்ட மாதிரியே ரிலீஸானதும் படம் இளைஞர்கள் மத்தியில் பெரிய அளவில் பேசப்படவில்லை. பத்திரிகைகளில் நல்ல படம் என்று பாராட்டினார்கள். சில மாதங்களுக்குப் பிறகு அந்தப் படம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானபோது, பார்த்த பலரும் என் நடிப்பையும் படத்தையும் மிகவும் பாராட்டினார்கள். என் இரண்டாவது படமும் பெரிய அளவில் பேசப்படாமல் போனதில் மிகுந்த வருத்தம் எனக்கு.

சினிமா உலகம் ரொம்பவும் சென்டிமென்ட்டானது. அடுத்தடுத்து இரண்டு படங்கள் வெளிவந்து வெற்றி பெறாமல் போனால், 'ராசி இல்லாத ஹீரோ' என்று முத்திரை குத்திடுவார்கள். அடுத்து நம்முடைய நிலைமை என்ன, இனிமேல் நமக்கு சினிமா வாய்ப்பு வருமா என்ற எண்ணமே திரும்பத் திரும்ப என் மனதில் ஓடியது. போதாக்குறைக்கு, என்னைப் பார்க்கிற என் அப்பாவின் நண்பர்கள், என்னுடைய நண்பர்கள், உறவினர்கள் எல்லோரும் 'கவலைப்படாதே! அடுத்த படம் கண்டிப்பாக வெற்றிபெறும்; உனக்கு நல்ல எதிர்காலம் அமையும்' என்று சொன்னார்கள். அது எனக்குத் துக்கம் விசாரிப்பது போலவும் இருந்தது; ஆறுதல் சொல்வது போலவும் இருந்தது. மொத்தத்தில் என்னுடைய தன்னம்பிக்கை தளர்ந்தது. என்



## 10 ஆக்ஷன் ஸ்டார் ஜீவா

முகத்தில் ஒருவித சோகம் குடி கொண்டது. திடுதிடு வென்று ஓட்டப்பந்தயத்தில் ஓடிக் கொண்டிருந்த ஒரு வீரன், திடீரென்று சிலையாகிப்போன உணர்வில் தவித்தேன்.

''அடுத்து என்ன பண்றதுன்னே தெரியலை அம்மா!'' என்று நான் வருத்தப்பட்டுச் சொன்னபோது, ''பேசாமல் பத்து நாள், வேறு ஊர் எதற்காவது போய்விட்டு வா'' என்றார் அம்மா. நானும் என் நண்பர்கள் ஐந்தாறு பேருடன் டெல்லிக்குப் போனேன். அங்கே இன்னும் சில நண்பர்கள் சேர, அப்படியே சண்டிகர் போனோம்.



அங்கே என்னை மிகவும் ஆச்சரியப்பட வைத்தது 'ராக் கார்டன்'. சண்டிகர் நகரை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகித்த இன்ஜினியர் ஒருவர், வீண் என்று தூக்கி எறியப்பட்ட பொருட்களைப் பயன்படுத்திப் பல கலை நயமான உருவங்களை அந்தப் பூங்காவில் உருவாக்கி இருக்கிறார். சுமார் நாலைந்து மணி நேரம் அந்தப் பூங்காவில் சுற்றிவிட்டு வெளியே வர, 'இந்த உலகில் வேஸ்ட் என்று எதுவுமில்லை; எல்லாவற்றுக்கும் ஒரு உபயோகம் உண்டு' என்று பாசிட்டிவான எண்ணம், என் மனதில் ஏற்பட்டது. தொய்ந்து போயிருந்த என் தன்னம்பிக்கை, ததும்பி வழிந்தது.

சண்டிகரிலிருந்து சிம்லாவுக்குப் போனோம். சிம்லாவின் குளிர்ந்த கிளைமேட் என மனசை இலேசாக்கியது. ஏழெட்டு நாட்கள் ஜாலியாகச் சுற்றிவிட்டு, டெல்லியிலிருந்து புறப்பட்டோம். ரயிலின், இரண்டாம் வகுப்பில் சென்னை திரும்பிய போது, சக பயணிகளில் பலரும் தமிழ்நாட்டுக்காரர்கள். பலரும் என்னை அடையாளம் தெரிந்துகொண்டு பேசினார்கள். மீண்டும் சென்னை திரும்பியபோது, 'அடுத்த படம் எப்படியும் ஒரு அதிரடி ஹிட் படமாக இருக்க வேண்டும்; சூப்பராக ஒரு கதை தேட வேண்டும்' என்று தீவிரமானேன்.

சூப்பர் குட் ஆபீசுக்குப் புதிய டைரக்டர்கள் நிறைய பேர் வந்து வாய்ப்புக் கேட்பார்கள். அவர்கள் சிலரிடம் கதை கேட்டேன். நான் எதிர்பார்த்துக் காத்திருக்கும் 'ஸ்பார்க்' எனக்குக் கிடைக்கவில்லை. ராம்ஜி என்று ஒரு கேமராமேன். அவருடைய ஒர்க் எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் பணியாற்றிய 'மௌனம் பேசியதே' படத்தை நான் மிகவும் ரசித்துப் பார்த்தேன். அவரை ஒருமுறை சந்தித்த போது, 'மௌனம் பேசியதே' படத்தைப் பாராட்டியதுடன், அந்தப் படத்தின் இயக்குநரான அமீருக்கு என் பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கும்படி கூறினேன். அப்போது, ராம்ஜி எனக்கு அதுவரை தெரியாத ஒரு விஷயத்தைச் சொன்னார். எனக்கு அது இன்ப அதிர்ச்சியாக இருந்தது.

(பேசுவேன்)

படம்: **பொள்ளாச்சி சுந்தரம்**

அருள்வாக்கு

# வாக்கும் மனசும்...

பூரண அஹிம்சைக்கு நமது சாஸ்திரத்திலேயே சில விலக்குகள் இருக்கின்றன. தர்மத்துக்காக யுத்தம் செய்யும்போதும், யாக யக்ஞங்களில் பலி தருகிறபோதும் அஹிம்சைக்கு விலக்குத் தரப்பட்டிருக்கிறது. சத்தியத்துக்கு இவ்விதமாக விலக்கே இருக்க முடியாது என்று நினைப்பீர்கள். ஆனால் சத்தியத்துக்கும் வேறொரு விதத்தில் விலக்கு இருக்கிறது.

ஊரிலே பலவிதமான அயோக்கியர்கள் இருக்கிறார்கள். அதைப் பார்த்து இயல்பாகவே ஒருவனுடைய மனசு கொதிக்கிறது. அவன் அந்தத் தப்பையெல்லாம் ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறான். 'அவன் அந்த அயோக்கியத்தனத்தைச் செய்தான்; இவன் இந்த அயோக்கியத்தனத்தைச் செய்தான்' என்று சொல்லிக்கொண்டே இருக்கிறான். இவனுக்கு வாக்கும் மனசும் ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், இவன் இப்படிச் சொல்வதால் இவனுக்கும் பிரயோஜனமில்லை; ஜனங்களுக்கும் பிரயோஜனமில்லை; தப்பு செய்கிறவர்களுக்கும் பிரயோஜனமில்லை. இப்படி வியர்த்தமாக வாக்கும் மனசும் ஒன்றுபட்டிருப்பதை சத்தியம் என்று சொல்வதற்கில்லை.



ஒருவன் மனசில் கெட்ட எண்ணங்கள் எழுகின்றன. அதை அவன் அப்படியே வாக்கிலே வெளியிடுகிறான். அது சத்தியமாகிவிடுமா? ஆகாது.

ஆகவே சத்தியம் என்றால் வாக்கும் மனசும் ஒன்றுபடுவது மட்டுமல்ல... நல்ல மனசிலே தோன்றுகின்ற நல்ல எண்ணங்களை வாக்கில் சொல்வதே சத்தியம். நல்ல விளைவுகளை உண்டாக்குவதே சத்தியம். மக்களுக்கு நன்மை பயப்பதாகவும் பிரியமாகவும் எது இருக்கிறதோ அதுவே சத்தியம்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

சிறுகதை

# பங்கஜ பவன்

பிறந்த ஊரான பாலக்காட்டுக்குப் பக்கத்தில், திருவோண விருந்தில் இலையோரம் வைக்கிற நேந்திர வறுவல் மாதிரி, கொஞ்சமாய்ப் பூர்வீகச் சொத்து உண்டு எனக்கு. இருபது பறை நெல் வயல், ஓடுபோட்ட ஒரு சின்ன களப்புரை வீடு. குத்தகைக்காரர்கள் பார்த்துக் கொள்கிறார்கள். ஆனாலும் விதைப்பு, அறுப்பு என்று முக்கியமான சமயங்களில் அங்கே போய் இரண்டொரு நாள் நேரடியாகப் பார்க்காவிட்டால் தூக்கம் பிடிக்காது.

அப்படி அங்கே போய்த் தங்குகிற சமயங்களில் காலைச் சிற்றுண்டிக்குக் கண்டிப்பாக பங்கஜ பவன் போய்விடுவேன். ஐம்பது வருஷமாய் நடந்து வருகிற நாணா ஐயர் ஓட்டல். பத்து வயற்காடு தள்ளி வசிக்கிற



தங்கச்சி ராஜாத்தி வீட்டிலிருந்து அழைப்பு வரும்; போக மாட்டேன். காரணம், பங்கஜ பவன் பருப்பு வடையின் ஈர்ப்பு. மற்ற இடங்களில் 'மசால் வடை' என்று அறியப்படுவதுதான் பாலக்காடு வழக்கில் பருப்பு வடை.

நானும் நிறைய இடங்களில் வடை சாப்பிட்டிருக்கிறேன். ஆனால் பங்கஜ பவன் பருப்பு வடை முன்னால் அதெல்லாம் சாதாரணம். மசாலா வாடை தூக்கலாக இல்லாமல், நொறுநொறுவென்று, அரிந்த பச்சை மிளகாய், சின்ன வெங்காயம், கறிவேப்பிலையோடு எண்ணெய் கோக்காமல் மொறுமொறுப்பாய்...

சின்னப் பையனாக அப்பாவுடன் சைக்கிள் தண்டில் உட்கார்ந்து வந்து இங்கே சாப்பிட்டது இன்னமும் நினைவிருக்கிறது. இன்றும் அதே குணம், அதே மணம். கடை கூட அன்று போலவேதான், பஞ்சாயத்து ஆபீஸ் மாதிரி சின்னதாய்.

**“ரிடையராகி நிம்மதியாக உட்காராமல் ஏனிந்த அலைச்சல்?”**



# பாசம்...

## முத்துராஜன்

சரியாக ஒன்பதரை மணிக்குமேல் பத்து மணிக்குள்ளாக பங்கஜ பவனில் ஆஜராவது என் வழக்கம். டி.வி. நிகழ்ச்சி மாதிரி எதற்கு இப்படி ஒரு டைம் ஸ்லாட்...? அந்த நேரத்தில்தான் ஐயர் கடையில் இட்லி, தோசை நடமாட்டம் குறைந்து, வடை தயாரிப்புத் தொடங்கும். இரண்டு இட்லி, இரண்டு வடை, மேலாக தேங்காய் வறுத்து அரைத்த கமகமக்கிற சாம்பார். சாப்பிட்டு முடிக்கும்போது அன்றைய பொழுது சுபிட்சம்!

வெயில், மழை பாராமல் வரப்பிலும், களத்து மேட்டிலும் வேலையாட்களுடன் மல்லுக்கு நிற்கிற இம்சையெல்லாம் கூட மறந்து போகும். இந்த கேரள பூமியில் நிலச் சொந்தக்காரன் சபிக்கப்பட்டவன். இங்கே விவசாயத் தொழில் செய்வதற்குப் பதில் சவுதிக்குப் போய் ஒட்டகம் மேய்க்கலாம். முதலாளி வேலையாட்களிடம் தாங்கித் தணிந்து போக வேண்டும். கொஞ்சம் அதட்டிப் பேசினால் வரப்போரம் செங்கொடி பறக்கும், ஜிந்தாபாத் ஒலிக்கும்.

இத்தனை பாடுபட்டு இரண்டு போகம் விளைச்சல் முடித்து வருஷக் கடைசியில் கணக்குப் பார்த்தால் வெட்கக்கேடு; எங்கள் பெங்களூர் வீட்டில் ஒரு மாதத்துக்கான மேல்செலவுக்குக் கூட காணாது!

என்னுடைய இந்த பாலக்காட்டுப் பயணமும், விவசாயப் புரட்சியுமெல்லாம் என் பிள்ளை சஷாங்களுக்கு அறவே பிடித்தமில்லை. அவன் கம்ப்யூட்டர் இன்ஜினீயர் . வருஷத்தில் இரண்டு முறையாவது வெளிநாட்டுக்குப் பயணிக்கிற உத்தியோகம். அவ்வப்போது அம்மாக்காரியிடம் தன் குமைச்சலைக் கொட்டுவான்.

“ரிடையராகி நிம்மதியாக உட்காராமல் அப்பாவுக்கு இந்த அலைச்சலெல்லாம் தேவைதானா? ஆஞ்ஜியோ

பண்ணிக் கொண்டவர், கவனமா இருக்க வேண்டாமா? பூமியை ராஜாத்தி அத்தையிடம் பார்த்துக்கச் சொன்னால் ஆச்சு... இல்லேன்னா, கிடைக்கிற விலைக்கு வித்துடச் சொல்லு."

நானும் பதிலுக்கு உறுமல் போட்டு அவர்கள் வாயை மூடுவேன்.

பிறந்த மண்ணோடு இந்த வயலும் ஓட்டு வீடும் ஒரு பாசக்கயிறு போலக் கட்டிப் போட்டிருக்கிறது என்னை...

**வ**ழக்கத்துக்கு மாறாக அன்று சற்று முன்னதாகவே பங்கஜ பவனுக்குப் போய் விட்டேன்.

கல்லாவில் ஐயரின் பிள்ளை ரமணி உட்கார்ந்திருந்தான். "ஓ... திருவாதிரை... நாற்று வேலைக்கு வந்தாயாக்கும். ஒக்காரு, வடை ரெடியாக ஒரு அஞ்சு நிமிஷம் தாமதமாகும்" என்று சொல்லி 'மாத்ருபூமி'யைக் கையில் தந்தான்.

ரமணியும் நானும் கல்லூரி வரை ஒன்றாகப் படித்தவர்கள். வெளியூருக்குப் போய் உத்தியோகம் பார்க்கிற ஆசை ரமணிக்கும் இருந்தது. ஆனால், ஐயர் பங்கஜ பவனுக்குள் இழுத்துப் போட்டுக் கொண்டார்.

தாழ்வாரத்து நாற்காலியில் உட்கார்ந்து மாத்ருபூமியைப் புரட்டிக் கொண்டிருந்த போது, வெளியே கார் ஒன்று வந்து நிற்பது தெரிந்தது. கதவு திறந்துவிட்ட டிரைவரைத் தாங்கலாகப் பிடித்தபடி கைத்தடியின்றி கடைக்குள் நுழைந்தார் நாணா ஐயர். கல்லாவிலிருந்து இறங்கிய ரமணி, வழக்கம்போல சட்னி சாம்பார் தூக்கை எடுத்துக்கொண்டு சமையல் பகுதிக்குள் நுழைந்தான். இனி மத்தியானம் எழுந்துபோகிறவரை ஆட்சி ஐயர் கையில்.

"அம்மே நாராயணா" என்று முனகலோடு குருவாயூரப்பன் படத்தை நமஸ்கரித்துவிட்டு கல்லாவில் உட்கார்ந்தார் ஐயர். வெண் பஞ்சு நரை, நெற்றியில் சந்தன கோபி, தங்க ருத்ராட்சம்... கனிந்த பழம் போன்ற தோற்றம். முன்னைக்கு இப்போது தளர்ச்சி அதிகமாகியிருந்தது.



"ஆச்சா... போச்சான்னு இருந்த அந்த பேஷண்ட், நம்ம டாக்டர் ஆபரேசன் பண்ணின பிறகு பொழைச்சுட்டார்!"

"டாக்டரோட 'பாச்சா பலிக்க'லேன்னு சொல்லு!"


- சி.சண்முகம்


பல், நகமெல்லாம் உதிர்ந்த பின்னும் தள்ளாட்டத்துடன் வேட்டைக்கு இறங்கின கிழட்டுச் சிங்கம் மாதிரி... இன்றைக்கு இருக்கிற வசதிக்கு ஐயர் இப்படி இங்கே வந்து அவஸ்தைப்பட வேண்டியதில்லைதான். நூறு பறை பூமி, பத்தாய வீடு, டவுனில் வாடகை வருமானம்... எல்லாம் பங்கஜ பவனில் சம்பாதித்ததுதான்.


"இன்னும் கொஞ்சம் சாம்பார் போடவா?" என்றபடி முன்னால் நின்ற ரமணியிடம் "போடேன், சாம்பார் இன்னைக்கு சூப்பர்" என்றேன்.

"பெரியவர்கிட்டே சொல்லிட்டுப் போ; சாம்பார் 'சப்பு'ன்னு இருக்குதாம், 'பங்கஜ பவன் பேரைப் பாழாக்கிடாதேடா பாவி'ன்னு பொரிஞ்சுக்கிட்டு இருக்கார்."

ஐயரைப் பார்க்கும்போது அவர் கல்லாவில் உட்கார்ந்திருப்பது காசு கணக்குப் பார்ப்பதற்காக அல்ல என்பது தெளிவாய்த் தெரிந்தது. ●







## ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்

ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501. திருவாரூர் மாவட்டம்.

# ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா

அன்புடையீர்,

நிகழும் அவ்யய வருஷம் பங்குனி மாதம் 22-ஆம் தேதி வியாழக்கிழமை (5.4.2007) ஸ்வாதி நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் **ஸர்வாங்க ஸுந்தரீ உடனுறை ஸ்ரீ ஸற்குணேச்வரப் பெருமானுக்கும், மற்ற பரிவார தேவதைகளுக்கும்** 10-ஆம் ஆண்டு ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா இறையருள், குருவருள் துணை கொண்டு கீழ்க்கண்ட நிரலின் வண்ணம் நடைபெற இருக்கிறது. இறையன்பர்கள் அனைவரும் பங்கு கொண்டு பேரருள் பெற வேண்டுகிறோம். நன்கொடைகளைப் பணமாகவோ அல்லது பொருளாகவோ அளிக்க விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரிகளுக்கு அனுப்பக் கோருகிறோம்.

### ஸம்வத்ஸராபிஷேக நிகழ்ச்சி நிரல் (05.04.2007வியாழன்)

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 7.00 | மணி | - | கோபூஜை |
| " | 7.30 | மணி | - | புண்யாஹவசனம், அனுக்ஞை, மஹா ஸங்கல்பம் |
| " | 8.00 | மணி | - | ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், கலச ஸ்தாபனம், ஸ்தபன பூஜை |
| " | 9.00 | மணி | - | நவக்ரஹ ஹோமம் |
| " | 10.00 | மணி | - | ஜபம் - பாராயணம், பூஜை - ஹோமம் |
| பிற்பகல் | 12.00 | மணி | - | பூர்ணாஹுதி |
| " | 12.30 | மணி | - | மஹாபிஷேகம் |
| " | 1.30 | மணி | - | ஸ்வாமி, அம்பாளுக்கு அர்ச்சனை, மஹா தீபாராதனை |

இங்ஙனம்

*Dr. V. கிருஷ்ணமூர்த்தி*
*பரம்பரை அறங்காவலர்*
*ஸ்ரீ ஸற்குணேச்வரர் திருக்கோயில்*

*பொன். சிவசங்கரன் M.A.*
*நிர்வாக அதிகாரி*

ஸ்ரீ ஸற்குணேச்வரர்
கைங்கர்ய ஸபா (Regd).
மற்றும் கிராமவாசிகள்

**நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரிகள்**

G. கண்ணன்,
D/127-A, ராஜமன்னார் சாலை,
கே.கே.நகர்,
சென்னை -78.
போன்: 044-24836495

V.L. நாராயண சாஸ்திரிகள்,
25/1 கப்பாரெட்டித் தெரு,
எஸ்.என்.ஆர்.கன்ஸ்டிரக்ஷன்ஸ்,
சென்னை - 600 033.
போன்: 044-24897125

G. குஞ்சிதபாதம், ஆடிட்டர்
G. நடேசன் & கம்பெனி
டபீர் மேலத்தெரு,
கும்பகோணம்-612 001
போன்: 0435 2420047

வாரம் ஒரு பாசுரம்

'ஓர்மை' என்ற சொல் மலையாளத்தில் 'ஞாபகம்' என்ற அர்த்தத்தில் இன்றும் பயில்கிறது. 'ஓர்மையுண்டு' என்றால் நினைவிருக்கிறது என்று பொருள். 'ஓர்தல்' என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து வந்திருக்கலாம். ஓர்தல் என்றால் 'ஆராய்ந்து அறிதல்'. திருமழிசை ஆழ்வார் நான்முகன் திருவந்தாதியில் இந்தச் சொல்லைப் பொருத்தமாகப் பயன்படுத்தியுள்ளார். அந்தாதி வடிவில் தொண்ணூற்றாறு அற்புதமான நேரிசை வெண்பாக்களைக் கொண்டது. கருத்துச் செறிவும் பக்தியும் மிக்கது. அந்தாதி உண்மையில் ஒரு சொல்மாலை. பூக்களைக் கோப்பது போலப் பாக்களைக் கோத்துச் செய்யப்பட்ட வட்டம். ஒரு பாட்டின் முடிவில் அடுத்த பாட்டின் ஆரம்பச் சொல் இருக்கும். கடைசிப் பாட்டின் கடைசிச் சொல், முதற்பாட்டின் முதல் சொல்லாக இருக்கும். நான்முகன் திருவந்தாதியில் முதல் பாசுரம் 'நான்முகனை நாராயணன் படைத்தான்' என்று துவங்கும். தொண்ணூற்றாறாவது பாடல் 'நன்கு அறிந்தேன் 'நான்' என்று முடியும். இதில் ஒரு பாடலை இந்த வாரம் பார்க்கலாம்.

தேருங்கால், தேவன் ஒருவனே என்று உரைப்பர்;

# இறுதியில் அவன்தான்!

சுஜாதா

ஆரும் அறியார் அவன் பெருமை; ஓரும்
பொருள் முடிவும் இத்தனையே; எத் தவம் செய்தார்க்கும்
அருள் முடிவது ஆழியான்பால்.

(தேருங்கால் - ஆராயும்போது, ஆழியான் - சக்கரத்தைக் கையில் வைத்திருப்பவன் அல்லது கடலில் துயில்பவன் - திருமால்)

ஆராய்ந்து பார்க்கும்போது தேவன் ஒருவனே என்று சொல்வார்கள். யாரும் அவன் பெருமையை அறிய முடியாது. எப்படி ஆராய்ந்தாலும் இந்த முடிவுக்கு வந்தே தீர வேண்டும். என்ன தவம் செய்தாலும் இறுதியில் அருள் கிடைப்பது திருமாலிடம் மட்டுமே.

திருமழிசை ஆழ்வார் இவ்வந்தாதியின் கடைசிப் பாடலில் நாராயணனை 'காரணன் நீ, கற்றவை நீ, கற்பவை நீ' என்கிறார். இதுவரை கற்றதும், இனிமேல் கற்கப் போவதும் நாராயணனே எனக் கருதும் இவருக்கு அருள் முடிவும் அவன்தான் என்பது தவிர, வேறு எந்த முடிவுக்கு வரமுடியும்?

(படிக்கலாம்)


# ஆராய்ந்து பார்க்கும்போது தேவன் ஒருவனே!



ஸ்ரீ பரமனார் தூண்டிக்காரர் துணை



ஜோதிஷ, வாஸ்து, பெயரியல் நிபுணர்



**Srimathi V.AKILANDESWARI M.A., M.Phil., Dip (Astrology)**

புலிப்பாணி 300 என்ற தலைப்பில் (ஜோதிடவியல் ஆய்வு) (M.Phil.,M.K.U) செய்த முதல் பெண் மாமேதை

## தேவி ஸ்ரீ ராஜராஜேஸ்வரி உபாஸகர்

✳ கைரேகை ✳ ஜாதகம் ✳ எண்கணிதம் ✳ பெயரியல் ✳ வாஸ்து

✳ திருமணம் பொருத்தம் ✳ முகூர்த்த நிர்ணயம் முதலிய ஆலோசனைகளுக்கும்

தொழில், வியாபாரம், உத்தியோகம் இவை மேன்மை அடையவும், கிரக தோஷம், மனை தோஷம், வாஸ்து தோஷம் மற்றும் திருமண தடைகள் விலகவும், உடல் மற்றும் மனரீதியான கோளாறுகள் நீங்கவும், எதிரிகளின் தொல்லைகள், துர்சக்திகள் விலகவும் நிவர்த்தி பூஜைகள் மற்றும் ஹோமங்கள் செய்விக்கப்படும்.

## ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஜாதகாலயா

4/33, வேலு தெரு, (ராஜகோபாலன் தெரு நுழைவாயில் & ஜூப்ளி ரோடு பிள்ளையார் கோயில் கட்டிங்) மேற்கு மாம்பலம், சென்னை–33.

செல் : 9444151597, 9340001997 போன் : 23711068, 24741969, 32912002

வெளியூர் நபர்கள் தங்கள் ஜாதக நகல்களுடன் கேள்விகளை தெளிவாக எழுதி ரூ.300/- D.D. / M.O. வுடன் சுயவிலாசமிட்ட தபால் தலை ஒட்டப்பட்ட கவருடன் கடித தொடர்பு கொள்ளவும்.

---

## சரியான முதலீடு

BLB

PLEDGED TO ETHICS

## விலையேற்றம் மற்றும் குடியேற்றம் இரண்டுக்கும் உகந்த முதலீடு

## ஸ்ரீமத் ராமானுஜர் டவுன்

### வண்டலூர்

### (DTCP Approved Housing Plots)

வண்டலூர் – பழைய மகாபலிபுரம் ரோடு மார்க்கத்தில் அமைந்துள்ள மிகப் பெரிய வீட்டுமனைப் பிரிவு.

குறுகிய காலத்தில் பன்மடங்கு விலையேறும் வாய்ப்பு லட்சுமி குபேரர் கோயில் அருகில்

### ஸ்ரீ பத்மநாபா அவின்யூ

**காஞ்சிபுரம்**

சென்னை - பெங்களூர் NH மற்றும் காஞ்சிபுரம் டவுனிலிருந்து 5 நிமிட பயணம். அருகிலேயே வீடுகள்

**போன்**
2834 5104 / 5 / 6 / 7
93805 59482
98406 22308

**BLB Estates (P) Ltd.**
SREE AUDISESHA BHAVAN
(Opp. Hotel Accord Metropolitan, G.N. Chetty Road & Opp. Kamarajar Illam, Thirumalai Pillai Road)
No. 21, Chinnaiah Street, T.Nagar, Chennai - 600 017.
E-mail : blbestmail@vsnl.net Web : www.blbestates.com

குறும்படம்

# அரசின் காதில் சங்கு!

இதயத்தைக் கனமாக்குகின்றன காட்சிகள்... கண்களைக் குளமாக்குகின்றன பெற்றோர்களின் கதறல்கள்... முடிவில், 'இது ஏன்? ஏன்? ஏன்'? என்ற நெடிய வினா மனத்தை அழுத்துகிறது. அறுபது நிமிட ஆவணப் படம் - 'என்று தணியும்'. கும்பகோணம் 'ஸ்ரீ கிருஷ்ணா' பள்ளியில் தொண்ணூற்று நான்குப் பிஞ்சுகள் தீக்கிரையானதை மையமாகக்கொண்டு இயக்கியிருக்கிறார் பாரதி கிருஷ்ணகுமார். ஒவ்வொரு பள்ளியும்



• பாரதி கிருஷ்ணகுமார்



• குறும்படக்...



• ... காட்சிகள்!

குழந்தையொன்றுக்குச் சராசரியாக ஒன்பது சதுர அடி இடம் கொடுக்க வேண்டும் என்று பள்ளி விதிகள் கூறுகின்றன. ஆனால் உண்மை..? தீப்பெட்டிகளை அடுக்கி வைத்ததுபோன்ற பள்ளிக் கட்டடங்கள்... காற்றும், சூரிய வெளிச்சமும் அறிந்திடாத அறைகள்... நெருக்கியடித்து உட்கார்ந்து கொண்டிருக்கும் மாணவக் கூட்டங்கள் என இந்தியா முழுவதிலும் ஆரம்பப் பள்ளிகளின் நிலை இதுதான். காரணம் கேட்டால் 'உயர் நிலைக் கல்விக்கு ஒதுக்கப்படும் நிதிபோல் ஆரம்பக் கல்விக்கு அரசு தருவதில்லை' என்கிறர் கல்வியாளர் வசந்திதேவி.

கல்வித்துறை, பள்ளிகள் இயங்குவதற்கு ஐம்பது விதிகளை வகுத்துள்ளது. அத்தனையையும் உள்ளடக்கிய பள்ளிகள் மிகச் சொற்பமே. இந்த ஆவணப் படத்தில் குடந்தைத் தீ விபத்து தவிர, 1964-ல் மதுரை சரஸ்வதி பள்ளிக் கட்டடம் இடிந்து முப்பத்தைந்து மாணவிகள் நசுங்கி இறந்தது. ஜனவரி 2007-ல் புதுக்கோட்டை மாவட்ட தனியார் பள்ளியின் மேற்கூரை நொறுங்கி விழுந்து இருபத்தேழு குழந்தைகள் படுகாயமுற்றது. குஜராத், திருச்சூர் புரா பள்ளிச் சிதிலமடைந்ததில் பழங்குடியின மாணவிகள் பதினான்கு பேர் மாண்டது எனப் அவல நிலைகள் தோலுரித்துக் காட்டப்படுகின்றன.

"இந்தச் சமூகமும், நம்முடைய அரசும்தான் இவற்றுக்கெல்லாம் முழுப் பொறுப்பு. தனக்கு நேர்ந்தால் துயரம்; அடுத்தவருக்கு நேர்ந்தால் அன்றையச் செய்தி என்கிற இழிவான குணம் இந்தச் சமூகத்திடமிருந்து விலக வேண்டும். மதுக் கடைகளை தேசியமயமாக்கிவிட்டு, ஆரம்பக் கல்வியைத் தனியாருக்குத் தாரை வார்த்த அரசின் காதில் சங்காக இந்தப் படம் விழ வேண்டும்" என்று உணர்ச்சி பொங்கப் பேசுகிறார் டைரக்டர் பாரதி கிருஷ்ணகுமார்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

# வீடு வாங்கப்

நிலம், வீடு வாங்க ஆசை கொண்டவர்களின் எண்ணிக்கை எந்த வேகத்தில் பெருகி வருகிறதோ, அதே வேகத்தில் இந்த முயற்சியில் ஏமாந்தவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

''பயப்பட வேண்டியதில்லை. இடைத் தரகர்களை நம்பி மோசம் போகாமல் சரியான ஆட்களைத் தேர்வு செய்து அணுகினால் எந்தப் பிரச்னையும் நேராது'' என்கிறார் ரியல் எஸ்டேட் துறையில் பல வருடங்கள் அனுபவம் பெற்ற 'வைப்ரேஷன் மீடியா'வின் இயக்குநர் ஹரிஹரன். வீடோ, நிலமோ வாங்கும் முன் பின்பற்ற வேண்டிய அடிப்படை நடைமுறைகள் என்னவென்பதை நம்மிடம் விளக்கினார் ஹரிஹரன்.


- நிலமோ, வீடோ குறைந்த விலைக்கு வந்தாலே உஷாராகிவிட வேண்டும். ஏன், எதற்கு, எப்படி என்று ஆயிரம் கேள்விகள் கேட்டுத் துளைத்தெடுக்க வேண்டும். அடுத்தவர் தவறாக நினைத்தாலும் பரவாயில்லை; அதிக முதலீடு செய்யும்போது கேள்வி கேட்டுத் தெளிவு பெற்றே ஆக வேண்டும்.
- தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் மூலம் அலசி, ஆராய்ந்து நம்பகத்தன்மை நிறைந்த ரியல் எஸ்டேட்காரர்களை அணுகலாம்.
- விற்கப்படும் இடம் யாருக்குச் சொந்தம், சட்டச் சிக்கல்கள் ஏதேனும் உள்ளனவா என்பதை அறிய வில்லங்கச் சான்றிதழ் அவசியம் வாங்க வேண்டும். அதனை கிராம நிர்வாக அலுவலர் (வி.ஏ.ஓ.) மூலமாக, வட்டாட்சியர் அலுவலகத்தில் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் பெறலாம்.



• நிலோஃபர், தாரிக் அகமத்

## பொம்மை அல்ல, உண்மை!

விமானப் பயிற்சிக் கல்லூரியான ஹெச்.ஐ.ஏ.டி., மாணவர்களின் திறனை வெளிப்படுத்த முதன் முறையாக கண்காட்சி ஒன்றை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது. உலகத் தரத்தில் இயங்கும் விமானங்களைப் போலவே தோற்றமளிக்கும் குட்டி விமானங்களைத் தயாரித்து, அவற்றைப் பறக்க வைத்துக் கண்காட்சியில் அசத்தினார்கள் மாணவர்கள்.





● வாங்கும் இடத்தை சர்வேயரைக் கொண்டு அளந்து நமக்கான இடஅளவை உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும்.

● மனையாக வாங்கும் பட்சத்தில் மழைக் காலத்தில் சென்று அவசியம் பார்வையிட வேண்டும். தண்ணீர் தேங்கும் நிலமா என்பதை இதன் மூலம் கண்டறியலாம்.

# போறீங்களா..?

● விற்கப்படும் இடம் அரசு அனுமதிக்குட்பட்ட பகுதியில் இருக்கிறதா? பின்னாளில் அரசு கையகப்படுத்தும் வாய்ப்புள்ளதா என்பதைத் தொலைநோக்குச் சிந்தனையோடு யோசித்து வாங்குவது நல்லது.

● நமது வசம் தரப்படும் அனைத்து ஆவணங்களையும், ஒரு சிவில் லாயரைக் கொண்டு பரிசோதித்துக் கொள்வது உத்தமம்!

- மனோ

படம் : பொள்ளாச்சி சுந்தரம்



● ஹரிஹரன்

பலரையும் கவர்ந்தது தாரிக் அகமது, நிலோஃபர் இருவரும் தயாரித்து வைத்திருந்த மாடல்தான்.

"நாங்க தயாரிச்சிருக்கிற இந்தக் குட்டி விமானங்கள் வெறும் பொம்மை இல்லீங்க. உண்மையிலேயே பறக்கக்கூடிய விமானங்கள். ஒண்ணு சூப்பர் வாயேஜர், இன்னொன்று காம்போசிட் எக்ஸ்.

இந்தியாவிலேயே ஹெல்மெட் மற்றும் கார், பைக் மெட்டீரியலால குட்டி விமானம் செஞ்சது நாங்க ரெண்டு பேர்தாங்க. இதோட ஒரிஜினல் பெரிய விமானத்தை எல்.சி.ஏ.ங்கிற பேர்ல கார்பன் 'ஃபைபரைக் கொண்டு பெங்களூர்ல உருவாக்கி, இன்னும் ரெண்டு வருஷத்துல இந்தியா விமானப் படைல சேர்க்கப் போறாங்க. அதுக்குள்ளேயே நாங்க மாடல் செஞ்சுக் காமிச்சுட்டோம்" என்று தாரிக் அகமது சட்டைக் காலரைத் தூக்கிவிட்டுக் கொள்ள, 'நம்ம டீமுக்குதான் ஃபர்ஸ்ட் ப்ரைஸ்!' என்று நிலோஃபர் பரவசமாக ஓடி வருகிறார். அசத்துங்க ஸ்டூடண்ட்ஸ்!

- ஷைலஜா

**தொடர்கதை**

# கொசு

## பா. ராகவன்

'பேச வேண்டும், வா' என்று வரச் சொல்லி ஆளனுப்பியபோது சந்தோஷமாகத்தான் இருந்தது. வருவாள். பேசலாம்; பேசாமலும் இருக்கலாம். ஆனால் பார்க்கலாம். பேச விருப்பமும் சந்தர்ப்பமும் கூடி வந்தால் பேசலாம். நினைத்ததைத்தான் பேச வேண்டுமென்பது கூட இல்லை. ஏதாவது பேசினால்கூட நன்றாகத்தான் இருக்கும். பேசாமல் வெறுமனே பார்த்துக்கொண்டு இருந்துவிட்டுத் திரும்பினால் அதனைக் காட்டிலும்.

ஆனால், கிளம்பியபோது எதுவோ ஒன்று தடுத்தது. எதற்கு வரச் சொன்னோம் என்று நினைத்தான். பேசியே தீரவேண்டிய விஷயம் என்று ஏதுமில்லை. என்னமோ ஒரு பயம், பதற்றம், தவிப்பு. எனக்கு நீ சரியானவளா? இல்லை, இல்லை. உனக்கு நான் சரியானவனா என்று தெரியவில்லை என்று சொல்வதற்கா வரச்சொன்னோம்?

அவள் அச்சப்படலாம்; கலவரப்படலாம். காதலித்துத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு இம்மாதிரியான சங்கடங்கள் நேர வாய்ப்பில்லை. திடீரென்று எங்கோ முளைத்து வளர்ந்த இரு செடிகளைப் பிடுங்கி ஒரு தொட்டிக்குள் நடுகிற வேலை இது. கொஞ்சம் சிக்கல்தான். ஆனால், ரயில் ஓடும் என்றுதான் அப்பா சொல்லியிருந்தார். அவனுக்கும் அப்படித் தான் தோன்றியது.

ஆனால், தன் அரசியல் வெறிக்கும் வேகத்துக்கும் சாந்தி ஈடுகொடுப்பாளா என்கிற கவலை அவனை விடாமல் அரித்துக் கொண்டிருந்தது. என்னவாகப் போகிறோம் என்று தனக்கே தெரியாத சூழ்நிலை. உச்சிக்கும் அதலபாதாளத்துக்கும் மேலதிக தூர இடைவெளி பெரும்பாலும் இருப்பதில்லை. அந்தப் பக்கம் எட்டிப் பார்த்தால், அடுத்த வீடாகத்தான் இரண்டுமே இருக்கின்றன. எங்கும் விழலாம். இரண்டில் எது வேண்டுமானாலும் தன்னுடையதாகலாம். இரண்டுக்கும் அவன் தயாராகத்தான் இருந்தான். ஆனால், சாந்தி தயாராக இருப்பாளா?


அதுதான் கவலையாக இருந்தது. திருமணத்துக்குப் பிறகு, தான் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்று நினைத்துவிட்டால்?

பொதுவில் அவன் குப்பத்தைச் சேர்ந்த யாரும் இம்மாதிரியெல்லாம் யோசித்ததில்லை. ஆக்கிப்போட ஒருத்தி. அவ்ளோதானே? 'எல்லாத்துக்கும் சேத்துத் தாஞ் சொல்லுறேன்' என்று பலபேர் அவன் காதுபடப் பேசியிருக்கிறார்கள்.

அவ்வளவுதானா? அவ்வளவு மட்டும் தானா? இல்லை என்று அவனுக்கு நிச்சயமாகத் தோன்றியது. தன் தேருக்குச் சக்கரமாக அல்ல. தேரோடும் பாதையாக அவளால் இருக்க முடியுமானால் நன்றாக இருக்கும் என்று நினைத்தான். பெருமூச்சு வந்தது.



மனிதன் சுயநலன்களால் ஆனவன். ரத்தமும் நரம்புகளும் உயிரும் உணர்வும் சுயநலத்தால் செய்யப்பட்டிருக்கின்றன. பதிலுக்கு அவளுக்கு என்னவாகத் தன்னால் இருக்க முடியும்?



முத்துராமனுக்கு இந்தக் கேள்விதான் குடைச்சலைக் கொடுத்தது. பெரிய விஷயமல்ல. அடிப்படை மனிதாபிமானம். சக உயிரின் மீது

கவியும் பரிவு. இதற்கு யாரும் மெடல் குத்தி, கைதட்டத் தேவையில்லை. ஆனால் தன்னால் அது முடியுமா?

அதுதான் தெரியவில்லை.

**கா**த்திருந்தான். கோடம்பாக்கம் ரயில்வே மேம்பாலத்தின் நடுவே நின்றபடி தூரத்தில் விரையும் கார்களையும் பேருந்துகளையும் பார்த்துக் கொண்டிருந்தான். மேம்பாலங்களில் நிற்கிறபோது பாதுகாப்பாக இருப்பது போல் உணர முடிகிறது. கீழே ஓடும் ரயில்களின் சத்தம் பாதுகாப்புப் படை வீரர்களின் அணி வகுப்பைப்போல் அவனுக்கு எப்போதும் தோன்றும். வீட்டில் இரவுப் பொழுதுகளில் தூக்கம் வராதபோதெல்லாம் இதுதான் அவனுக்குத் தோன்றும். எட்டடி எடுத்து வைத்தால் வந்துவிடுகிற அடையாறு ஆற்றுப் பாலம். தடதடத்து ஓடுகிற ரயில்கள். நினைவு தெரிந்த காலமாக ஓடிக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் பாலத்தின் அடியில் இருந்து அந்தச் சத்தத்தைக் கேட்கும்போது பயமாக இருக்கிறது.

அதிர்வுகளைத் தாங்குவதற்கு உயரங்கள் முக்கியம் போலிருக்கிறது. சட்டென்று 'அவ அஞ்சடி ரெண்டங்குலம்' என்று பெண் பார்த்துவிட்டு வந்ததும் அம்மா சொன்னது நினைவுக்கு வந்தது. சிரித்துக் கொண்டான்.

ஒற்றைக் காகமொன்று உயரே பறந்து வந்து மின்சாரக் கம்பியில் அமர்ந்தது. முத்துராமன் திரும்பிப் பார்த்தான். சாந்தி நின்று கொண்டிருந்தாள்.

புன்னகை இல்லை; பதற்றம் இல்லை. அச்சமோ, வெட்கமோ, ஏனென்ற கேள்வியோ எதுவுமற்ற முகபாவம்.

"என்னமோ பேசணும்னு சொன்னீங்கன்னு உங்க சினேகிதக்காரர் ஒருத்தரு வந்தாரு.'

''அ...ஆமா...'' என்ன





• கிஷோர்குமார்

## அனாதையின் ஆசை!

'என் பெயர் என்ன?' - இதுதான் அந்தக் குறும்படத்தின் பெயர். கிஷோர்குமார் என்னும் பத்து வயதுச் சிறுவனை மையப்படுத்தி, எடுக்கப்பட்டிருக்கிறது. பிரபல திரைப்பட இயக்குநர் அற்புதன்தான் இதனைப் படைத்திருக்கிறார்.

குப்பை பொறுக்கி வயிற்றைக் கழுவும் அனாதைச் சிறுவன், பள்ளியில் படிக்கும் மாணவர்களைப் பார்த்து ஏக்கமடைகிறான். தானும் பள்ளிக்கூடம் போக வேண்டும், படிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான். அப்போதுதான் தான் அனாதை என்பது அவனுக்கு உறைக்கிறது. அதையும் மீறி தனது விருப்பத்தைப் பூர்த்தி செய்ய எப்படிப் போராடுகிறான் என்பதே கதை. வசனமே இல்லாமல் படம் எடுக்கப்பட்டிருக்கிறது. மிக யதார்த்தமாக காட்சிகள் நகர்கின்றன. குறிப்பாக, கிஷோர்குமாரின் நடிப்பு மிக இயற்கை.

இக் குறும்படத்தைப் பார்த்த இயக்குநர் பாலா, கிஷோர்குமாரை தனது 'நான் கடவுள்' படத்தில் நடிக்க வைத்துள்ளார். டைரக்டர் ஷக்தி சிதம்பரமும் தனது 'வியாபாரி' படத்தில் பயன்படுத்தியுள்ளார். மெர்க்குரி ஆர்ட்ஸ் பட நிறுவனம் 'என் பேர் என்ன' குறும்படத்தைத் தயாரித்துள்ளது.

- ரேவதி

பேசுவதென்று அவனுக்குச் சட்டென்று புரியவில்லை.

"நல்லா புடிச்சீங்க சிநேகிதம். நேரா எங்கப்பாவாண்ட வந்து சொல்லிட்டாரு. அவரு என்னாடான்னா, மாப்ள பேசணும்னாருன்னா ஒடனே கௌம்புன்னு சொல்லிட்டு அவரும் கூட வந்திருக்காரு."

சடாரென்று அதிர்ந்து நிமிர்ந்தான் முத்துராமன்.

"அப்பா வந்திருக்காரா? எங்க?"

"ஸ்டேஷனுக்கு வெளிய நிக்கிறாரு. நீ போயி பேசிட்டு வாம்மா, நா இங்கேயே நிக்கிறேன்னாரு."

முத்துராமனுக்கு பயமும் பதற்றமும் வெட்கமும் கலந்ததொரு உணர்ச்சி உண்டானது. என்ன மடத்தனம்!

"இதென்னாடி புதுப்பளக்கம்னாங்க எங்கம்மா. சினிமாங்கள்ல பாத்திருக்கல்ல, கம்மாருன்னுட்டாரு அப்பா..."

"சேச்சே... அப்படியெல்லாம் இல்ல சாந்தி. நெசமாவே ஒரு முக்கியமான விசயம் பேசணும்னுதான் வரச் சொன்னேன். நான் பண்ணது தப்பு. பேசாம நேரா நானே உங்கூட்டுக்கு வந்திருக்கணும்" என்றான் அவசரமாக.

அவள் ஒரு கணம் அவனை நிமிர்ந்து உற்றுப் பார்த்தாள். பெண் பார்க்க வந்திருந்த போதும் சரி, ஆல்பர்ட் தியேட்டர் வாசலில் பார்த்தபோதும் சரி, இவன் முகத்தில் இத்தனை பரபரப்பு இல்லை. பதற்றம் இல்லை. கவலை இல்லை. எனில், அப்படியென்ன தலைபோகிற விஷயம்?

அவன் தடுமாறினான். மிகவும் திணறினான். பேசத்தான் வேண்டும். ஆனால் எங்கிருந்து தொடங்குவது என்று புரியவில்லை. 'உனக்கு நான் சரியாக இருப்பேனா என்று சந்தேகமாக இருக்கிறது' என்றா சொல்ல முடியும்? அல்லது 'என் கனவுகளுக்கு நீ குடை பிடிப்பாயா?' என்று கேட்கத்தான் முடியுமா?

"எதுவானாலும் சொல்லுங்க. டௌரி எதனா..."

"ஐயோ... சேச்சே..." என்றான் அதே மாறாத பதற்றமுடன்.

"அப்ப சரி. வேற எதுன்னாலும் ஒக்கேதான்" சட்டென்று சிரித்தாள். அவனுக்குச் சிரிக்கத் தோன்றவில்லை. தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தான். ஒரு விஷயத்தைப் புரியவைக்க வேண்டும். அந்த விஷயத்தில் தன் பயம் கலந்திருக்கிறது. சந்தேகம், கவலை இரண்டும்கூடக் கலந்திருக்கிறது. ஒரு பார்வையில் அது வெறும் அபத்தம்; இன்னொரு பார்வையில் அர்த்தங்கள் பொதிந்தன. 'கவலைப் படாதே, நான் தயார்' என்று அவள் சொல்லிவிடுவாளானால், மேற்கொண்டு

ஒரு புன்னகையுடன் விடைபெற்று விடலாம். தன் கவலையை அவன் முகத்திலும் சிந்தையிலும் ஏற்றி அனுப்பி விட்டு வீடு திரும்ப நேர்ந்தால் தூக்கம் வரப்போவதில்லை. அது நிச்சயம்!

"நீங்க வேற யாரையாச்சும் லவ் பண்ணுறீங்களான்ன?" என்றாள் திடீரென்று.

முத்துராமன் வியப்புடன் அவளைப் பார்த்தான்.

"இல்ல... டி.வி. சீரியல்ல நிறைய இந்த மாதிரி வருமில்ல? அதான் கேட்டேன்."

அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "அப்படி ஏதாச்சும் இருந்தா ஒனக்குப் பரவால்லியா?"

"என்னா பண்ண முடியும்? இதான் நம்ம தலையெழுத்துன்னு நெனச்சிக்கிட வேண்டியதுதான். இஸ்டமிருந்தா கட்டிக்கப் போறீங்க. இல்லன்னா, சர்தாம் போன்னு போவப் போறீங்க. அவ்ளோதானே?"

இவளிடம் பேசலாம் என்று சட்டென்று அவனுக்குத் தோன்றிவிட்டது. தடாலென்று, "உங்க குப்பத்துக்குத் தீ வெச்சது யாரு தெரியுமா?" என்றான் தொடர்பற்ற எல்லையிலிருந்து.

"யாரு?"

"எங்க கட்சிக்காரங்கதான்." சொல்லிவிட்டு அவள் முகத்தை உற்றுப் பார்த்தான். சலனமில்லை. வியப்பில்லை. அதிர்ச்சியில்லை. போன ஜென்மத்தில் அவள் ஒரு புத்தராகப் பிறந்திருக்க வேண்டும்.



"ஓஹோ" என்றாள் சாதாரணமாக.

"ஒனக்கு இது ஷாக்கா இல்லியா சாந்தி?"

"எதுக்கு? எல்லாந் தெரிஞ்சதுதானே? உங்க கட்சிக்காரங்க இல்லாங்கட்டி வேற கட்சிக்காரங்க. ரெண்டும் இல்லன்னா பொறுக்கிப் பசங்க. வேற யாரு? எத்தினியோ வாட்டி பாத்தாச்சுங்க இதெல்லாம். பத்தவும் வெப்பாங்க. சோத்துப் பொட்டலம் குடுத்து மேலுக்கு எரநூறு ரூவா பணமும் குடுப்பாங்க. அவங்களுக்குப் பத்த வெக்கணும். நமக்கு பணம் வேணும். அவ்ளதானே!"

ஒரு கணம் அவனுக்கு என்ன பேசுவதென்று புரியவில்லை. நாளிதழ்களும் புறக்கணிக்கும் தீவிபத்துச் சம்பவங்கள் தினசரி எங்காவது நடந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால் 'தீயைத் தண்ணீர் போல் அள்ளியெடுத்து முகத்தைக் கழுவிக்கொள்ளும் விதத்தில் அல்லவா பேசுகிறாள்.

அவனுக்குப் பேச்சு வரவில்லை. பேச ஏதுமிருப்பதாகவும் தெரியவில்லை. அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

சாந்திதான் பேசினாள். "இதான் உங்க கவலைன்னா விட்ருங்க. எங்களுக்கு இதெல்லாம் பழகிருச்சி."

"அதில்ல சாந்தி... எங்கவல வேற. இன்னிக்கி என் கட்சிக்காரன் எவனோ உங்க குப்பத்துல வந்து நெருப்பு வெச்சிருக்கான். நாளைக்கு என்னைப் போயி வைடான்னாங்கன்னா நான் போயித்தான் ஆவணும். அதப்பத்தித்தான் யோசிக்கறேன்" என்றான் அமைதியாக.

> ***"சீரியஸ் காதல் கேள்விப் பட்டிருக்கேன். அது என்னடா சீரியல் காதல்?"***
>
> ***"348 நாளா தொடர்ந்து லவ் லெட்டர் கொடுத்துக்கிட்டிருக்கேன். அவ முடிவு என்னன்னு சொல்லமாட்டேங்கறா!"***
>
> ***- தஞ்சை அனார்கலி***

(தொடரும்)

# ஜெயக்குமாருக்குக் குறி!

• பல பிரச்னைகளில் கலைஞர் அரசின்மீது தன் கசப்புணர்வைத் தெரிவித்து வரும் டாக்டர் ராமதாஸின் சமீபத்திய கோபத்துக்குக் காரணம், அரசு நிதியுதவியுடன் கொண்டாடப்பட்ட சென்னை சங்கமம் நிகழ்ச்சிகளில், கூட்டணிக் கட்சிகள் புறக்கணிக்கப்பட்டதுதான் என்கிறார்கள். மாவட்டங்களில் உள்ள ஆட்சியாளர் உட்பட அதிகாரிகள், பா.ம.க. எம்.எல்.ஏ.க்களை அலட்சியம் செய்து, உள்ளூர் தி.மு.க. பிரமுகர்களின் பாட்டுக்கு ஆடிக் கொண்டிருப்பதும் எரிச்சலுக்குக் கூடுதல் காரணமாம். இந்த நிலையில், அமைச்சர்கள் துரைமுருகன், பொன்முடி போன்றோர் பா.ம.க.வுக்குத் தக்க பதிலடி கொடுக்க வேண்டும் என்று கலைஞரை நச்சரிக்கிறார்களாம். உ.பி. தேர்தலுக்குப் பிறகு மத்திய அரசு ஆட்டம் கண்டுவிடும் என்ற எதிர்பார்ப்பில் காய்களை நகர்த்துகிறார் டாக்டர் என்கிறார்கள்.



• ஆட்சியாகட்டும் கட்சியாகட்டும், ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் கலைஞரால் செய்ய முடியும் என்ற அபிப்ராயம் இலேசாக ஆட்டம் கண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு உதாரணமாக சமீபத்தில் நடந்த சின்ன இலாகா மாற்றங்களைச் சொல்கிறார்கள். ஒன்றிரண்டு அமைச்சர்களைக் கழற்றிவிட வேண்டும் என்ற முடிவை 'நெருங்கியவர்கள்' கொடுத்த அழுத்தத்தால் மாற்றிக் கொண்டாராம் முதல்வர்! குறிப்பாக, சில அமைச்சர்கள் தலைமைச் செயலகத்துக்கே வராமல் வீட்டிலேயே கோப்புகள் பார்ப்பதும், அடிக்கடி 'தொடர்பெல்லைக்கு' வெளியே இருப்பதும் அவரை மிகவும் நொந்துபோகச் செய்திருக்கிறதாம்.





• ஜெயலலிதா மீதுள்ள ஊழல் குற்றச்சாட்டுகளுடன், அவருக்கு உதவியாய் இருப்பவர்களின் பேரிலுள்ள குற்றச்சாட்டுகளையும் வெளியே கொண்டு வந்து நிரூபிப்பதில் தி.மு.க. முனைப்பாய் இருக்கிறதாம். இதன் முதல் கட்டமாக, ஜெயக்குமார், ஓ.பன்னீர் செல்வம், செங்கோட்டையன் ஆகியோரைக் குறி வைக்கிறார்களாம். 'சுனாமி நிதியில் ஊழல் செய்துவிட்டார்' என்று ஜெயக்குமார் மீது குற்றச்சாட்டுப் புத்தகம் வெளியிடப் போவதாக தி.மு.க. தரப்பில் சொல்கிறார்கள்.

- சஞ்சயன்



# கொழுப்பை விரட்டும் கறிவேப்பிலை!

31.12.2006 இதழில் கொள்ளு அல்லது மணத் தக்காளி கீரையைப் பயன் படுத்திச் செய்யும் எளிய உணவு வகைகளை எழுதி அனுப்பக் கேட்டிருந்தோம். அப்போட்டியில் முதல் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு, பரிசாக டாக்டர் எல்.மஹாதேவனின் தன்வந் தரி டாலரினைப் பெறுபவர் ஆர்.அம்பிகா, மதுரை:

## போட்டி எண் 9, 10 முடிவுகள்:

### மணத்தக்காளிக் கீரை கூட்டு

***தேவையானவை:***

மணத்தக்காளி கீரை - 1 கட்டு, பாசிப் பருப்பு - அரை கப், மிளகாய் வற்றல் - 2, சீரகம் - 1 தேக்கரண்டி, தேங்காய்த் துருவல் - 4 மேசைக் கரண்டி, பச்சரிசி - 1 தேக்கரண்டி, உப்பு தேவையான அளவு.

***தாளிக்க:*** கடுகு - அரை தேக்கரண்டி, உ.பருப்பு - 1 தேக்கரண்டி, எண்ணெய் - 1 தேக்கரண்டி.

***செய்முறை:*** மணத்தக்காளிக் கீரை யைச் சுத்தம் செய்து, பொடியாக நறுக்கி வைக்கவும். அடுப்பில் ஒரு வாணலியில் 2 டம்ளர் தண்ணீர் விட்டுக் கொதி வர ஆரம்பித்ததும் பாசிப்பருப்பைப் போடவும். பருப்பு பாதி வெந்தவுடன், நறுக்கி வைத்திருக்கும் கீரையைப் போடவும். கீரை அடுப்பில் வெந்து கொண்டிருக்கட்டும். அதற்குள் தேங் காய்த் துருவல், பச்சை மிளகாய், உப்பு, பச்சரிசி எல்லாம் சேர்த்து விழுதாக அரைக்கவும். கீரை வெந்தவுடன் அரைத்த விழுதைப் போட்டு, தேவைப்பட்டால் கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கலந்து, ஐந்து நிமிடம் கொதிக்க விடவும். கொதித்த வுடன் இறக்கி, கடுகு, உபருப்பு தாளித்துக் கொட்டவும். மணத்தக்காளிக் கீரை கூட்டு ரெடி. சூடான சாதத்துடன் பிசைந்து சாப்பிடலாம்.


இரண்டாவது பரிசாக டாக்டர் எல்.மஹாதேவன் எழுதிய தேவமருந்து முதல் பாகம் நூலைப் பெறுபவர்

க.வேடியப்பன், கும்மிடிப்பூண்டி.

## கொள்ளுப் பொங்கல்

**தேவையான பொருட்கள்:**
கொள்ளு - அரை ஆழாக்கு, அரிசி - ஒரு ஆழாக்கு, நெய் - நூறு கிராம், உப்பு - தேவையான அளவு, மிளகு, சீரகம் - தலா ஒரு ஸ்பூன்.

***செய்முறை:*** கொள்ளை வாசம் வரும் வரை நன்கு வறுத்து உரலில் குத்தி உமி



• லவங்கப் பட்டை

போக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். அதை அரிசியுடன் ஒன்றாகக் கலந்து கழுவி உலை கொதித்த பின் போட்டு வேக விட வேண்டும். பாதி வெந்ததும், உப்பு போட்டு நன்கு குழைய விட வேண்டும். பின் நெய் விட்டு கூடவே சீரகம், மிளகு இரண்டையும் தாளித்துக் கொள்ள வேண்டும். இந்த பொங்கல் ஊளைச்சதையைக் குறைக்கும். நல்ல சத்துள்ள ஆகாரம்.

**21.1.2007 இதழில் கொலஸ்ட்ராலைக் குறைக்க சிறந்த குறிப்பை எழுதி முதல் பரிசாக தன்வந்தரி டாலர் பரிசாகப் பெறுபவர் எஸ்.கண்ணம்மா, திருநெல்வேலி.**

**கொலஸ்ட்ராலைக் குறைக்கும் எளிய குறிப்பு:**

1. தினமும் ஒரு பல் பூண்டு, ஒரு சிறிய வெங்காயம் தொடர்ந்து சாப்பிட்டுவர இரத்தத்தில் கொலஸ்ட்ரால் இல்லாது போகும்.

2. தினமும் ஒரு நெல்லிக்காய் அளவு கறிவேப்பிலை உருண்டையைப் பச்சையாகச் சாப்பிட்டு வர கொலஸ்ட்ரால் ஓடியே விடும்.

**இரண்டாவது பரிசாக டாக்டர் எல்.மஹாதேவனின் தேவமருந்து முதல் பாகத்தைப் பரிசாகப் பெறுபவர் அகிலா மோகன், தில்லி.**

லவங்கப்பட்டையை பச்சை வாசனை போகுமாறு இலுப்பச் சட்டியில் வறுத்து, மிக்ஸியில் பொடிபண்ணி வைத்துக் கொள்ளுங்கள். இந்தப் பொடியை தினமும் ஒரு ஸ்பூன் அளவு எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து கொதிக்க வைத்து, வடிகட்டி வைத்துக் கொள்ளுங்கள். இதை சாப்பிடுவதற்கு முன்னால் பருக வேண்டும். இது மாதிரி தினமும் மூன்று வேளை குடித்து வந்தால் கொலஸ்ட்ரால்



• கொள்ளு

கட்டாயம் குறையும். ஒரு மாதத்திலேயே உங்களுக்கு நன்றாக பலன் தெரியும்.

- **அகிலா மோகன், தில்லி**

### தன்வந்தரி டாலர் பரிசுப்போட்டி எண்:17

பிள்ளைப்பேறு காலத்தில் தாய்ப்பால் கட்டிக் கொண்டால் அதனை நீக்க எளிய முறையில் உடனடியாக நிவாரணம் தரும் கைவைத்தியக் குறிப்பை எழுதி அனுப்புங்கள். முதல் பரிசாக டாக்டர் எல்.மஹாதேவனின் தன்வந்தரி டாலர் வழங்கப்படும். இரண்டாவது பரிசாக தேவமருந்து முதல் பாகம் வழங்கப்படும்.

அதிர்ச்சி

# ஆட்டம் பாட்டம்... கொண்டாட்டம்!

புனேயில் பண்ணை வீட்டில் நடந்த போதை மருந்து விருந்தில் கலந்து கொண்ட 280 இளைஞர்களும் இளைஞிகளும் போலீஸாரால் பிடிக்கப்பட்டு, ஓர் இரவு சிறைவாசத்துக்குப் பிறகு ஜாமீனில் வெளிவந்திருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் ஐ.டி. துறையில் பணிபுரிபவர்கள்; கல்லூரியில் படிப்பவர்கள். குறிப்பாக ஐ.டி. துறையில் பணிபுரியும் இளைய சமுதாயத்தின் வாழ்க்கை ஒழுக்கக் கேடான பாதையில் திரும்பியிருப்பது அதிர்ச்சியாகவும் அச்சுறுத்தலாகவும் அமைந்திருக்கிறது. இவர்களை நல்லொழுக்கம், நற்பண்புகள் என்று திசை திருப்ப என்ன செய்ய வேண்டும்? சென்னை 'ஆஸ்பயர் பிஸினஸ்' மென் பொருள் நிறுவனத் தலைமை நிர்வாக அதிகாரி சந்திரசேகர் கவலையுடன், தம் எண் ணங்களை பகிர்ந்து கொள்கிறார்.

"இன்றைய கால கட்டத்தில் ஆணும் பெண்ணும் சேர்ந்து பணிபுரிவதைத் தவிர்க்க முடியாது. கால் சென்டர்களில், இருபாலரும் நட்புணர்வோடு ஒரே ஸிஸ்டத்தில் வேலை செய்வது உண்டு. ஆனால் இந்த நட்புணர்வு, விருந்து, ஊர்சுற்றல், டேட்டிங் என்று எல்லை தாண்டும்போதுதான் சிக்கலாகிறது. ஐ.டி. துறையில் வேலைக்குச் செல்லும் இருபாலருக்கும் பெரிய பொறுப்புணர்வு இருக்கிறது. வேலையில் அவர்களுக்கு இருக்கும் அழுத்தமும், தாராளமாகக் கிடைக்கும் சம்பளமும், தவறான பாதைக்கு அழைத்துச் செல்கின்றன.

அழுத்தத்தைக் குறைக்கும் வகையில், வேலை நேரத்தின் போது மணிக்கொரு முறை ரிலாக்ஸ் செய்வதற்கு அவர்களுக்கு நேரம் கொடுக்க வேண்டும். அலுவலகத்தில் இண்டோர் கேம்ஸ் இருக்க வேண்டும். மனதுக்கு இனிமையளிக்கக் கூடிய மெல்லிசை ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும். சனி, ஞாயிறுகளில் தவறான பாதைக்குச் செல்லாத வகையில் அலுவலகத்துக்குக் கூப்பிட்டு சின்ன விருந்துகள் நடத்தலாம். உதாரணமாக பிறந்தநாள் பார்ட்டி, திறமைசாலிகளைப் பாராட்டுவது இப்படி... மாதம் ஒரு முறை கவுன்ஸிலிங் செய்யலாம். இந்தியப் பண்பாடு, கலாசாரம் ஆகியவற்றைக் குறித்து மனதில் நல்லத் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் சொல்லித் தரலாம். நிறைய பணம் இருந்தால் எப்படிப் பல்வேறு வழிகளில் முதலீடு செய்வது என்பது குறித்து விளக்கலாம். யோகா, மெடிடேஷன் என்று மனதை நல்வழிப்படுத்த அறிவுறுத்தலாம். இவற்றையெல்லாம் விட ஒவ்வொருவரும் மனதுக்குள் நாம் 'நாமாக' இருக்க வேண்டும் என்ற உறுதியோடு வாழ வேண்டும்."



* புனே விருந்தில் கைதானவர்கள்...

சந்திப்பு : ஸ்ரீஸ்ரீ

படம்: நன்றி - தினமலர்

**கல்வி**

"படிப்பு அவசியம்; அறிவு இன்றியமையாதது; ஆனால் மதிப்பெண்கள் பெறுவதில் முன்னிலை வகிக்க வேண்டும் என்ற வெறி ஜெயித்தவரை மந்தப்படுத்துகிறது; தோற்றவரை பாதாளத்தில் தள்ளுகிறது. அதன் விளைவே இன்றைய மாணவச் சமுதாயத்தின் நலனை நசுக்கியிருக்கிறது" என்கிறார் சென்னை வேளச்சேரியில், செயல்வழிக் கல்வி முறையில் அக்கறை காட்டும் செயின்ட் பிரிட்டோ அகாடமியின் தாளாளர் திருமதி விமலா பிரிட்டோ.

இந்தப் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் முகங்களில் துடிப்பை விஞ்சி நிதானமும் கனிவும் புலப்படுகின்றன. ஏனெனில், அவர்களுக்குச் செயல்முறைப் படிப்புடன், வாழ்வின் யதார்த்தங்கள், யதார்த்தமாகவே கற்பிக்கப்படுகின்றன.

"பொதுவாக, மாணவர்களுக்கு தியரி, ப்ராக்டிக்கல் முறைகள் தேவையென்றாலும், எங்கள் பள்ளியில் ப்ராக்டிக்கலுக்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கிறோம். ரேங்க் எடுப்பதிலேயே மாணவனை உளக்கப்படுத்தி, வெறியூட்டி, அவனை ஒரு குதிரையாக்க நாங்கள் விரும்புவதில்லை. படிப்பும், அறிவும் அவசியம். மதிப்பெண் பெறுவதில் தீவிர உணர்ச்சியெல்லாம் தேவையில்லை. தேர்வுகள் ஒரு மனிதனின் ஆளுமையை முடிவு செய்வதில்லை. முதல் இடம் பெறவேண்டும், தங்கப் பதக்கம் பெற வேண்டுமென்றால், அப்படித் தங்கப் பதக்கம் பெற்றவர்கள் மட்டும்தான் பெரிய அறிவாளிகளாக இருக்கிறார்களா என்ன? அதனால் யாருக்கு என்ன பலன்? இன்று பெரிய சான்றோர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் எல்லாருமே முதல் மதிப்பெண்கள் பெற்றவர்கள் அல்லர்.

இன்னொன்று; தீவிரமாக உழைத்துத் தங்கப் பதக்கம் பெற்றவர்கள் எல்லாம் பதக்கம் கிடைத்ததுமே தங்கள் பணி

# தேர்வு பயம்





நிறைவுற்றதைப் போல மந்த நிலையைத் தொட்டு விடுகிறார்கள். அப்படிப் பெறாதவர்கள் விரக்தியில் தவறான முடிவெடுக்கின்றனர். தோல்வியுற்றும் நிதானமாக இருக்கிறார்களே... அப்படியொரு சமுதாயம்தான் இன்றைக்கு அவசியம். அவர்கள்தாம் வாழ்க்கையைச் சிறப்பாக வாழ முடியும்.

முதல் மதிப்பெண் பெற்று முன்னேறியவர்கள், வேலை செய்யுமிடத்தில் சக ஊழியர்களுடன் குழு மனப்பான்மையுடன் பழகி, முன்னேறுவதற்கும், நிறுவனத்தை முன்னேற்றுவதற்கும் வாய்ப்புக் குறைவுதான்.

எனவே, எந்நேரமும் 'படி படி என்று நச்சரிக்காமல் சமுதாய உணர்வினை, மனிதநேயத்தை, தேசப்பற்றினையே அதிகமாக எங்கள் பள்ளியில் போதித்து வருகிறோம்.

# வேண்டாம்!

அனாதை இல்லங்களுக்கும், முதியோர் காப்பகங்களுக்கும் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் இருப்பிடங்களுக்கும் எங்கள் மாணவர்களை அழைத்துச் சென்று, வாழ்வின் பக்கங்களைப் படிக்கச் செய்கிறோம்.

எங்கள் பள்ளி மாணவன் ஏதேனும் தவறு செய்தால், அவனுக்கு அபராதம் விதிப்பதில்லை. அப்படிச் செய்தால், 'நாளைக்கு செய்யப் போகும் தவறுக்கும் இந்தா அபராதம்' என்று அட்வான்சாகக் கொடுத்து விடுவர். தவறு செய்யும் மாணவனைப் பள்ளி வாகனத்தில் பாதுகாப்பாக அழைத்துச் சென்று வீட்டில் விட்டு விடுகிறோம். அவர்கள் தவறை உணர்ந்து தாமாகவே திருந்தி விடுகின்றனர்.

ஒரு மாணவனை இன்னொரு மாணவனுடன் ஒப்பிட்டுப் பேசுவதைப் போலத் தீமையான செயல் வேறு எதுவுமே இருக்க முடியாது. இந்த விஷயத்தில் நாங்கள் அதிக கவனம் செலுத்துகிறோம்.

இப்போது தேர்வு பயம் என்பது மாணவர்களை மிகவும் வாட்டியெடுக்கிறது. அவர்களுக்கு மனப்பாடம் செய்யும் வேலையைக் கொடுக்கவே கூடாது. இந்தப் பழக்கம் ஒழிக்கப்பட வேண்டியது. வகுப்பில் ஆசிரியர் வாயிலாகப் பாடத்தைக் கேட்டுப் புரிந்து, மீண்டும் மனத்துக்குள் அசைபோட்டு, நன்கு மனத்தில் பதிய வைத்து, அதைத் தேர்வுக்கு மட்டுமின்றி வாழ்க்கைக்கும் பயன்படுத்த வேண்டும்.


அதற்கு முதலில் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை வேண்டும். விளையாட்டு, சமூகப் பணிகளில் அக்கறை வேண்டும். அவையே மாணவர்களுக்குத் தன்னம்பிக்கையை மேம்படுத்தும். தேர்வு அச்சத்தைத் துச்சமாக நினைத்து, தலை நிமிர்கிற மாணவன் மட்டுமே வாழ்க்கையிலும் உயர்ந்த இடத்தைப் பிடிக்க முடியும்'' என்கிறார் விமலா பிரிட்டோ.

- சா.ஜெயராஜ்

படம் : பொள்ளாச்சி சுந்தரம்




**விழா**



கிரேஸ் கெல்லி- 1950களின் பிரபல நடிகை. இவரது புகைப் படமும், 'கிரேஸ் கெல்லியுடைய மேனி அழகின் ரகசியம் லக்ஸ்' என்ற வாசகமும் லக்ஸ் சோப் விளம்பரங்களில் இடம்பெற்றன. பின்னாளில் அவர் மொனாக்கோ நாட்டு இளவரசி ஆனார். அப்போது சிகாகோவைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளர், "ஒரு சோப்பின் மூலமாக இத்தனை அழகு பெற முடியுமா?" என்று அவரிடம் கேட்டபோது, கெல்லி அளித்த பதில் என்ன தெரியுமா? "லக்ஸும் சரி, வேறு எந்த சோப்பும் சரி, என் முகத்தைத் தொட்டதே இல்லை."

இந்தச் சுவையான சம்பவத்தை நமது நாட்டின் முன்னாள் முக்கிய தேர்தல் ஆணையர் டி.எஸ்.கிருஷ்ணமூர்த்தி சொன்னவுடன் அரங்கமே ரசித்துச் சிரித்தது.



• விருது பெற்ற விளம்பரம்

"இன்றும் பிரபலங்கள், விளம்பரங்களில் மாடல்களாகத் தோன்றுவது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஒரு சில பிரபலங்கள் தங்களுக்குத் துளியும் சம்பந்தமில்லாத பொருட்களின் விளம்பரங்களில் தோன்றுவது விசித்திரம். விளம்பரங்களில் சொல்லப்படும் தகவல்களில் உண்மை இருக்க வேண்டும்; பொய்களைக் கூறி மக்களை ஒருபோதும் ஏமாற்றக்கூடாது" என்று சுவையாக நீண்டது அவரது உரை. மார்ச் 3 அன்று சென்னை, மைலாப்பூர் பாரதிய வித்யா பவன் அரங்கில், **கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை** நடத்திய 'கல்கி சதாசிவம் நினைவுச் சொற்பொழிவு மற்றும் கல்கி சதாசிவம் நினைவு விருது வழங்கும் விழாவில்'தான் கிருஷ்ண மூர்த்தி இவ்வாறு குறிப்பிட்டார்.



• வரவேற்புரை: வி.ராம்நாராயண்

ஆண்டுதோறும் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளியாகும் விளம்பரங்களை அலசி



• பார்வையாளர்கள்...

ஆராய்ந்து, அவற்றிலிருந்து கலையுணர்வும், சமுதாயச் சிந்தனையும் கொண்ட மிகச் சிறந்த விளம்பரம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அதற்குப் பத்தாயிரம் ரூபாய் பரிசும் பாராட்டுப் பத்திரமும் வழங்கி கௌரவிப்பதுடன், இதழியல், விளம்பர இயல், காட்சித் தொடர்பியல் போன்ற துறைகளில் பயிலும் திறமையான மாணவர்களுக்கு, படிப்பைத் தொடர உதவித் தொகை வழங்குவதையும் கடந்த சில ஆண்டுகளாக **கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை** செய்து வருகிறது.

இவ்வாண்டு, எழுத்தாளர்கள் சிவசங்கரி மற்றும் வி.ஸ்ரீராம் அடங்கிய நடுவர் குழுவினர் 'ஹார்லிக்ஸ் லைட்' விளம்பரத்தினை விருதுக்குரியதாகத் தேர்ந்தெடுத்தார்கள். சுரேஷ்குமார்



• "ராமராஜ்யம் சாத்தியமே..." • சாலமன் பாப்பையா

# விளம்பர உலகமும் ராம ராஜ்யமும்!

(அழகப்பா பல்கலைக்கழகம்), ராஜேஷ் கண்ணன் (சென்னைப் பல்கலைக்கழகம்) இருவருக்கும் தலா ஐந்தாயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டது. செல்வி ஐஸ்வர்யா ராகவன் இறைவணக்கம் பாட, 'ஸ்ருதி' பத்திரிகையின் ஆசிரியரும் அறங்காவலருமான வி.ராம்நாராயண் வரவேற்புரை நிகழ்த்தினார். சோப்பு, ஷாம்பூ முதல் அரசியல் கட்சிகள் வரை அனைத்துக்கும் விளம்பரம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை சுவாரஸ்யமாகவும், சுருக்கமாவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"இந்தியா ஒளிர்கிறதா...?" - டி.எஸ்.கிருஷ்ணமூர்த்தி



தலைமை உரையில் கிருஷ்ணமூர்த்தி தமது தேர்தல் ஆணைய அனுபவத்தையும் நேயர்களுடன் பகிர்ந்து கொண்டார். "தேர்தல் நேரத்தில், அரசியல் கட்சிகளின் விளம்பரங்கள் தேர்தல் ஆணையத்துக்குப் பெரும் திருகு வலியாக இருக்கும். கட்சிகள் தங்கள் திட்டங்களையும், கொள்கைகளையும் விளம்பரப்படுத்துவதற்குப் பதிலாக தனிநபர் தாக்குதல்கள் நடத்துவது அதிகமாகி வருகிறது. அவற்றைக் கட்டுப்படுத்த நாங்கள் உச்ச நீதிமன்றத்தின் உதவியை நாட வேண்டி இருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்னால் போலி நிதி நிறுவனங்கள், பிரபலமானவர்களைக் கொண்டு விளம்பரப்படுத்தி, மக்களை ஈர்த்து, டெபாசிட்களைப் பெற்றுக்கொண்டு கடைசியில்

மக்களை ஏமாற்றி விட்டன. விளம்பரங்களின் நோக்கம் வியாபாரத்தைப் பெருக்குவதாக இருக்கலாம்; ஆனால் மக்களை ஏமாற்றுவதாக இருக்கக் கூடாது. பொருளாதார ரீதியில் நம் நாடு முன்னேறி விட்டதாக (அரசு) விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

அண்மையில், நான் உத்தரப்பிரதேசத்தில் கோபால்பூர் என்ற கிராமத்துக்குச் சென்றிருந்தேன். அங்கே இரவில் வெறும் அரை மணி நேரம் மட்டுமே மின்சார சப்ளை இருக்கிறது. அப்புறம் 'இந்தியா ஒளிர்கிறது' என்று விளம்பரப்படுத்தினால் என்ன அர்த்தம்?" என்று கிருஷ்ணமூர்த்தி கேட்டபோது, அவரது குரலில் தார்மிகக் கோபம் தெரிந்தது.

விருதுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 'ஹார்லிக்ஸ் லைட்' விளம்பரம் அரங்கத்தின் நுழைவாயிலில் அனைவரும் பார்த்து ரசிப்பதற்காக வைக்கப்பட்டிருந்தது. உலக நீரிழிவு தினத்தையொட்டி வெளியிடப்பட்ட அந்த விளம்பரம், 'சர்க்கரை மட்டும் தானா இனிப்பானது?' என்று கேட்டுவிட்டு, தேர்ந்த ரசனையுடன் வாழ்க்கையில் மிக மிக இனிப்பான பத்து விஷயங்களைப் பட்டியலிட்டிருந்தது. பாத்ரூமில் பாடுவதில் தொடங்கி பறவைகளுக்கு உணவு அளிப்பது வரையிலான எளிய மகிழ்ச்சிகள் அடங்கிய பட்டியல்! இந்த விளம்பரத்தின் சிறப்பு அம்சமே இது தமிழிலேயே சிந்தித்து, தமிழில் உருவாக்கப்பட்ட விளம்பரம் என்பதுதான். (வழக்கமாக விளம்பரங்கள் ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டு, பின்னர் தமிழில் மொழிபெயர்க்கப்படும்) இந்த விளம்பரத்தை உருவாக்கிய JWT விளம்பர நிறுவனத்தின் ரவீந்திரன் சாலமன் விருதினைப் பெற்றுக் கொண்டார். அவரது சுருக்கமான ஏற்புரையில் 'எங்கள் நிறுவனத்துக்குக் கிடைத்துள்ள மூன்றாவது கல்கி சதாசிவம் நினைவு விருது' என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.



• JWT சார்பாக விருது பெறும் ரவீந்திரன் சாலமன்

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த கல்கி சதாசிவம் நினைவுச் சொற்பொழிவுதான் விழாவின் ஹைலைட்! தலைப்பு: "ராமராஜ்யம் என்று?" பட்டிமன்ற சூப்பர் ஸ்டார் சாலமன் பாப்பையா வெளுத்து வாங்கிவிட்டார்.

"ரகுவம்சத்தில் காளிதாசன் 'கொடுப்பதற்கென்றே பொருள் கொண்ட வம்சம் ராமருடையது' என்று குறிப்பிட்டிருப்பதைப் போல, தங்களுக்காக இல்லாமல், அடுத்தவர்களுக்குக் கொடுப்பதற்காகவே சம்பாதித்தவர்கள் சதாசிவம் - எம்.எஸ். தம்பதி. எங்கள் மதுரை மீனாட்சியின் மலரடியில் மலர்ந்த தாமரை எம்.எஸ்.அம்மா" என்று நெகிழ்ந்தார் பாப்பையா.

அவரது ராமராஜ்யம் குறித்த உரத்த சிந்தனையில் தெறித்த கருத்துகளின் தொகுப்பு:

சிங்கமும் புலியும் சேர்ந்து தண்ணீர் குடிக்கும் யுலைசிஸ் காட்டிய யுடோப்பிய



• ஐஸ்வர்யா ராகவன்: இறைவணக்கம்

உலகம், சிங்கமும், செம்மறியாடும் ஒரு துறையில் நீர் அருந்தும் யூதர்கள் கண்ட உலகம், சாக்ரடீஸ் விவரித்த பித்தியா உலகம், நாம் சொல்லும் சொர்க்கம் இவை எல்லாம் எங்கேயோ வானத்தில் இருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் 'பாண்டிய நாட்டில் இடி விழாது; அரவம் தீண்டாது; முதலை கொல்லாது' என்கிறார் இளங்கோவடிகள். ஆனால் 'ராமராஜ்யம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியவர் காந்திஜிதான். இங்கே ராமராஜ்யம் நடக்க வேண்டும் என்று மகாத்மா காந்தி கனவு கண்டார். பாரதி யாருக்குக் கூட அந்தக் கனவு இருந்தது அவரது கவிதைகளில் வெளிப்படுகிறது.

காந்திஜி, ராமராஜ்யம் என்று சொல்லும் போது, ராமனை ஓர் இந்துக் கடவுளாகப் பார்க்கவில்லை; ராமராஜ்யம், சமய வேறுபாடுகளைக் கடந்த ஒரு சாம்ராஜ்யம். அப்பழுக்கற்ற பரிபூரணமான ஜனநாயக பூமிதான் ராமராஜ்யம்.

அங்கே சத்தியமும், அகிம்சையும் அடிப்படையாக இருக்கும். மக்களிடையே மனத்தளவில் மாறுபாடுகள் இருக்கலாம்; ஆனால் மாற்றுக் கருத்தையும் சொல்ல அங்கே சுதந்திரம் இருக்கும். சமயங்களில் வேறுபாடு எங்கே வருகிறது? அவரவர் கடைபிடிக்கும் சடங்குகளில்தானே? சடங்கு என்பது வாழ்க்கை முறையை ஒட்டி உருவாகிற பழக்க வழக்கம். சமயம் என்பது மானுடத்தை சகோதரத்துவத்துடன் அரவணைக்கும் மேலான உணர்வு. இந்த உணர்வு பரவலாகும்போது ராமராஜ்யம் உதயமாகிறது.

வ.வே.சு.ஐயர் எழுதிய 'நீக்ரோ மகான் புக்கர் வாஷிங்டன்' என்ற நூலை அனைவரும் படிக்க வேண்டும்.

'கடுமையான உழைப்பும், இறைவனின் அருளும் இருந்தால் எவரும் வாழ்க்கையில் முன்னேறலாம்' என்ற கறுப்பர் இனத்தைச் சேர்ந்த புக்கர் வாஷிங்டனின் வார்த்தைகளை எழுதிவிட்டு, ஐயர், 'இந்த நீக்ரோ மகானின் வாழ்க்கையைப் படிப்பவர்கள், ஓர் அரிஜன ஏழையின் வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டும் என்பதே என் அவா' என்று புத்தகத்தை முடித்திருப்பார்.

'ராமராஜ்யம் சாத்தியமா?' என்று இன்று நமக்குச் சந்தேகம் வரக்கூடும். தென் கோடி கேரளாவில் 'காலடி'யில் பிறந்த ஒரு தனி மனிதர், பாரதம் முழுவதும் சென்று பெரும் மாற்றத்தைக் கொண்டு வரவில்லையா? ராமானுஜர் என்ற தனி மனிதர் மாற்றத்தைக் கொண்டுவரவில்லையா? புத்தர் ஒரு தனி மனிதர் தானே? சூரியன் அஸ்தமிக்காத ஆங்கில சாம்ராஜ்யத்தையே ஆட்டம் காண வைத்தவர் காந்திஜி என்னும் தனி மனிதர்தானே?




• நடுவர்கள் சிவசங்கரி, வி.ஸ்ரீராம் நினைவுப் பரிசு பெறுகிறார்கள்.

நாம் செல்லும் பாதையில் கடுங்குளிர் நிலவினாலும், நாம் அணிந்திருப்பது கந்தையானாலும், நம் உள்ளத்தில் இருக்கும் சத்தியமும், ஒழுக்கமும் குளிரை வெல்ல நமக்கு வெப்பத்தைத் தரும். நமது ஆன்ம ஒளியே நமக்கு வழிகாட்டும்."

நிகழ்ச்சியின் முடிவில் ஒன்று தெளிவாயிற்று: விளம்பர உலகமும் சரி அரசியல் உலகமும் சரி தார்மிக நெறிகளுக்குக் கட்டுப்படும்போது குறை ஒன்றும் இல்லை! இதை அடிக்கோடிடுவது போல், நிகழ்ச்சி முடிந்து வீடு திரும்பிய அனைவருக்கும் வானதி வெளியீடான அமரர் கல்கியின் 'மகாத்மா காந்தி சரித்திரம்' புத்தகம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

தொகுப்பு : **எஸ்.சந்திரமௌலி**

படங்கள் : **ஸ்ரீஹரி**


# கிரிக்கெட்

இந்திய அணி உலகக் கோப்பையை வெல்லுமா என்பதுதான் இன்றைய கிரிக்கெட் ரசிகர்களின் ஹாட் டாபிக். சமீபத்திய வெற்றிகளும், அணியில் புதிதாகக் களமிறங்கியிருக்கும் புது வரவுகளின் வேகமும் சந்தோஷம் தந்தாலும் அனுபவம், ஆற்றல்மிக்க நம்பிக்கை நட்சத்திரங்களாகத் திகழ்வதென்னவோ சச்சின், டிராவிட்தான். இவர்களின் பலம், பலவீனம் என்ன...? இதோ ஒரு ஸ்கேன் ரிப்போர்ட்.

## சச்சின்

பலராலும் எப்போதும் எதிர்பார்க்கப்படுபவர். இப்போதுதான் அவரை சிலர் விமர்சனம் செய்ய ஆரம்பித்துள்ளனர். ஆனால் ஊன்றிப் பார்த்தால், சச்சினைப்போல சிறந்த கிரிக்கெட் வீரர் யாருமே இல்லை. இன்னும் மிகைப்படுத்திச் சொன்னால் சச்சின்தான் கிரிக்கெட்; கிரிக்கெட்தான் சச்சின். கிரிக்கெட்டின் அத்தனை அம்சங்களும் அவருக்குப் பொருந்தும்.

# உலகக்



அவர் எப்போதுமே ஃபார்மில் இருந்ததில்லை. ஏனெனில் அவர் எப்போதுமே ஃபார்மை இழந்தவரில்லை. உலகத்தரம் வாய்ந்த பவுலர்களை எளிதாகச் சமாளித்து ரன்களை விரைவாகக் குவிப்பார். ஆனால் புதிய பவுலர் அல்லது பகுதி நேர பவுலரிடம் எளிதில் விக்கெட்டை இழந்து விடுவார்.

சச்சின் ரன் குவிப்பைக் கணக்கிட்டால் இப்படி வரும்... மூன்று மேட்ச்சுகளுக்குள் ஒரு அரை சதம்; ஒரு தொடருக்குள் ஒரு சதம் எப்படியாவது அடித்துவிடுவார். இந்த அளவுகோலை வைத்துக்கொண்டுதான் அவரைப் பற்றிய திட்டங்களை அணி, நிர்வாகம் செய்ய வேண்டும்.

சச்சின் 'இந்த ஆட்டத்தில் சதம் அடிக்க வேண்டும்' என்றோ, 'அவுட்டாகாமல் ஆட வேண்டும்' என்றோ எப்போதும் நினைத்தது இல்லை. அவரை நோக்கி எறியப்படும் ஒவ்வொரு பந்துமே அவரது ஆட்டத்தைத் தீர்மானிக்கிறது. தான் சந்திக்கும் ஒவ்வொரு பந்தையும், தன் மனத்தில் பதிவு செய்யப்பட்ட விதத்தில் எப்படி ஆட முடியும் என்று நினைக்கிறாரோ, அப்படி ஆடுகிறார். அந்த அவரது நினைப்புதான் அணியின் பிழைப்பை முடிவு செய்கிறது.


உதாரணமாக, சச்சினின் மிகப் பிரசித்தி பெற்ற ஆட்டங்களுள் ஒன்று, 2003ஆம் ஆண்டு உலகக் கோப்பையின் போது பாகிஸ்தானுக்கு எதிராக ஆடியது. 75 பந்துகளில் 98 ரன்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு அடிகோலினார். 15 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள். பவுலர்களை எல்லாம் மிரள வைத்த அந்த ஆட்டத்தைப் பற்றி அவரிடம் கேட்டபோது, "நானாகத் திட்டமிட்டு ஆடவில்லை. அது தானாக அமைந்தது. அது ஒரு சப்கான்ஷியஸ் மைண்ட் கேம்" என்கிறார். இதுதான் சச்சின்.

## ராகுல் டிராவிட்

சந்தேகமில்லாமல் அணியின் பெருஞ் சுவர் டிராவிட்தான். ஆனால் அவர் அடிக்கும் பவுண்டரி மற்றும் சிக்ஸர் (?) போன்ற 'ஷாட்'டுகளை ஒரு பள்ளி கிரிக்கெட் வீரர்கூட அடித்துவிட

# கோப்பை... சச்சின்... டிராவிட்...

முடியும். டெஸ்ட் என்றால் 100 பந்துகளுக்கு 40 ரன்கள், ஒருநாள் ஆட்டம் என்றால் 100 பந்துகளுக்கு 60 ரன்கள். எப்படிக் கணக்கு போட்டாலும் இது சரியாக வராது; நல்ல சராசரியும் ஆகாது.



பிறகு எப்படி அவர் ஒரு சிறந்த பேட்ஸ்மேன்? டிராவிட் ஒவ்வொரு பந்தையும் கண்களால் பார்த்து - யோசித்து அடித்தால் அவுட்டாக மாட்டோம் என்று உறுதி செய்த பின்னரே தொடுகிறார். சரி, இதில் என்ன தவறு, நல்லதுதானே என்று நீங்கள் கேட்கலாம். 'அந்த அவுட்டாகாமல் ஆடக்கூடிய பந்து' வரும்வரை காத்திருக்கிறார். சமயங்களில் ஒரு ரன் எடுக்க 50 பந்துகள் வரை 'பார்த்து' விளையாடுகிறார். இது டெஸ்ட் ஆட்டங்களுக்குச் சரி வருமே தவிர, ஒரு நாள் ஆட்டங்களுக்குப் பொருந்தி வராது.




சச்சின் டெண்டுல்கர் குறைந்த ரன்களில் அவுட்டானாலும் சரி... மிகப்பெரிய ஸ்கோரை அடித்தாலும் சரி, ஆடும்போது எதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. ஆனால் டிராவிட், எங்கே குறைந்த ரன்களில் அவுட்டாகி, மற்றவர்கள் நம்மைப் பற்றிக் குறைவாகப் பேசும்படி ஆகிவிடுமோ என்று பயப்படுவார். இதை அவரே ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார்.

இருவருக்குமே தங்களது பலம், பல வீனங்கள் நிச்சயம் தெரியும். மற்றவர்களும் அதை அவர்களுக்கு உணர்த்தியிருக்கிறார்கள். உணர்ந்து ஆடினால் உலகக் கோப்பைக்கும் நாம் கையுயர்த்தலாம்.

- வெங்கடேஷ் பிரபு

ஸ்ரீ லலிதா

# உயிர் தரும் மருந்து

## 26

சுதா சேஷய்யன்

மன்மதனுக்குக் காமன் என்று பெயர்; அம்பாளுக்குக் காமேசுவரி என்று பெயர். ஈசுவரம் என்றால் தலைமை.

சாதாரண விருப்பமாகவோ ஆசையாகவோ அது இருக்கிறபோது காமம் என்று அழைக்கப்படுகிறது. அதற்கு ' மன்மதன் அதிபதி. அந்த ஆசையையே அடக்கி ஆள்கிறபோது ஈசுவரியாக, அம்பிகை அதற்குத் தலைவியாக இருந்து காக்கிறாள்.

மன்மதனும் அதே மனசைத்தான் வில்லாகக் கையில் ஏந்தியிருக்கிறான்; அதே இந்திரியங்களைத்தான் கையிலே அம்புகளாகக் கொண்டிருக்கிறான்.

மன்மதன் கையிலே மனமும் இந்த்ரியங்களும் இருந்தால் அவை தடம் புரண்டு போவதற்கான வாய்ப்பு அதிகம். ஆனால், அதே மனத்தையும் அதே இந்த்ரியங்களையும் கொண்டுபோய் அம்பாளிடம் போட்டாயிற்று என்றால், அவை சரியான திசைக்குப் போகும்.

ஒரே அஸ்திரம்தான் இருவர் கைகளிலும். ஆனால், ஒரே நெருப்பை வைத்துக்கொண்டு விளக்கையும் ஏற்றலாம்; வீட்டையும் கொளுத்தலாம் அல்லவா!

ஒரே வில்லையும் ஒரே அம்பையும் வைத்துக்கொண்டு ஒருவன் அதைத் தவறாகவும் கையாளலாம்; சரியாகவும் கையாளலாம்!

### அஸ்திரங்களின் குணங்கள்

பிரம்மாஸ்திரம் என்று ஒன்று உண்டு. பிரம்மா கொடுத்த அஸ்திரம் அது. நாராயண அஸ்திரம் என்பது நாராயணன் கொடுப்பது.

பிரம்மாஸ்திரம் எப்படிக் கிடைக்கும் என்றால், ஒருத்தர் செய்கிற தவத்தை மெச்சி பிரம்மாவே அதைக் கொடுப்பார். அதே மாதிரி ஸ்ரீமன் நாராயணன், ஒருவரது தவத்தை மெச்சி அளிப்பது நாராயணாஸ்திரம்.

பசுக்களுக்கெல்லாம் அதிபதியாக இருக்கக்கூடிய பசுபதியானவர் தவத்துக்கு மெச்சி அஸ்திரத்தைத் தருகிறபோது அது பாசுபதாஸ்திரம். அர்ஜுனன் இந்தப் பாசுபதாஸ்திரத்தைப் பெற்றான். அசுவத்தாமன் நாராயணாஸ்திரத்தைப் பெற்றான். இந்திரஜித்தன் பிரம்மாஸ்திரத்தைப் பெற்றான்.

இவையெல்லாம் பெரிய பெரிய அஸ்திரங்கள். பிரம்மாஸ்திரம் சிருஷ்டி கர்த்தாவின் அஸ்திரம். அதை எய்தவுடனேயே சிருஷ்டியில் உள்ள எல்லாவற்றையும் அது அழித்துவிடும்.

நாராயண அஸ்திரம், காப்புக் கடவுளுடைய அஸ்திரம். அந்த அஸ்திரம் என்ன பண்ணுமென்றால், 'நான் காக்கும் தொழிலைச் செய்கிறேன்' என ஆயுதம்


ஸ்ரீ துர்கையம்மன்
பட்டீஸ்வரம்



ஏந்திக்கொண்டு யார் நின்றாலும் அவரைப் போய் அழித்துவிடும்!

அஸ்திரங்கள் - பிரம்மாஸ்திரமாக இருந்தாலும் சரி, பாசுபதாஸ்திரமானாலும் சரி, நாராயணாஸ்திரமானாலும் சரி, தப்பாகப் பிரயோகித்தால், பிரயோகித்தவரையே திருப்பி அடிக்கும் என்று சொல்லுவார்கள்.

இந்த அஸ்திரங்களை ஒரே ஒரு முறைதான் பிரயோகம் செய்யலாம். குருக்ஷேத்திரத்தில் அசுவத்தாமன் அவ்வாறு நாராயணாஸ்திரத்தைப் போட்டுவிட்டான். கிருஷ்ண பரமாத்மா பார்த்தார்... வேறு ஒன்றும் சொல்லவில்லை; "எல்லாரும் கையிலே இருக்கிற ஆயுதங்களைக் கீழே போடுங்கள்'' என்றார் பாண்டவர் ஸேனையினரைப் பார்த்து.

பாண்டவர்கள் பக்கத்தில் இருக்கக் கூடிய அத்தனை பேரும் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, நின்றார்கள். கிருஷ்ண பரமாத்மாவும் நின்றார்.

நாராயண அஸ்திரத்துக்கு ஒரு சிறப்பு. எதிரே இருப்பவர்கள் கையிலே ஆயுதங்களை வைத்துக்கொண்டு நின்றால்தான் அது அடிக்குமே தவிர, நிராயுதபாணியாக இருந்தால் அது அவர்களிடம் சண்டை போடாது!

அதனால் அசுவத்தாமன் அனுப்பிய அஸ்திரம் எல்லாரையும் ஒரு முறை வலம் வந்து வணங்கிவிட்டு, நேரே புறப்பட்டு வைகுண்டத்துக்குப் போய்விட்டது!

## பயன்பாட்டின் தன்மை

**ரா**ம - ராவண யுத்தம் நடக்கிறபோது எதிரணியில் இந்திரஜித்தன்; இந்தப் பக்கத்தில் இளையபெருமாள் லட்சுமணன். இந்திரஜித்துடன் போர் புரிய வேண்டியவர் இளையபெருமாள்தான். இந்திரஜித் கையிலே பிரம்மாஸ்திரத்தை எடுத்தான். யுத்த தர்மம் என்னவென்றால், எதிராளி என்ன ஆயுதத்தை எடுக்கிறானோ, அதைத்தான் நாமும் எடுக்க வேண்டும். சமமான போராக அது இருக்க வேண்டும். சம வாய்ப்பு என்பது ஆயுதங்களிடையேயும் இருக்க வேண்டும்.

இளையபெருமாள் பார்த்தார். இந்திரஜித் பிரம்மாஸ்திரத்தை எடுத்தால் நாமும் எடுக்க வேண்டுமே என்று தாமும் பிரம்மாஸ்திரத்தை எடுத்தார். பக்கத்தில் இருந்த ராமபிரான் அவர் தோளில் தட்டினார். "எடுக்காதே பிரம்மாஸ்திரத்தை - ஒரு இந்திரஜித்தனை அழிப்பதற்காக பிரும்மாஸ்திரத்தைப் பிரயோகம் பண்ணி சிருஷ்டியில் இருக்கிற எல்லாவற்றையும் அழிப்பது நியாயமில்லை. பிரம்மாஸ்திரத்தைக் கீழே போடு!" என்றார்.

''அண்ணா! மன்னித்து விடுங்கள். தவறு செய்துவிட்டேன்'' என்றார் இளையபெருமாள்.

அப்படியானால் ஒரே விஷயத்தைச் சரியாகப் பயன்படுத்துவதும் தவறாகப் பயன்படுத்துவதும் பயன்பாட்டில் இருக்கிறதே தவிர, அந்த அஸ்திரத்தின் மீதோ பொருளின் மீதோ தவறு இல்லை.

**இதைக் காட்டுவதற்குத்தான் அம்பாள் மன்மதன் கையில் உள்ள ஆயுதங்களைத் தாங்கிக்கொண்டு நிற்கிறாள்.** மன்மதன் பயன்படுத்தினால் தவறான வழியில் போகக்கூடிய ஆயுதங்கள் அம்பாள் பயன்படுத்தினால் சரியான வழியில் போகக்கூடியவை.

அழிந்து போன மன்மதனுக்கே மீண்டும் உயிர் கொடுக்கிறாள் - அம்பாள். - காம சஞ்சீவன ஔஷதி என்றால் என்ன அர்த்தம்..? கதையைப் பார்ப்போம்.

## தாக்ஷாயணி

**த**க்ஷனுக்கு மகளாக, தாக்ஷாயணியாக இருந்தவள், தனது அந்தப் பிறவியைப் போக்கிக் கொண்டு உமாதேவியாக அவதாரம் செய்தாள். தக்ஷிணாமூர்த்தியானவர், இந்த உமா தேவியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

அப்போதுதான் உலகமே நடக்கும்; உலகிலே சிருஷ்டி தொடர்ந்து நடக்கும்; உலக வியாபாரமே நடக்கும். அதற்காக தக்ஷிணாமூர்த்தி மீது மன்மதன் அம்பு எய்ய வேண்டும். அப்போது அவர் உமா தேவியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளுவார், அப்புறம் குமார சம்பவம் (முருகன் திருஅவதாரம்) நடக்கும் என்பதற்காகத்தான் தேவர்களெல்லோரும் மன்மதனைத் தூண்டிவிட்டார்கள்.

மன்மதன் புலம்பிக்கொண்டே போனான். பெருமானின் பக்கத்தில் போனதுமே நெற்றிக் கண்ணால் எரிந்து போனான். சாம்பலாகிவிட்டான்.

அதற்கப்புறம் சாம்பலிலிருந்து பண்டாஸுரன் தோன்றினாலும் மன்மதன் இல்லை அல்லவா!

எந்த தக்ஷிணாமூர்த்திக்கும் உமா தேவிக்கும் கல்யாணம் நடக்க வேண்டும் என்பதற்காக மன்மதன் எரிந்து போனானோ, அந்தக் கல்யாணம் நடந்தது! எல்லோரும் சந்தோஷமாக இருந்தார்கள். ரதி மட்டும் அழுதுகொண்டே போனாள், அம்பாளிடம்.

''அம்மா, இந்தக் கல்யாணம் நடக்க வேண்டும் என்பதற்காகத்தானே மொத்தமாக எல்லாம் ஆரம்பித்தது...? கல்யாணம் என்னவோ நடந்துவிட்டது. ஆனால் மன்மதன் இல்லையே!'' என்று அழுதாள்.

அவள் அழுதவுடனே பரமேசுவரியாக இருக்கக் கூடியவள் பார்த்தாள். பரமேசுவரனுடைய நெற்றிக் கண்ணால் எரிந்து போனவனை உயிர்ப்பித்தால் ஈசுவரன் செய்த தற்கு எதிரான செயலாக ஆகிவிடும். அதே சமயத்தில், அழுது கொண்டிருக்கும் ரதிக்கு ஆறுதலாக ஏதாவது செய்ய வேண்டும்.

இடைப்பட்ட ஒரு முடிவை எடுத்தாள். 'நெற்றிக்கண்ணால் சாம்பலானவன் அப்படியே இருக்கட்டும். ஆனால், ரதியின் கண்களுக்கு மட்டும் மன்மதன் தெரியட்டும்' என்று அருளினாள். **ஸுமன்விதாவாக** இருக்கக்கூடியவள், இடைப்பட்ட முடிவாக மன்மதனுக்கு உயிர் தந்தாள். அதனால் ரதியின் கண்களுக்கு மட்டும் அவன் தெரியலானான். இவ்வாறு மன்மதனுக்கு சஞ்சீவி மருந்தாக (**காம சஞ்சீவன ஔஷதி**) இருந்தவள் அம்பாள்.

(தொடரும்)




அதுவா... இதுவா...
என்று குழம்ப
வேண்டாம்! எல்லாமே
உங்களுக்குத்தான்!
லட்டு மாதிரி
லட்ச ரூபாய்!
த்தோ...அறிவிக்கப் போறோம்!

# கல்கி


18.3.2007 இணைப்பு








ஆஞ்சியோ பிளாஸ்ட்டி 4


ஆன்காலஜி 12





நியூக்ளியர் இமேஜிங் 16





நியூராலஜி 19



கல்கி
தரம் நிரந்தரம்


இன்னும் >>>

# நுழைவாயில்...



• டாக்டர் டி.ஜி.கோவிந்தராஜன்



சென்னையில் எத்தனை மருத்துவ மனைகள் இருந்தாலும், அத்தனையும் மக்களுக்குத் தேவையாகவே இருக்கின்றன. எல்லா வசதிகளும் ஒரே மருத்துவமனையில் இருப்பது அரிது. அப்படியே இருந்தாலும், கட்டணங்கள் அதிகமாக இருக்கும். ஒரு துறையைச் சேர்ந்த மருத்துவர் பெயரும் புகழும் பெற்ற நிபுணராக இருப்பார். இன்னொரு துறை நிபுணர் புதிதாக வந்து சேர்ந்தவராக இருப்பார். சில பரிசோதனைகளை வெளியே செய்து கொண்டு வர வேண்டியிருக்கும்.

**சென்னை பள்ளிகரணையில் இருக்கும் டாக்டர் காமாட்சி மெமோரியல் ஹாஸ்பிடலில்**, மருத்துவதுறையின் பல அம்சங்களிலும், அனுபவம் பெற்ற, திறமையான டாக்டர்கள் பணிபுரிகிறார்கள். எல்லா வகை வசதிகளும், கருவிகளும் இந்த மருத்துவமனையில் இருக்கின்றன.

வளர்ந்து வரும் சென்னை நகரின் புறநகர்ப் பகுதிகளில், எல்லா வசதிகளும் உள்ள பெரிய மருத்துவமனைகள் தேவைப்படும் சூழலில், காமாட்சி மெமோரியல் ஹாஸ்பிடல் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக உள்ளது.


எமர்ஜென்சி மற்றும் க்ரிடிகல் கேர் எனப்படும் அவசர சிகிச்சைத் துறை முதல்,



# எல்லாம் உண்டு!

நியூக்ளியர் ஸ்கேன் வரை எல்லா வகை மருத்துவ சிகிச்சைகளும் இந்த பிரம்மாண்டமான மருத்துவமனையில் பெறமுடியும்.

பெரிய கார்ப்பரேட் ஹாஸ்பிடல்களில் தரப்படும் உயர் தரமான சிகிச்சையும் கவனிப்பும் இங்கே தரப்படுகிறது. அதற்கான கட்டணங்கள் நியாயமானதாக உள்ளன. ஆனால் வசதிகள் எதையும் குறைக்கவும் இல்லை!''



என்கிறார் டாக்டர் டி.ஜி.கோவிந்தராஜன். இவர்தான் டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனையை நிறுவியவர். இதன் வளர்ச்சியிலும், சேவையிலும் நியாயமான பெருமை கொண்டவர். மருத்துவராகவும் இருந்துகொண்டு, நிர்வாக இயக்குனராகவும் பொறுப்பை ஏற்றிருப்பவர்.

கான்சர் வந்து அவதியுற்று, சிகிச்சை அளித்தும் பலனளிக்காத நிலையில், மறைந்து போன தன் மனைவி டாக்டர் காமாட்சி அவர்களின் நினைவாகவே இந்த மருத்துவமனையை உருவாக்கி இருக்கிறார். மருத்துவமனையில், உள்ளே நுழைந்ததுமே டாக்டர் காமாட்சி அவர்களின் சிலை நம்மை வரவேற்கிறது.

ஆரம்பிக்கப்பட்ட இந்த ஒரு வருட காலத்துக்குள்ளேயே, பல பிரமிக்கத்தக்க அறுவைச் சிகிச்சைகளைச் செய்து, பத்திரிகைகள் வாயிலாக அவை பொதுமக்களுக்குத் தெரிய வந்துள்ளன.

இந்தச் சாதனைகளைச் செய்த மருத்துவர்கள் யார், அவர்களின் துறைகள் பெற்றிருக்கும் தனிச் சிறப்புகள் என்னென்ன?

வாருங்கள் வாசகர்களே!
ஒரு விசிட் பண்ணிட்டு வரலாம்.

## ஆஞ்சியோ பிளாஸ்ட்டி

# இது பொன்னான நேரம்!

நாம் இப்போது இருப்பது கேத் - லேப் அறை. இயக்கத்தையும் இதயத் துடிப்பையும் எதிரே இருக்கிற கம்ப்யூட்டர் திரைகள் காண்பிக்கின்றன.

நீண்ட சதுரக் கண்ணாடி வழியே பார்த்தால் ஆபரேஷன் தியேட்டர் பளிச்சென்று தெரிகிறது. உள்ளே நோயாளிக்கு 'ஆஞ்சியோ பிளாஸ்ட்டி' நடந்து முடிந்திருக்கிறது. பேராசிரியர் டாக்டர் திருமலை, கை உறைகளைக் கழற்றிவிட்டு, தலைக்கவசத்தைக் களைந்துவிட்டு, நம்மை நோக்கி வருகிறார்.

* நோயாளிக்கு ஆஞ்சியோ பிளாஸ்ட்டி சர்ஜரி செய்யப்படுகிறது....



நோயாளி (57 வயதுக் காரர்) அடுத்த கவனிப்பு அறைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்.

"ஹார்ட் அட்டாக் வந்த ஒன்று முதல் இரண்டு மணி நேரத்தை 'கோல்டன் ஹவர்' என்கிறோம். அந்த இரண்டு மணி நேரமும் பொன்னானவை என்பதால்தான் அப்படிக் குறிப்பிடுகிறோம். அந்தச் சமயத்தில் உடனே சிகிச்சை அளிக்கப்பட்டால், இரத்தக் குழாய்கள் வழியே இருதயத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இரத்தம், தடை படாமல் செயல்பட வைக்க முடியும். அதிகபட்சம் ஆறு மணி நேரம் அல்லது குறைந்த பட்சம் மூன்று மணி நேரம் என்றெல்லாம் சொன்னாலும், முதல் இரண்டு மணி நேரத்துக்



குள் நோயாளி மருத்துவ மனையை அடைந்து விட்டால் அவரைப் பிழைக்க வைக்கிற வாய்ப்புகள் அதிகம்.

"மருந்துகள் கொடுத்து 'க்ளாட்' எனப்படும் அடைப்பைக் கரைக்கச் செய்யலாம். அடைப்பு கரைந்துபோய் (டிஸ்ஸால்வ் ஆகி), பாதிக்கப் பட்ட நோயாளி பிழைத்துக்கொண்டு விடுவார். இப்போது சமீபத்திய நவீன சிகிச்சை முறையாக, அடைப்பை 'பலூன் முறை'யில் இரத்த ஓட்டத்தை மறுபடி துவக்கி வைத்து விடுகிறோம். இதைத்தான் 'ஆஞ்சியோ பிளாஸ்ட்டி' சிகிச்சை முறை என்பார்கள்!" என்று விளக்குகிறார் டாக்டர் திருமலை.

மருத்துவமனைக்குள் வந்த அரை மணி நேரத்துக்குள் சிகிச்சைக்கான சகல ஏற்பாடுகளையும் செய்து விடுகிறார்கள்.

முன்பெல்லாம் வீட்டிலிருந்து மருத்துவமனைக்கு வந்து இரத்தக் கட்டியைக் கரைக்க ஊசியை கொடுக்கும் வரையிலான நேரத்தை 'டோர் டூ நீடில் டைம்' என்று சொல்வதுண்டு. இப்போது இரத்தக் குழாய் அடைப்பை பலூன் வைத்து கரைக்கும் முறையில் நேரம் குறுகி, மருத்துவ வசதி நவீனமாகிவிட்டது. ஆயினும் இந்த 'ஆஞ்சியோ பிளாஸ்ட்டி' சிகிச்சைக்கான கோல்டன் ஹவரும் ஓரிரு மணி நேரமாக இருப்பது மிகவும் நல்லது. வீட்டிலிருந்து மருத்துவமனைக்கு





* டாக்டர் திருமலை

# ஆஞ்சியோ பிளாஸ்ட்டி

வந்து ஆஞ்சியோபிளாஸ்ட் சிகிச்சை அளிக்கத் தொடங்கும் வரையான நேரத்தை 'டோர் டு பலூன் டைம்' என்று சொல்வதுண்டு.

இருதயத் தசைகள் எதுவும் பழுதடைந்துவிடாமல் அப்படியே பாதுகாக்க முடியும் என்று மேலும் விளக்குகிறார் பேராசிரியர் திருமலை. பிறகு எல்லோரையும் போல இயல்பான வாழ்க்கை வாழ முடியும் என்கிறார்.

"எங்களிடம் இங்கே பயிற்சி பெற்ற டெக்னிகல் டீம் (தொழில்நுட்ப வல்லுநர்கள் குழு) இருபத்து நாலு மணி நேரமும் தயாராக இருக்கிறது. ஏனென்றால் இவ்வகை மருத்துவத்தில் நேரம் வீணாவது கூடாது. கால தாமதம் என்பது காலனுக்கு வெற்றிலை-பாக்கு வைத்து அழைப்பதற்குச் சமம். அடுத்தபடியாக பயிற்சி பெற்ற குழு. இந்தக் குழுவில் டாக்டரும், டெக்னீஷியன்களும் பொறுப்பு வகிக்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் மேலாக, தேவையான வசதிகளும் கருவிகளும் இருக்கின்றன. இதைத்தான் 'இன்ஃப்ராஸ்ட்ரக்சர்' என்போம்."

"ஆஞ்சியோ பிளாஸ்ட் சிகிச்சையை, கால் வழியாகவும் கை வழியாகவும் செய்ய முடியும். கால் வழியாக (ஃபீமரல் ஆர்ட்டரி வழியாக)ச் செய்தால் நோயாளி ஒருநாள் முழுக்கப் படுத்த படுக்கையாக இருக்க வேண்டும். கையில் - ரேடியல் ஆர்ட்டரி வழியாக - குழாய் வைத்து ஆஞ்சியோ பிளாஸ்ட்டி செய்ய முடியும்.


"அன்றன்றைக்கே நோயாளியை வீட்டுக்கு அனுப்பி வைத்துவிட முடியும். மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டாம். செலவும் குறைவு!'' என்கிறார் டாக்டர் திருமலை.


ஆஞ்சியோ பிளாஸ்ட்டி செய்துகொண்ட 57 வயது நபரை நாம் பார்த்தபோது, தமக்கு எதுவுமே நடக்காதது மாதிரி உட்கார்ந்திருந்தார்.

"உள்ளே நரம்பு வழியா ஏதோ சுடு தண்ணி போற மாதிரி இருந்தது. அவ்வளவுதான். வேற ஒண்ணுமே எனக்குத் தெரியலே!" என்றார்.

**எல்லோருக்கும் பலூன் சிகிச்சை தானா?**

"சிலருக்கு மருந்து, மாத்திரைகள்.





• • •

**அமெரிக்கா போன்ற நாடுகளில், 90 சதவிகிதம் இருதய நோய் கேஸ்கள் ஆஞ்சியோ பிளாஸ்ட்டி மூலம் நோயாளியைக் குணப்படுத்தி விடுகிற நிலையில் இருக்கின்றனவாம். அங்கே 'ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ்' கொண்டு வந்து, உடனடியாகச் சிகிச்சை அளித்து வருவது அதிகமாகி வருகிறதாம்.**

• • •

சிலருக்கு பலூன். இன்னும் சிலருக்கு ஆபரேஷன் - பைபாஸ் சர்ஜரி!" என்று விளக்குகிறார் டாக்டர் திருமலை. எது செய்யலாம் என்று தீர்மானிப்பது டயக்னாஸ்ட்டிக் டெஸ்ட் எனப்படும் பரிசோதனைகள்.

சிலருக்கு இதயத் துடிப்பு ஒரே சீராக இருக்காது. ஏறுமாறாகவும், தாறுமாறாகவும் இதயம் துடிக்கும். இதை ஒழுங்குபடுத்த 'பேஸ்மேக்கர்' எனும் கருவியை நோயாளியின் உடலில் வைத்து விடுவார்கள்."

**சில சமயங்களில் ஹார்ட் அட்டாக் வந்தவரின் மார்பை 'மஸாஜ்' செய்கிறார்கள். செயற்கை சுவாசம் (ஆர்ட்டிஃபீஷியல் ரெஸ்பிரேஷன்) கொடுக்கிறார்களே?**

"அவை முதலுதவிகள்தான். அதை கார்டியோ பல்மனரி ரிசசிடேஷன் அல்லது 'சி.பி.ஆர்.' என்று சுருக்கமாகச் சொல்வார்கள்!"

"எங்கே அடைப்பு இருக்கிறது என்று பரிசோதனை செய்யும் 'ஆஞ்சியோகிராம்' முறைக்கு, சுமார் 9,000 ரூபாய் ஆகும். 'ஆஞ்சியோ பிளாஸ்ட்டி' அடைப்பு நீக்கு முறைக்கு, சுமார் 50,000 முதல் 60,000 ரூபாய் வரை ஆகும். பைபாஸ் அறுவைச் சிகிச்சைக்குக் கிட்டத்தட்ட ஒரு லட்ச ரூபாய் ஆகக் கூடும்" என்ற டாக்டர் திருமலையும், அவருக்கு உதவியாகச் செயல்படும் டெக்னீஷியன்களும் நம்மிடம் விடைபெற்றுப் புன்னகையுடன் அடுத்த நோயாளியை கவனிக்க ஆயத்தமாகின்றனர். ⊕



பேஸ்மேக்கரில் இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று 'டெம்பரரி'- தேவையான சமயத்தில் மட்டுமே வைக்கப்படுகிறது. இன்னொன்று, 'பர்மெனன்ட்' - தொடர்ந்து இருதயத் துடிப்பு குறைவாக அல்லது ஒழுங்கற்று இருக்கிற இதய நோயாளிகளுக்கு இது பொருத்தப்படுகிறது. சிலருக்கு, சில சமயங்களில் மட்டுமே இதயத்துடிப்பு மிக மெதுவாக இருக்கும். அதைச் சீராக்கவே 'டெம்பரரி' பேஸ்மேக்கர்.

# பை-பாஸ்

"எண்பத்தேழு வயதுக்காரர் ஒருவர் மார்வலி என்று இங்கே வந்தார். பரிசோதனை செய்து பார்த்ததில், அவருக்கு மூன்று இடங்களில் அடைப்பு இருப்பது தெரியவந்தது. மூன்று பைபாஸ் அறுவைச் சிகிச்சைகள் செய்து, ஒரே வாரத்தில் அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தோம். மனிதர் வெகு உற்சாகமாக இருக்கிறார். நிம்மதியாக இருக்கிறார்" என்றார் டாக்டர் பிரேமானந்த் புனோத்.

இவர் ஹார்ட் (இருதய) சர்ஜன் மட்டுமல்ல. தொராசிக் (இதயம் தவிர்த்த மார்புப் பகுதி) சர்ஜன் மற்றும் வாஸ்க்யுலர் சர்ஜனும்கூட. அதாவது இரத்தக் குழாய்கள் சம்பந்தமான அறுவைச் சிகிச்சை நிபுணர். (சுருக்கமாக 3-இன்-ஒன் டாக்டர்!)

"இருதயத்தில் துவாரம் ஏற்பட்டு விட்டால் அதை மூட வேண்டும் அல்லவா? இதைப் பெரும்பாலும் பை-பாஸ் சர்ஜரி மூலமே செய்யலாம்.

இதய வால்வுகள் பழுதடைந்திருக்கலாம். அல்லது பிறவியிலேயே துவாரம் ஏற்பட்டிருக்கலாம். இவற்றை இருதய அறுவைச் சிகிச்சை முறை மூலமே குணப்படுத்த முடியும். மார்புப் பகுதியில் ஃபிராக்சர் ஏற்பட்டால் அதற்கும் அறுவைச் சிகிச்சை செய்துதான் உடைந்துபோன மார்புக்கூடு எலும்புகளைத் தகடால் இணைக்க முடியும். (Surgery flat chest)!


"அப்படி மார்புப் பகுதி எலும்பு உடைந்து போவது சாத்தியமா என்ன?"

"விபத்தின்போது உடைந்து விடுவதில்லையா? அதைத்தான் இப்படிச் சரி செய்ய வேண்டியிருக்கிறது!"

# லப்-டப்...லப்-டப்...



• 87 வயதுக்காரருக்கு பைபாஸ் சர்ஜரி...





என்கிறார் டாக்டர் பிரேமானந்த்.

நமக்குப் புரிகிறது. மேலும் ஓர் உண்மை சம்பவத்தைச் சொல்லத் தொடர்கிறார் டாக்டர்.

"விழுப்புரத்திலிருந்து இருபது வயதுப் பெண்மணி ஒருவர் இங்கே சிகிச்சைக்கு வந்திருந்தார். அவருக்கு இதய வால்வில் இரண்டு துவாரங்கள். இதை ஆர்.எஸ்.ஓ.வி. (Ruptued Synus Of Valsalva) என்பார்கள். அது வலது வென்ட்ரிகிள் பகுதியைப் பாதித்தது. அதனால் மூச்சுத் திணறல் உண்டாயிற்று. படபடவென்று இதயத் துடிப்பு கூடியது. மொத்தத்தில் மூச்சுவிட சிரமமாக இருந்தது. ஸ்டெதஸ்கோப்பை வைத்துப் பார்த்ததில் வித்தியாசமான ஓசை கேட்டது. எக்கோ டெஸ்ட் முதலியன செய்து பார்த்தோம்.

# லப்-டப்...



இதயத்தை திறந்து, அதன் துடிப்பை நிறுத்திவிட்டு, இரண்டு துவாரங்களையும் மூடிவிட்டுத் தைத்தோம். எட்டாவது நாள் அந்தப் பெண்மணி வீடு திரும்பிவிட்டார். அதன் பிறகு, அவருக்குத் திருமணம் நிச்சயமாகி கணவராகப் போகிறவருடன் எங்களை வந்து பார்த்தார். இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருப்பதால், குழந்தை பெறும் வாய்ப்பு இருக்காதோ என்ற சந்தேகம் அவர்களுக்கு இருந்தது. ஒரு வருடத்துக்குப் பிறகு தாராளமாகத் தாயாகும் வாய்ப்பு இருக்கிறது என்று தைரியம் சொல்லி அனுப்பி வைத்தோம்."

**இதயத்தை நிறுத்திவிட்டுச் செய்யும் போது, இருதயத் துடிப்பே இருக்காதே? நோயாளி இறந்துபோய்விட மாட்டாரா?**

"மாட்டார். இதயத்தை ஹார்ட்-லங் மெஷினுடன் இணைத்து விட்டுத்தான் அறுவைச் சிகிச்சை தொடங்குவோம். அதனால் இரத்த ஓட்டம் எந்த விதத்திலும் தடைபடாது."

**இதயம் ஓடிக் கொண்டிருக்கும்போதேகூட அறுவைச் சிகிச்சை செய்ய முடியுமா? முடியாதா?**

"முடியும். இதை Beating Heart Surgery - இதயத்தை ஓடும் நிலையிலேயே வைத்திருந்து, அறுவைச் சிகிச்சை செய்வது- என்பார்கள். இதுதான் நோயாளிக்கும் நல்லது. இதை வேகமாகச் செய்து விட முடியும். நோயாளியும் ஐந்து முதல் ஏழு நாட்களுக்குள் வீட்டுக்குப் போய்விடலாம். இரத்தமும் குறைவாகவே தேவைப்படும்!"



✱ 3-இன்-ஒன் டாக்டர்

**டாக்டர், மார்புக்கூடு எலும்பு உடைந்துபோனால் தகடு வைத்து இணைப்பது பற்றிச் சொன்னீர்கள். அதுபோல இங்கே சிகிச்சைக்கு வந்தவர் யாராவது உண்டா?**

"தினக்கூலி செய்து பிழைக்கும் 55 வயதுக்காரர் ஒருவர் வந்தார். மார்புக்கூடு எலும்பு உடைந்து, மேலும் கீழுமாக, (வரிசை ஒழுங்கு எதுவுமில்லாமல்) இருந்தது. உடைந்த எலும்புகள் ஆதாரம்

ஏதுமில்லாமல், அதாவது சப்போர்ட் எதுவுமில்லாமல் இருந்தன. அவருக்கு நியூமோனியா வேறு வந்து விட்டது. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தகடு செய்து இணைத்து முதலில் flat Segment பகுதியைச் சீராக்கிவிட்டு, வென்ட்டிலேட்டர் கருவி மூலம் செயற்கை சுவாச வசதி கொடுத்தோம். எட்டாவது நாள் மருத்துவ மனையிலிருந்து வீடு திரும்பினார். ஆறு மாதங்களுக்குப் பிறகு எந்த வலியும் அவருக்குக் கிடையாது! மனிதர் பழைய மாதிரியே இருக்கிறார்!''



• பைபாஸ் சர்ஜரி...


'வருமுன் காப்போம்' என்று வாழ்வது எப்படி, டாக்டர்?

• • •

## கவனம், கவனம்!

''மூச்சுத் திணறல் அல்லது Breathing Problem தொடர்ந்து இருந்தால் கவனியுங்கள். முதல் மாடி ஏறும்போது தெரியாது. மூன்றாம் மாடி ஏறி நிற்கிறபோது திணறல் தெரியும். மார் வலி செஸ்ட் பெயின் - பஸ்ஸைப் பிடிக்க ஓடுகிறபோது அல்லது அதிக உயரம் ஏறும்போது - வந்தால் அது ஓர் எச்சரிக்கை. சிலருக்கு முதுகுவலி, பல்வலி, வயிற்றுப் பகுதியில் வலி என்று சுற்றியுள்ள பகுதியில் வலி வரும். இதை Referred Pain என்பார்கள். சிலர் அதிகமாகச் சோர்ந்து போய் இருப்பார்கள். Feeling Exhausted - நிலைமை. 'என்ன காரணம் என்றே தெரியவில்லை. ஆனால் ஒரேயடியாக அடித்துப் போட்ட மாதிரி சோர்வாக இருக்கிறது' என்பார்கள். சக்தியே இல்லாத மாதிரி ஓய்ந்து போய் விடுவார்கள். இவை எல்லாம் இருதய நோய்க்கான சில அறிகுறிகள். எச்சரிக்கை செய்யும் அறிகுறிகள்.

• • •





"நீரிழிவு (சர்க்கரை) நோயுடன் ஹைபர்டென்ஷன் (இரத்த அழுத்தம்) பிரச்னையும் சேர்ந்துகொண்டால் ஹார்ட் பிராப்ளம் வர வாய்ப்புகள் அதிகம். இவர்களை 'ஹை ரிஸ்க் குரூப்' என்று வகைப்படுத்துகிறோம். இவர்கள் மருத்துவரிடம் ரெகுலராக பரிசோதனை செய்துகொள்வது நல்லது. வந்தபின் அவஸ்தைப்படுவதைவிட, வருமுன் காப்பது நல்லதல்லவா? அதைத்தான் நாங்கள் பிரிவென்டிவ் கார்டியாலஜி அதாவது முன்தடுப்பு இதயநோய் சிகிச்சை, என்கிறோம்.

பலூன் வழியாக அடைப்பை நீக்கும் சிகிச்சை, மல்ட்டிபிள் சர்ஜரி, ஆஞ்சியோ பிளாஸ்ட்டி என்று நோயின் தன்மைக்கு ஏற்ப எடுத்துக் கொள்ள வேண்டிய சிகிச்சை முறைகள் இருக்கின்றன. எது சரியானதோ, எது தேவையோ, அதை மேற்கொண்டால் ஆயுளை நீட்டித்துக் கொள்ளும் வாய்ப்புகள் நிறையவே இருக்கின்றன. ஆனால் அலட்சியம் காரணமாக, கவனிக்காமல் இருந்தாலோ, வேலைப் பளு இருக்கிறது, பிறகு பாத்துக்கலாம், என்று கவனிக்காமல் விட்டு விட்டாலோ, அது பிறகு சிக்கலான அறுவைச் சிகிச்சைக்கு வழி வகுக்கும். கூடவே அதிகச் செலவுக்கும் வழி வகுக்கும்!" என்று யதார்த்த நோக்கில் எச்சரிக்கை செய்து தமது கடமை உணர்வையும் வெளிப்படுத்தி விடை பெறுகிறார் டாக்டர் பிரேமானந்த் புனோத்.

அடுத்ததாக ரேடியாலஜி துறையில் டாக்டர் எஸ். எழிலனைச் சந்திக்கச் செல்வோம், வாங்க! ⊕

கொஞ்சம் சிரிங்களேன்!



# ஆன்காலஜி

மெடிகல் ஆன்காலஜி மருத்துவர் டாக்டர் சுரேந்திரனுடன் ஓர் உரையாடல்:- (ஆன்காலஜி என்றால் புற்றுநோய் மருத்துவம்!)

* டாக்டர் சுரேந்திரன்

நாம்: எந்தவகைப் புற்றுநோய்களை நீங்கள் இங்கே அதிகமாகக் குணப்படுத்துகிறீர்கள், டாக்டர்?

டாக்டர் சுரேந்திரன்: தமிழ்நாட்டைப் பொருத்த அளவில், வாயின் உட்புறத்திலும், தொண்டையிலும் புற்றுநோய் பாதிக்கப்பட்ட நபர்கள் அதிகம். இதை ஆங்கிலத்தில்




'ஓரல் கேவிட்டி மற்றும் த்ரோட் கான்சர்' என்போம். இது ஆண்களைப் பொருத்தவரையிலானது. இதற்குக் காரணம் புகை பிடிப்பது, வாயைச் சுத்தமாகப் பாதுகாத்துக் கொள்ளாதது போன்றவைதான். பெண்களைப் பொருத்த அளவில் கருப்பை மற்றும் கருப்பை வாய்ப் புற்றுநோயும், மார்பகப் புற்றுநோயும் அதிகமாகக் காணப்படுபவை என்று சொல்லலாம். இது சென்னை அல்லது தமிழ்நாடு என்று இல்லாமல், மும்பை, இல்லி போன்ற இடங்களிலும் பரவலாகக் காணப்படுகிறது. ஆரம்ப கட்டத்தில் கவனிக்காமல் விட்டு விட்டுக் கடைசியில்



# அறியாமலும்!

**"மார்பகப் புற்றுநோயை சுயபரிசோதனை மூலமும் எளிதாகக் கண்டறியலாம். மேலும், துவக்க நிலையிலேயே சிகிச்சை செய்துகொண்டால் விரைவில் குணம் பெறலாம்."**

அவதிப்படுவது கூடாது. ஏனென்றால் ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து விட்டால் சிகிச்சையைத் தகுந்த முறையில் கொடுத்து, நோயாளியைக் குணப்படுத்திவிட முடியும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, பொருளாதாரத்தில் கீழ்நிலையில் உள்ளவரிடையேதான் கர்ப்பப்பைப் புற்று நோய் பாதிப்பு கூடுதலாக இருக்கிறது. அதனால் அவர்கள் தங்களுக்கு வந்திருக்கும் நோய் பற்றி அறிய தாமதம் ஆகிறது. அதைக் கண்டுபிடிக்கும் நடைமுறையிலும் தாமதம் ஏற்படுகிறது. தெரிந்த பிறகும் சிகிச்சை தொடங்கத் தாமதம் - என்று பல சிக்கல்கள் இருக்கின்றன.



நாம்: சுய பரிசோதனைகள் ஏதாவது...?


டாக்டர்: மார்பகப் புற்று நோய் குறித்தும் விழிப்புணர்ச்சி அதிகம் தேவை. சுய பரிசோதனை (ஸெல்ஃப் பிரெஸ்ட் எக்ஸாமினேஷன்) மூலம் எளிதாகக் கண்டறியலாம். கண்ணாடி முன் நின்றுகொண்டோ, அல்லது குளிக்கும்போதோ தானே பார்த்துக் கொள்ளலாம். மார்பகத்தில் கட்டி போலக் கைக்குத் தெரிந்துவிட்டால், உடனே பெண் மருத்துவர் ஒருவரை அணுகி மேற்கொண்டு பரிசோதனைகளைத் தொடரலாம். பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து திசுவை எடுத்துப் பரிசோதித்தால் கட்டி கான்சரா, சாதாரணமானதா என்று அறிந்து கொள்ளலாம். பிறகு மம்மோகிராஃபி, அல்ட்ரா சோனோகிராஃபி பரிசோதனைகள் உதவும்.

அறுவைச் சிகிச்சை, கதிர்வீச்சு முறை, கிமோதெரபி சிகிச்சை என்று மூன்று ட்ரீட்மென்ட் முறைகள் இருக்கின்றன. இதை மல்ட்டி மோடாலிடி அப்ரோச் என்பார்கள்.

நாம்: மூன்று முறைகளையும் கையான

# ஆன்காலஜி

## உங்களுக்குத் தெரியுமா...?



• கேரளத்தைச் சேர்ந்தவர்கள், கான்சருக்கான அறிகுறி தெரிந்தவுடனே மருத்துவமனைக்கு வந்து விடுகின்றனர். ஆரம்பத்திலேயே அவர்கள் சிகிச்சை பெறத் தொடங்கி விடுவதால், விரைவில் குணமாவதோடு, அதிக காலம் உயிர் வாழவும் முடிகிறதாம். காரணம் அங்கே இருக்கும் அதிகமான படிப்பறிவு.

• ஆண்களில் வாய் உட்புறம், உணவுக் குழாய் அல்லது செரிமானக் குழாய், நுரையீரல் புற்றுநோய் அதிகமாகக் காணப்பட கவையூட்டப்பட்ட பாக்கு வகைகள், புகையிலை, புகைபிடித்தல், மதுபானம் அருந்துதல் ஆகியவையே காரணம்.

• பிரெஸ்ட் கான்சர் விஷயத்தில் கிராமப்புறப் பெண்மணிகளைவிட நகர்ப்புற பெண்மணிகளுக்கு அதிகம் வரக் காரணம் கொழுப்புச் சத்து அதிகம் உள்ள உணவை உட்கொள்வதுதான். அண்மைக் கதிர்வீச்சு அல்லது பிரேக்கி தெரபி முறையில் ஒரு நன்மை இருக்கிறது. இது, பாதிக்கப்பட்ட பகுதியில் நேரடியாகத் தாக்கும். அதைச் சுற்றியுள்ள பகுதியில் அதன் பாதிப்பு குறைவாகவே இருக்கும். எனவே புற்றுநோய் பாதிக்கப்பட்ட பகுதிக்கு அருகிலுள்ள ஆரோக்கியமான பகுதிகள் அந்த அளவுக்கு அதிகமாகக் கதிர்வீச்சுத் தாக்கம் இல்லாமல் காக்கப்படுகின்றன.

• அதி நவீன தொலைக் கதிர்வீச்சுக்கான கருவி லினியர் ஆக்ஸிலரேட்டர். இதைக் கொண்டு, புற்றுநோயாளிகளுக்குச் சிகிச்சை தரும்போது, புற்றுநோயின் தன்மைக்கு ஏற்ப வீரியமான கதிர்வீச்சைத் தேர்ந்தெடுத்துச் செலுத்த முடியும்.

வேண்டியிருக்குமா?


டாக்டர்: தேவையில்லை. மூன்றில் எதைச் செய்யலாம் என்று முடிவு எடுக்க வேண்டும். ஆனால் கதிர்வீச்சும், அறுவைச் சிகிச்சையும் மேற்கொண்டால் மறுபடி அதே இடத்தில் வராது. முன்போல் இப்போது, முழு மார்பகத்தையும் அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றிவிட வேண்டிய அவசியம் இல்லை. 'ஆர்கன் ஸ்பேரிங் அப்ரோச்' என்ற முறையில், பாதிக்கப்பட்ட பகுதியை மட்டுமே அகற்றினால் போதுமானது. நவீன சிகிச்சை முறையில், நான்கு - ஐந்து நாட்கள் மருத்துவமனையில் இருந்தால் போதும். பக்க விளைவுகளும் இப்போது சுமார் 60 சதவிகிதம் குறைந்துவிட்டன. இந்த அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, மூன்று மாதம் கழித்து இரண்டு முறைகளும், ஆறு மாதம் கழித்து மூன்று முறைகளும் பரிசோதனைக்கு வந்தால் போதும்."


நாம்: புற்றுநோயாளிகளுக்குத் தரப்படும் சிகிச்சை முறைகளில் ஒரு வகை, கதிர்வீச்சு (ரேடியேஷன்) என்று கூறினீர்கள். அதைப் பற்றி...

டாக்டர் சுரேந்திரன்: கதிர்வீச்சு

## கொஞ்சம் ரிலாக்ஸ்

"இதுக்குதான் டாக்டர்
மாமியாரையும்,
மருமகளையும்
ஒரே வார்டுல
சேர்க்கவேணாம்னு
சொன்னேன்"





பெரும்பாலும் புற்றுநோய்க் கட்டிக்கு மட்டும் தரப்படுகிறது. கதிர்வீச்சு அங்கே செயல்பட்டு கான்சர் செல்களை அழித்துவிடும். இதிலும் இரண்டு வகைகள் உள்ளன. ஒன்று தொலை கதிர்வீச்சு அல்லது 'டெலி தெரபி'. இன்னொன்று அண்மைக் கதிர்வீச்சு அல்லது 'பிரேக்கி தெரபி! குறிப்பிட்ட நோயாளிக்கு எந்த வகைக் கதிர்வீச்சு ஏற்றது என்பதை, புற்றுநோயின் தன்மை, அளவு, மற்றும் எந்தப் பகுதியில் வந்திருக்கிறது என்பதைப் பொருத்தே தேர்ந்தெடுக்கப்படும். சில நோயாளிகள் விஷயத்தில் இரண்டு வகைக் கதிர்வீச்சுகளையும் அளித்துதான் குணப்படுத்த முடியும் என்ற நிலையும் உண்டு.

*நாம்: சிகிச்சைக்காகும் செலவு...?*

டாக்டர்: பிற கார்ப்பரேட் ஹாஸ்பிடல்களைவிட இங்கே குறைவாகவே இருக்கிறது. மெடிகல் இன்ஷுரன்ஸ் இருந்தால் இன்னும் நல்லது. இங்கே பயிற்சி பெற்ற, திறமையான மருத்துவர்களின் சிகிச்சை கிடைக்கும்.



## நலம் பெற்றோர்


• சசிகுமார் என்பவர் 28 வயது இளைஞர். தொண்டையில் புற்றுநோய் - அதிலும் முதிர்ந்த 3 ஆம் நிலையில் இருந்து 4 ஆம் நிலைக்குப் போகிற கட்டம். ட்ராக்கிடமி ட்யூப் எல்லாம் போட வேண்டியிருந்தது. அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யவில்லை. கதிர்வீச்சும் (ரேடியேஷன்), கீமோ-தெரபியும் கொடுத்தே குணமாகிவிட்டது.

• சுஸஸ் பெண்டி என்ற இலங்கைப் பெண்மணி அதீத வாய்ப் புற்றுநோய் வந்து அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு போனார். ஐந்து மாதங்கள் கழித்து மீண்டும் கட்டி வந்துவிட்டது என்று அங்குள்ள மருத்துவர்கள் பயமுறுத்திவிடவே, மறுபடி இங்கே வந்தார். இங்கே இரத்த அணுக்களைப் பரிசோதித்துப் பார்த்ததில், அது புற்றுநோய் தொடர்பானது அல்ல, வெறும் நீர்க்கட்டிதான் என்று உறுதியாயிற்று. அதனால் அறுவைச் சிகிச்சை மட்டும் செய்து அகற்றிவிட்டு, அங்கே மறுபடி வராதிருக்க, கொஞ்சமாகக் கதிர்வீச்சும் உபயோகிக்கப் பட்டது.



# நியூக்ளியர் இமேஜிங்

## 20 முதல்...





★ ஆல்ஃப்ரட் தீபக்

இன்னொரு ரேடியாலஜி மருத்துவர் ஆல்ஃப்ரட் தீபக். ரேடியாலஜி துறையின் இன்னொரு பிரிவே நியூக்ளியர் சார்ந்த மருத்துவம். நோயால் பாதிக்கப்பட்ட உடலின் உள் உறுப்புகளின் செயல்பாட்டையும், வடிவத்தையும் கண்டறிய நியூக்ளியர் மருத்துவப் பிரிவு உதவுகிறது. 'ரேடியோ - ஆக்டிவ்' சாதனத்தை நோயாளியின் இரத்தக் குழாய் வழியாகச் செலுத்தியோ, வாய் வழியாகக் கொடுத்தோ, பாதிப்பை அறியலாம். சாதாரண எக்ஸ்ரே மூலம் எந்த அளவு பாதிப்போ, அதே அளவு பாதிப்புதான் நோயாளிக்கு இருக்கும்.

தைராய்டு ஸ்கேன், எலும்பு (போன்) ஸ்கேன், சிறுநீரகச் செயல்பாட்டுக் குறைவு பற்றி அறிய, சிறுகுடல் - பெருங்குடல் செயல்பாட்டுப் பரிசோதனைகள், புற்றுநோய்ப் பரிசோதனைகளில் எலும்பு எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய உதவும் சோதனைகள் - என்று இதன் பயன்பாடு அசாதாரணமானது.

★★★

**அடிப்படையான சந்தேகம்! தெளிவான பதில்!**

**உள்ளே செலுத்தப்படும் நியூக்ளியர் திரவம் எப்படி வெளியேறும்? அல்லது நம் உடலிலேயே தங்கிப் போய் விடுமா?**

*அதிகபட்ச 'ரேடியோ ஆக்டிவிடி'யும் சிறுநீருடனும், மலத்துடனும் வெளியேறி விடும். மீதியிருக்கிற கொஞ்ச நஞ்ச ரேடியோ ஆக்டிவிடி காலப்போக்கில் கரைந்துபோய் மறைந்து விடும்.*

★★★

**நியூக்ளியர் மருத்துவப் பரிசோதனைகள் எது எதற்கெல்லாம் தேவைப்படுகின்றன?**

''முக்கியமாக, நோயின் தன்மையைக் கண்டறிய, நியூக்ளியர் மருத்துவப் பரிசோதனைகள் உதவுகின்றன. நியூக்ளியர் மருத்துவப் பரிசோதனையின் பரிமாணம் பல மடங்கானது. இவற்றுக்கான முன்னேற்பாடுகளோ சாதாரணமானவை. வயிற்றில் கோளாறு என்றால் பரிசோதனைக்கு முன் உணவு உண்டிருக்கக் கூடாது. சிறுநீரகச் செயல்பாட்டை அறிய வேண்டுமானால், பரிசோதனைக்கு வருமுன் நிறையத் தண்ணீர் குடித்துவிட்டு வர வேண்டும் என்பவை போல்தான் முன்னேற்பாடுகள் அமையும்.''

**பரிமாணங்கள் குறித்து பார்ப்போம்:**

- **பழுதுபட்ட உடல் உறுப்பின் செயல்பாடு எந்த அளவுக்கு இருக்கிறது என்று கண்டறிய!**



# ...45 வரை!

● ட்யூமர் (கட்டி) அல்லது இன்ஃபெக்ஷன் (நோய்த் தொற்று) எந்த அளவுக்கு உறுப்பைப் பாதித்திருக்கிறது என்று கண்டறிய!

● குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், சிறுநீரகச் செயல்பாடு; இதயத்துக்கு இரத்தம் செல்லும் போக்கு; நுரையீரலில் உண்டாகும் மூச்சுத் திணறல் மற்றும் இரத்தம் பாயும் திறன் அறிய!

● கால்பிளாடரில் அடைப்பு ஏதேனும் இருக்கிறதா என்று பார்க்க; எலும்பில் முறிவு, நோய்த் தொற்று, ஆர்த்ரைட்டிஸ் அல்லது ட்யூமர் (கட்டி) இருந்தால் அறிய!

● புற்றுநோயின் தாக்கம் எந்த அளவுக்கு இருக்கிறது என்று கண்டு கொள்ள; குடல்களில் இரத்தப் போக்கு இருக்கிறதா என்று அறிய!

● உடல் உறுப்பில் எந்த இடத்தில் இன்ஃபெக்ஷன் (நோய்த் தொற்று) இருக்கிறது என்று தெரிந்து கொள்ள; தைராய்டு சுரப்பியின் அதிகமான அல்லது குறைவான செயல்பாட்டின் திறன் அறிய.

## பரிசோதனையின்போது...

நியூக்ளியர் இமேஜிங்குக்காக எடுத்துக்கொள்ளப்படும் நேரம் குறைந்தபட்சம் 20 நிமிடங்கள்; அதிக பட்சம் 45 நிமிடங்கள்.

கம்ப்யூட்டர் வாயிலாக சோதனை முடிவுகள் கிடைக்கின்றன. 'இமேஜில்' நடைமுறையின்போது, கூடுமானவரை அப்படியே அசையாது படுத்திருக்க வேண்டும். அப்போதுதான் ஓர் உறுப்பு எப்படிச் செயல்படுகிறது என்பதைத் தொடர்ந்து கருவியால் கண்காணித்துப் பதிவு செய்ய இயலும்.


இரத்தக் குழாய் வழியே ஊசியால் செலுத்தப்படும் நியூக்ளியர் மருந்து, சற்றே அசௌகரியமாக இருக்கும். ஆனால் அது பொறுத்துக் கொள்கிற அளவுக்கே இருக்கும். சில பரிசோதனைக்கு, பிளாடரில் கத்தீட்டர் வைக்க வேண்டி வரும்போது, அசௌ கரியமாக இருக்கும். ஆடாமல் அசையாமல் சோதனை மேசையில் படுத்துக் கிடப்பதும் நோயாளிக்கு அசௌகரியமாக இருக்கலாம். ஆனால் பரிசோதனை வெற்றி பெற வேண்டுமானால், இவற்றைச் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்! ⊕



### வாட்ச் அவுட், கர்ப்பிணிகளே!

கருவுற்றிருக்கும் பெண்கள் அவசரமான தேவை அல்லது மிக மிக அத்தியாவசியமானது என்று இருந்தால் தவிர, நியூக்ளியர் இமேஜிங் பரிசோதனையை, பிரசவ காலத்துக்குப் பிறகு வைத்துக்கொள்வது நல்லது.

# ப்ரிவென்ஷன்



புகைப்பிடிப்பதை நிறுத்துவதால் ஏற்படும் மாற்றங்களை நிமிடக் கணக்கில் பட்டியலிடுகிறார் டாக்டர் சதீஷ் செல்வகுமார்



* டாக்டர் சதீஷ் செல்வகுமார்

# டிக்... டிக்... டிக்...

● நீங்கள் புகை பிடிப்பதை நிறுத்திய இருபதாவது நிமிடத்திலிருந்து உங்களுக்குள் இரத்த அழுத்தத்தினால் உண்டாகும் மாற்றத்தை உணருவீர்கள்.

● 20 நிமிடங்களுக்குப் பிறகு, உங்கள் இரத்த அழுத்தம் சாதாரண நிலையை எட்டி விடும். நாடித் துடிப்பும் சீராகி விடும். கையிலும் காலிலும் சூடு சாதாரண நிலையை அடையும்.



● எட்டு மணி நேரத்துக்குப் பிறகு இரத்தத்தில் இருக்கும் கார்பன் மோனாக்ஸைடு அளவு, இறங்கிப் போய் சாதாரண நிலை எட்டும். ஆக்ஸிஜன் அளவு இரத்தத்தில் கூடும்.

● 24 மணி நேரத்துக்குப் பிறகு, ஹார்ட் அட்டாக் வருவதற்கான வாய்ப்பு குறையும்.

● 48 மணி நேரத்துக்குப் பிறகு, மழுங்கிய நரம்பு நுனிகள் வரைத் தொடங்கி, நுகர்ச்சி உணர்வும், சுவையறியும் உணர்வும் அதிகமாகும். நடப்பது இன்னும் எளிதாகும்.

● 2 வாரத்திலிருந்து 3 மாதங்களுக்குப் பிறகு - இரத்த ஓட்டம் மேம்படும். நுரையீரலின் திறன் 30 சதவிகிதம் அதிகரிக்கும்.

● 9 மாதங்களுக்குள்: இருமல், சைனஸ் அடைப்பு, தளர்ச்சி, மூச்சு வாங்குதல் எல்லாம் அகன்றுவிடும். மூச்சுக் குழாய்ப் பாதை தெளிவடைந்து, மூச்சு விடுவதும் இழுப்பதும் இன்னும் எளிதாகி, நுரையீரலில் நோய்த் தொற்று வராமல் பாதுகாப்புக் கூடும்.

● சரி, ஒரு வருடத்துக்கு அப்புறம்? இருதய நோய் பாதிப்பு ஏற்படுவது, புகைப் பிடிப்பவரைக் காட்டிலும் சரி பாதியாகக் குறைந்து விடும்! ⊕

# நியூராலஜி



# உயிர்காக்கும் கவசம்!

"வங்கியில் அதிகாரியாகப் பணி புரியும் 52 வயதுப் பெண்மணிக்கு, ஒரு கண்ணில் பார்வை முழுதும் போய் விட்டது. இன்னொரு கண்ணிலோ பார்வை குறைந்துகொண்டே வந்தது. பரிசோதனைகள் செய்து பார்த்த போது, மூளைக்கு அடியில் இருக்கும் பிட்யுடரி சுரப்பியில் கட்டி பெரிதாக (ட்யூமர்) வந்திருப்பது தெரிந்தது. அந்தக் கட்டியின் காரணமாக பார்வை இழப்பு ஏற்பட்டது. முன்பெல்லாம் மூளைக்குக் கீழே கட்டி என்றால், மண்டையோட்டைத் திறந்து தான் அறுவைச் சிகிச்சை செய்து வந்தார்கள். ஆனால் இப்போது அப்படிச் செய்யத் தேவையில்லை. கபாலத்தைத் திறக்காமல், எண்டோஸ்கோப் - மைக்ராஸ்கோப் இரண்டையும் பயன்படுத்தி, மூக்கு வழியாகவே அந்தக் கட்டியை அறுவைச் சிகிச்சை செய்து அகற்றினோம்!" என்று சமீபத்தில் தாம் கையாண்ட நோயாளியின் சிகிச்சை பற்றி விளக்கினார் டாக்டர் கிருபாசங்கர். இவர் நியூரோ சர்ஜன்; நரம்பியல் மருத்துவ நிபுணர்.





* டாக்டர் கிருபாசங்கர்

மூளைப் பகுதியில் ட்யூமர் (கட்டி), முதுகுத் தண்டில் (ஸ்பைனல் கார்டு) கட்டி, கழுத்தில் அல்லது கீழ் முதுகுப் பகுதியில் 'டிஸ்க் புரொலாப்ஸ்' மற்றும் தலையில் ஏற்படும் விபத்துக் காயங்கள் எல்லாவற்றையும் நரம்பியல் மருத்துவரின் உதவி கொண்டே சிகிச்சை அளிக்க முடியும்.

"இப்போதெல்லாம் மூளையின் பகுதியில் அடியிலோ, ஆழத்திலோ கட்டி உருவானால் பழைய நாள் வழக்கம் போன்ற (கன்வென்ஷனல்) முறையில் அல்லாமல், 'ஸ்டீரியோடாக்டிக் சிஸ்டம்' என்ற நவீன முறையில் பயாப்ஸி செய்ய முடியும்; அறுவைச் சிகிச்சை செய்ய முடி

**எச்சரிக்கை:**

"அரசு ஆணை இருக்கிறதோ இல்லையோ, உங்கள் தலையையும், சொன்ன எச்சரிக்கை: உயிரையும் பாதுகாத்துக் கொள்ள, ஹெல்மெட் அவசியம் அணியுங்கள். அதிலும் கணினி மென்பொருள் தொழில் துறையில் பணியாற்றும் அத்தனை இளைஞர்களும் தங்கள் பணி கருதி, வெகு வேகமாக இரண்டு சக்கர வாகனங்களில் பயணம் செய்கிறார்கள். வேகத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள். சாலை விதிகளைக் கட்டாயம் பின்பற்றுங்கள்!"

# நியூராலஜி

## உண்மைச் சம்பவம்

டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனையில், சமீபத்தில், ஒரு பதினான்கு மணி நேர, சிக்கலான அறுவைச் சிகிச்சை நடந்தது.

நாற்பத்தேழு வயதான ஒரு பெண்மணியை, சுய நினைவற்ற நிலையில் மருத்துவ மனைக்குக் கொண்டு வந்தார்கள். அத்துடன் வலிப்பு வந்து கையும் காலும் இழுத்துக் கொண்டிருந்தன.

அவரை செயற்கை சுவாசக் கருவி (வென்டிலேடர்) உதவியுடன், சி.டி.ஸ்கேன் எடுத்துப் பார்த்ததில், அவருடைய மூளையில் மிகப் பெரிய கட்டி (ட்யூமர்), வந்திருப்பது தெரிந்தது. இதை 'மெனிஞ்சியோமா ஃபாக்ஸ்' என்பார்கள். எட்டு சென்டிமீட்டர் அளவுக்கு, மூளையின் வலது - இடது இரண்டு பக்கத்திலும் வந்திருந்தது.

காலை எட்டரை மணிக்குத் தொடங்கிய அறுவைச் சிகிச்சை, இரவு பத்து மணிக்கு முடிந்தது. பத்து நாட்கள் மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்ற பிறகு, வீட்டுக்குப் போனார். இப்போது 'ரெவ்யூ'வுக்காக வருகிறார்!

யும்!" என்கிறார் டாக்டர் கிருபாசங்கர்.

மூளையில் செய்யப்படும் அறுவைச் சிகிச்சை போல, முதுகுத் தண்டில் (ஸ்பைனல் கார்ட்) கட்டியை அகற்ற மைக்ரோ ஸ்பைன் சர்ஜரியும் இங்கே செய்யப்படுகிறது.


"பெங்களூரிலிருந்து வந்த ஒரு பெண்மணிக்கு முதுகெலும்பில் பிரச்னை. 'டிஸ்க் ப்ரொலாப்ஸ்'தான் காரணம். இதை அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்திய பிறகு, மூன்றாம் நாளே நோயாளி நடக்கத் தொடங்கி விட்டார். ஐந்தாம் நாள் அவரை வீட்டுக்கு அனுப்பி வைத்தோம்!"

கழுத்து மற்றும் கீழ்முதுகுப் பகுதிகளில் உண்டாகும் வலி மிகுந்த சிக்கல்களுக்கும் ஆன்டீரியர் செர்விகல் டிசக்டமி மற்றும் லும்பார் மைக்ரோ டிசக்டமி முறைகளில் இங்கே சிகிச்சை அளிக்கப்படுகிறது.

"கொழும்புவிலிருந்து வந்த நோயாளி ஒருவருக்கு 'லும்பார்' (கீழ் முதுகுப் பகுதி) பாதிக்கப்பட்டு, செயல்படாமல் போயிருந்தது. மைக்ரோஸ்கோப் உபயோகித்து, மைக்ரோ-டிசக்டமி முறையில் அவருக்கு சிகிச்சை அளித்தோம், செயல் இழந்துபோன உடலின் கீழ்ப்பகுதிகள் எல்லாமே சீர் செய்யப்பட்டன. பத்து நாட்களிலேயே அவர் தம் நாடு திரும்பிச் சென்றார்."

## நரம்பியல் பிரிவின் நவீன வசதிகள்

- லீகா எம்சி-1 எலக்ட்ரோ மாக்னடிக் மைக்ரோஸ்கோப், மைக்ரோ கருவிகள், மண்டையோட்டைத் துளையிட்டுத் திறக்க ஹைபவர் ட்ரில் என எல்லா உபகரணங்களும் இருக்கின்றன. ஸ்டேட் -ஆப் -த-ஆர்ட் மருத்துவமனைக்குத் தேவையான அத்தனை கருவிகள்தாம் இவை.



● மூளைப் பகுதியை ஆஞ்சியோகிராம் செய்து பார்க்க இங்கே வசதி இருக்கிறது. ஆறேழு நோயாளிகளை இப்படி பரிசோதனையும் செய்திருக்கிறார்கள். க்ளாட் அல்லது இரத்தம் அடைத்துக் கொண்டிருந்தால் கண்டுபிடித்து, சிறப்பு இஞ்செக்ஷன்கள் கொடுத்து குணப்படுத்த இயலும்.

● சிலருக்கு முகத்தில் சுருக்கங்கள் விழுந்து தளர்ச்சியாகத் தெரியும் அல்லவா? அதையும் போட்டுலினம் (Botulinum) இஞ்செக்ஷன் கொடுத்துச் சீராக்க முடியும். சினிமா நட்சத்திரங்கள் இதைப் பயன்படுத்துவது உண்டாம்!

● 'மூவ்மென்ட் டிஸ்ஆர்டர்' எனப்படும் நகர முடியாத நிலைக்குத் தள்ளப்படும் நோயாளிகளுக்கு இங்கே சிகிச்சை தரப்படுகிறது. குறிப்பாக ஸ்ரீலங்காவிலிருந்து இந்த பிரச்னையோடு வருகிறவர்கள் அதிகமாம். ஏழு வயதுக் குழந்தைகூட இங்கே வந்து சிகிச்சை பெற்றிருக்கிறது!

● அரசு அனுமதி பெற்று, க்ளினிகல் ட்ரயல்கள் (புதிய மருந்துகள் உபயோகித்துப் பரிசோதிக்கும் முறை) நடத்தப்படுகின்றன.

● பார்க்கின்சன் நோய், எபிலப்ஸி (வலிப்பு), உறக்கம் (ஸ்லீப் டிஸ்ஆர்டர்ஸ்) சம்பந்தமானவற்றில் பரிசோதனைகள் நடைபெற இந்தப் பிரிவு உதவுகிறது.

• நியூரோ சர்ஜரி செய்யப்பட்ட நபருடன் டாக்டர் கிருபா சங்கர் மற்றும் டீம்...



ஹ்யூமன் டச்



# தொட்டால் புன்னகை

டாக்டர் வி.சீனிவாசன் பெங்களூரிலும், கோயமுத்தூரிலும் பணி புரிந்துவிட்டு டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவ மனைக்கு வந்திருக்கும் அனுபவம் மிக்க ஆன்காலஜிஸ்ட். பல விருதுகள் பெற்றவர். ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்னில், பிராஸ்ட்ரேட் புற்றுநோய் சிகிச்சைத் துறையில் கூடுதல் பயிற்சி பெற்றுத் திரும்பியவர். இதற்கும் மேலாக, நோய் முற்றிய நிலையிலுள்ள புற்றுநோயாளிகளுக்குச் சிகிச்சை தரும் (Palliative Care) துறையில் கேரளத்தில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்.

*பேல்லியேடிவ் கேர் என்பது என்ன? அது என்ன கேரளாவில் சிறப்புப் பயிற்சி?*

- *விசாரித்தோம்:*

"சுருக்கமாகவும் சட்டுனு புரியும்படியும் சொல்லணும்னா பேல்லியேடிவ் கேர் என்பது முன்னாபாய் எம்.பி.பி.எஸ். கொள்கைதான். கோழிக்கோட்டில், டபிள்யூ ஹெச்ஓ இன்ஸ்டிட்யூட் ஆஃப் பேல்லியேடிவ் மெடிசின் இருக்கிறது. இந்தியாவில் இருக்கிற பேல்லியேடிவ் துறைகளில், 75% கேரளாவில்தான் இருக்கிறது. 'பேல்லியேடிவ் கேர்' என்பது, நோய் கடைசி நிலையில் இருக்கிற நோயாளிகளுக்கு வலியைக் குறைக்கும் வழிகளை மேற்கொள்வதும், அவர்களுடைய வாழ்க்கை நிலை - அதாவது வாழும் நிலை - உயரவும் சிகிச்சை அளிப்பதுதான். ஹ்யூமன் டச் முக்கியம். மருந்து மாத்திரைகள், இஞ்செக்ஷன்கள் எல்லாவற்றுக்கும் மேலாக மனித நலம் உயர்வாகக் கருதப்பட வேண்டும். 'டெர்மினல் பேஷன்ட்ஸ்' என்று இந்த நிலையில் இருக்கிற புற்றுநோயாளிகளைக் குறிப்பிடுவார்கள். அவர்கள் தங்கள் கடைசி நாட்களை நிம்மதியாகக் கழிக்க உதவுவதும் ஒரு மருத்துவரின் பணிதான்!"



**டாக்டர் சீனிவாசன் மேலும் விளக்குகிறார்:**

"நோயாளியின் கடைசி நிலையில் அவருக்கு நான்கு கவலைகள் எழுகின்றன. முதலாவது தான் உடலில் அனுபவிக்கும் வலி. இரண்டாவது, இறந்துபோய் விடப் போகிறோம் என்ற பயம். மூன்றாவது, பையனுக்கு வேலை இன்னும் ஆகவில்லையே,



பெண்ணுக்குத் திருமணம் ஆகவில்லையே என்ற சமூகம் சார்ந்த கவலை. நான்காவது மனச் சோர்வு. இந்த நான்கையும் நோயாளி உடலாலும், உள்ளத்தாலும் அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, அவருக்கு மருத்துவர் உதவ வேண்டும். நீ வெகு விரைவில் இறந்து விடப் போகிறாய், அதனால் உன் வீட்டுக்கோ, உன்னை யார் வைத்துக் கொள்வார்களோ அவர்கள் வீட்டுக்கோ போய்விடு' என்று கையைக் கழுவி விட முடியாது. இதற்காகவே 'ஹாஸ்பைஸ் இயக்கம்' என்று லண்டனில் செயல்பட்டு வருகிறது. இதைத் தொடங்கியவர் மேடம் சிசிலி சாண்டர்ஸ் என்பவர்."

# மலரும்!



டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனையில் நோயாளிகளின் வாழ்க்கை நிலையை மன ஆறுதல் அளித்து உயர்த்தவும், அவர்களது நலனைக் கவனித்துக் கொள்ளவும், 'கான்சர் சப்போர்ட் குரூப்' இயங்கி வருகிறது.

**உண்மைச் சம்பவம்:**

"கான்சர் முற்றிய நிலையில் இருந்த, இருபது வயதுப் பெண்மணி, தன் பெற்றோருக்கு 25 ஆம் ஆண்டு மணவிழாவின் போது பரிசு அளிக்க, தான் அது வரை இருக்க வேண்டுமே என்று விரும்பினாள். ஜூன் மாதம் தான் மணவிழா. ஆனால் அவர் மூன்று மாதங்களுக்கு மேல் உயிரோடு இருக்க மாட்டார் என்று டாக்டர்கள் கருதினார்கள். அவர் உயிர் பிரியும் போது தன் எண்ணம் ஈடேறிய திருப்தியுடன் இருக்க வேண்டும் என்பதற்காக, அவள் தகப்பனாரின் பிறந்தநாள் ஏப்ரலில் வரும்போது அந்தப் பரிசை வழங்கலாமே என்று டாக்டர்கள் யோசனை தெரிவித்தார்கள். பெண் மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டாள். தகப்பனாரின் பிறந்த நாளைக் கோலாகலமாகக் கொண்டாடி, பரிசை வழங்கினாள் பெண். பிறகு அந்த மகிழ்ச்சியே அவர் உயிர் பிரியும் வரை அவளிடம் இருந்தது!" என்று டாக்டர் சீனிவாசன் கூறிய உண்மைச் சம்பவம், இறுதி நிலை நோயாளிகளுக்கு ஆதரவும், ஆலோசனையும் எந்த அளவுக்கு மனமகிழ்ச்சி அளிக்கிறது என்று விளங்க வைத்தது.

# கவனிக்க...






# இரத்தத்தின் இரத்தங்களே!

ஒரு நவீன மருத்துவமனையில் எத்தனை துறைகள் அல்லது பிரிவுகள் இருந்தாலும், இரத்த வங்கி இல்லாவிட்டால் முழுமையாகாதே?

இரத்தத்தில் பரிசோதனைகள் தவிர, இரத்தத்தில் உள்ள தனித்தனி பிரிவுகளை பிளேட்லெட்டுகள், சிகப்பு அணுக்கள் முதலியவற்றைத் தேவையானபோது அளிக்கவும் வசதிகள் இருக்கின்றன. இரத்த வங்கியை டாக்டர் ஆர்.வி.ஜெயந்தி பொறுப்பேற்று நடத்துகிறார்.

# சுவாசமே!



இருபது வருடங்களுக்கு மேலாக இந்தத் துறையில் அனுபவம் வாய்ந்த டாக்டர் (பேராசிரியர்) வி.சுந்தர், ஆலோசக -மருத்துவராக மார்பு மற்றும் நுரையீரல் நோய்களுக்குச் சிகிச்சை அளித்து வருகிறார்.

மிகச் சிக்கலான சுவாசப் பிரச்னைகள், ஆஸ்த்துமா, நுரையீரல் காசநோய், நுரையீரலில் அலர்ஜி தாக்குதல், பணி காரணமாக நுரையீரலில் பாதிப்பு, நுரையீரலில் கட்டி போன்ற நோய்களுக்குச் சிறப்பான மருத்துவம் அளித்து வருகிறார்.

# ஐ.சி.யூ.



# அவசரம்... அவசியம்...

ஒரு மருத்துவமனையில் எத்தனை சிறப்பு மருத்துவப் பிரிவுகள் இருந்தாலும், ஐ.சி.யூ. பிரிவு சிறப்பாக இயங்கினால் மட்டுமே, மருத்துவம் நிறைவு பெறும். அந்த வகையில் காமாட்சி நினைவு மருத்துவமனையில் டாக்டர் இந்து மதி தலைமையில் ஐ.சி.யூ. குழு இயங்கி வருகிறது. தீவிர சிகிச்சையில் தேர்ச்சி பெற்ற டாக்டர் வெங்கடேஷ், டாக்டர் சுப்ரமணியன், டாக்டர் ஞான பிரகாசம், டாக்டர் சுனில், டாக்டர் செந்தில் ஆகியோர் கொண்ட இக் குழு தீவிர சிகிச்சைப் பிரிவில் மருத்துவம், அறுவை சிகிச்சை இரண்டு வசதியையும் அர்ப்பணிப்புடன் செய்கிறது.

இந்த யூனிட்டில் இருபத்திரண்டு படுக்கைகள் உள்ளன. இவற்றில் பதினான்கில் மானிட்டர் வசதிகளும் எட்டில் வென்ட்டிலேட்டர் வசதிகளும் உள்ளன. இருபத்து நான்கு மணி நேரமும் எந்தத் துறை நிபுணரும் விரைந்து வந்து சிகிச்சை அளிப்பர். எத்தகைய அவசர நிலையிலும் உதவக் கூடிய இரத்த வங்கி மற்றும் பிஸியோ தெரபிஸ்ட்கள் தீவிர சிகிச்சை பிரிவில் இருப்பது விசேஷம்.

ஒரு நோயாளிக்கு ஒரு நர்ஸ் இங்கு பணியிலிருப்பர். ஒவ்வொரு ஷிஃப்டிலும் தகுதி வாய்ந்த அனேஸ்தெடிட்கள் இருவர் பணியாற்றுவர்.

இங்கே பல்வேறு அவசரச் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இங்கே 'அட்மிட்' ஆகிற பெரும்பாலானவர்கள் தலையில் அடி பட்டும், நீளமான எலும்பு முறிவு, இருதயம் மற்றும் வயிற்றுப் பகுதிக்கு சிகிச்சை வேண்டிய அவசர மருத்துவமனைக்கு வருகின்றனர். அவர்கள் இங்கே அனுமதிக்கப்பட்டவுடன் அவசர சிகிச்சை அளித்து பிறகு நியூரோ சர்ஜன், ஆர்த்தோபெடிக் சர்ஜன்கள், மேக்ஸில்லா, ஃபேஷியல், பிளாஸ்டிக் மற்றும் பொது அறுவை சிகிச்சை நிபுணர் மூலம் சிகிச்சை அளிக்கின்றனர்.

மாரடைப்பு, ஆஸ்த்துமா, நுரையீரலில் தொந்தரவு, இரத்தக் குழாயடைப்பு, அதிக இரத்த அழுத்தம், கிட்னி இயக்கத்தில் ஏற்படும் குறைகள் ஆகிய அனைத்து அவசர நிலைகளுக்கும் டாக்டர் காமாட்சி மருத்துவமனை சிகிச்சையளித்து சோகத்துடன் வருவோரை சுகத்துடன் அனுப்புகிறது. ⊕

# பிரிவுகள்

ஒரு மருத்துவ மனைக்கு விபத்து காரணமான அதிர்ச்சி மற்றும் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு மிக

## அதிர்ச்சி மற்றும் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு

மிக அவசியம். இதை ட்ரௌமா கேர் (Trauma care) மற்றும் ஆர்த்தோபீடிக் சேவை என்று குறிப்பிடுவார்கள்.

அப்படிப்பட்ட நெருக்கடி நிலை நோயாளிகளை உடனுக்குடன் சிகிச்சை அளித்துக் காப்பதில் இந்த மருத்துவமனையின் பிரிவுக்கு டாக்டர் வி.சுகுமார் அவர்களும், டாக்டர் கே.எஸ். தீபக் குமார் அவர்களும் மருத்துவர்களாக இருந்து வருகிறார்கள்.

எமர்ஜென்சி காஷுவல்ட்டி வார்டே ஒரு மினி ஐசியு போல அவ்வளவு வசதிகளுடன் இருக்கிறது! எலும்பு முறிவுச் சிகிச்சைக்கான 'ஆர்த்தோ பீடிக்' பிரிவின் ஆபரேஷன் தியேட்டர் சகல வசதிகளும் உடையது.



மகளிர் நோய் மருத்துவத் துறையின் தலைவராக டாக்டர் டி.ஜி.சிவரஞ்சனி இருக்கிறார்.

எல்லா வசதிகளும் உள்ள பிரசவ வார்டும், அனுபவம் வாய்ந்த ஊழியர்களும் இருப்பது இவர்களுடைய சிறப்பு.

சிசு மருத்துவம் குறித்த பிரச்னைகளைக் கையாளுவதில் (நியோ நேட்டல் பிரிவு) நவீன வசதிகள் இவருக்கு உதவுகின்றன. மகளிர் மருத்துவப் பிரிவில் உள்ள கான்சர் கண்டுபிடிப்பு



## மகளிர் நோய் மருத்துவம்

மற்றும் முன் தடுப்பு கிளினிக்கில் மகளிர் தங்கள் பரிசோதனைகளைச் செய்துகொள்ள வசதிகள் இருக்கின்றன.

கூடிய விரைவில், நவீனமயமான இன்ஃபெர்ட்டிலிடி (குழந்தைப் பேறு இல்லாமை) கிளினிக் துவங்க ஏற்பாடுகள், திட்டமிடல்கள் நடந்து வருகின்றன. சமூகத்தில் எல்லா மட்டத்திலும் இருப்பவர்களுக்கும் உதவ இந்த மருத்துவப் பிரிவு உதவும்.



## சரும நோய் சிகிச்சை

பருக்களும் வடுக்களும் இன்றைய நாகரீக உலகில் ஏற்கப்படுவதில்லை! அவற்றை அறவே நீக்கி, சருமம் பளபளப்பாக இருக்கவே எல்லோரும் விரும்புகின்றனர். கறுப்புப் புள்ளிகள் குறித்து சிலர் கவலை கொள்வார்கள். அதற்கு லேசர் மருத்துவம் இங்கே இருக்கிறது!

அச்சுறுத்தும் வடுக்கள், ஏராளமான தலைமுடி அல்லது பளபள வழுக்கைத் தலை எல்லாவற்றுக்கும் நிவாரணம் இங்கே இருக்கிறது.

'விட்டிலிகோ' எனப்படும் வெள்ளைத் திட்டுக்கள் சிலருக்கு சருமத்தில் இருக்கிறதல்லவா? அதற்கும் மருத்துவம் இருக்கிறது. முகச் சுருக்கம் கூட நீக்கிவிட மருத்துவம் உண்டு இங்கே!



இப்போது பற்கள் மட்டும் சீரமைத்தால் போதாது. வாய், தாடை, முகம், கழுத்து என்று மாக்ஸிலோ ஃபேஷியல் அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது!

எனவே முகச் சீரமைப்புப் பிரிவுக்கு டாக்டர் ஆர்.மணிகண்டன் அவர்களும், பற்கள் சிகிச்சை மற்றும் சீரமைப்புக்கு டாக்டர் வி.பிரபு மற்றும் டாக்டர் லாவண்யா பிரபுவும் பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள்.

பிளவுபட்ட உதடுகளைச் சீரமைப்பதிலும், விபத்துக்குப் பிறகு உண்டாகும் முக மாறுதல்களைச் சீராக்கவும் இப்போதை மருத்துவ முறைகள் உதவுகின்றன.

பற்கள் சிகிச்சை மற்றும் சீரமைப்புக்குத் தேவையான டென்ட்டல் ஸ்கேன், சிடி ஸ்கேன்,

## பற்கள் மருத்துவப் பிரிவு



ஆர்த்தோ பனோகிராம், ரேடியோகிராஃப், லேடரல் செஃபலோ கிராம், என எல்லாமே இந்த மருத்துவ மனையில் உள்ளன.

# நியூரோ ஃபிஸியாலஜி

நியூரோ துறையின் மற்றொரு சிறப்பு மருத்துவர் டாக்டர் டி.வாசுதேவன். இவர் க்ளினிகல் நியூரோ ஃபிஸியாலஜி பிரிவையும் கவனிக்கிறார். (நியூரோ ஃபிஸியாலஜி என்றால் ஈஈஜி, டிஜிடல் மற்றும் பிற வீடியோ வகை கருவிகளைக் கொண்டு மேற் கொள்ளப்படும் பரிசோதனைகள்.)



"ஸ்ட்ரோக், தலைவலி, தசை மற்றும் நரம்புக் கோளாறுகள், பார்க்கின்சன் நோய், அசைய முடியாத நிலையில் வைத்துவிடும் நரம்புக் கோளாறுகள், எல்லாவற்றுக்கும் இந்தப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்படுகிறது!" என்று விவரிக்கும் டாக்டர் வாசுதேவன் ஓரிரண்டு கேஸ் ஸ்டடீஸ் பற்றியும் கூறுகிறார்:

''கணவன் - மனைவி இரண்டு பேரும் முதியவர்கள். கணவனுக்கு முதுகுத் தண்டில் அடிபட்டு, கழுத்துக்குக் கீழே முற்றிலும் செயல்பாடு நின்றுபோய்விட்டது. வென்ட்டிலேட்டர் கருவியோடு இணைத்து, மூன்று நான்கு வாரங்களுக்குச் செயற்கை முறை சுவாச வசதி செய்து கொடுத்தோம். மருந்துகளும் ஃபிஸியோதெரபியும் கொடுத்து அவரைக் குணப்படுத்தினோம்.''

"இன்னொரு 65 வயது நோயாளிக்கு மயஸ்தீனியா கிராவிஸ் பாதிப்பு. அவரால் இயல்பாக சுவாசிக்க முடியவில்லை. எதையும் மென்று, விழுங்க முடியவில்லை. பலஹீனமாக வேறு இருந்தார். நடக்கக்கூட முடியவில்லை. இரண்டு வாரங்கள் ஐசியு பிரிவில் அனுமதிக்கப்பட்டார். மருந்துகளும், தேவையான சிகிச்சையும் அளிக்கப்பட்ட பிறகு வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.''

தனியாக, ஸ்ட்ரோக் வந்து பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு மட்டுமே சிறப்பாகச் சிகிச்சை அளிக்க ஒரு பிரிவு ஏற்படுத்த இருப்பதாக டாக்டர் வாசுதேவன் கூறுகிறார். அதற்கென்று தனி ஐசியு, தனி ஊழியர்கள், எல்லாம் இருப்பார்களாம்.





## உறக்கம் குறைக்காதே!

"சாதாரணமாக எத்தனை மணி நேர உறக்கம் தேவை, டாக்டர்?"

"ஏழு மணி நேரம். ஆனால் சிலர் 4 அல்லது 5 மணி நேரமே வழக்கமாக உறங்குவார்கள். அவர்களுக்கு அது போதுமானதாக இருக்கும். பழகியிருக்கும். சிலர் விஷயத்தில், அதிக வேலையினாலோ, குறைந்த தூக்கத்தினாலோ, வலிப்பு வரும் சாத்தியக்கூறு இருக் கிறது. சில மாணவர்கள் தேர்வு சமயத்தில் அதிகம் கண் விழித்து, உறங்கும் நேரத்தைப் பெரிதும் குறைத்து விடும்போது, அவர்களுக்கு வலிப்பு வருவதுண்டு. எனவே கவனமாக இருத்தல் அவசியம்!

## மருந்துகளை எப்போது தவிர்க்க வேண்டும்?



• டாக்டர் டி.வாசுதேவன்

● கருவுற்றிருக்கும் பெண்மணிகள் அல்லது தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்கள் மிகவும் அவசியமானால் மட்டுமே உட்கொள்ளலாம்.

ஹெபடைடிஸ் தாக்கியருக்கும்போது, ஆன்ட்டி-பயாடிக்ஸ் அல்லது அது போன்ற வலுவான மருந்துகளைத் தவிர்த்தல் நல்லது. ஏனென்றால் ஈரல் (லிவர்) பழுதாகும் அபாயம் இருக்கிறது.

# உறங்கும் நேரம்!

வைட்டமின் அல்லது இரும்புச்சத்து தரும் மாத்திரைகளைச் சாப்பிடுவதில் தவறில்லை.

● பெனிசிலின் அல்லது ஆம்ப்பிஸிலின் மருந்துகளால் அலர்ஜி வருகின்றது என்றால், ஆயுள் முழுக்க அந்த மருந்துகளைத் தவிர்த்து விடுவது நல்லது.

● அல்சர் (புண்) அல்லது நெஞ்சு எரிச்சல் உள்ளவர்கள் உட்கொள்ளலாகாது. உதாரணமாக,

● உடலில் நீர் வற்றிய நிலையில் (டீஹைட்ரேட்) உள்ளவர்களோ, சிறுநீரகம் பழுதடைந்த நோயாளிகளோ, மருந்துகளை உட்கொள்ளும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

- ஹெச்.தஹஉருல்லா,
சீனியர் பயோ கெமிஸ்ட்,
- டாக்டர் விந்து ஸ்ரீ வத்சவா,
தலைவர் லேப் ஆபரேஷன்ஸ்

# ரேடியாலஜி

"இங்கே என்னென்ன வசதிகள் இருக்கின்றன?"

டாக்டர் எழிலன் என்ன சொல்கிறார் என்று கேட்போம்:

எக்ஸ்-ரே, அல்ட்ரா சவுண்டு பரிசோதனைக் கருவி கலர் டாப்ளர் ( எல்லா வகையானவை), ட்யூயல் ஸ்லைஸ் ஸ்பைரல் சி.டி மற்றும் காமா காமிரா வசதிகள் தற்போது உள்ளன. எக்ஸ்-ரே கருவியில் 'ப்ளெயின்' மற்றும் 'கான்ட்ராஸ்ட்' இரண்டு வகைகளும் எடுக்க முடியும்" என்றவர் எந்தெந்த சோதனைகள் எதற்கெல்லாம் உதவுகின்றன என்றும் விளக்கினார்.

**மம்மோகிராஃபி:-** மார்பகப் புற்றுநோய் பற்றி கண்டறிய உதவுகிறது.

**ஆர்த்தோ பன்ட்டோமோ கிராஃபி:-** பற்களின் சீரமைப்பு, தாக்கம், சர்ஜரி போன்றவற்றின் சிகிச்சைக்குப் பயன்படுகிறது.

**டாப்ளர் :-** முழு உடல் பாகங்களையும் பரிசோதிக்கலாம். மண்டை ஓட்டுக்குள்ளே இரத்த ஓட்டத்தைப் பார்க்க வசதியாக ட்ரான்ஸ்க்ரேனியல் டாப்ளரும் உண்டு.

**ட்யூயல் ஸ்லைஸ் ஸ்பைரல் சி.டி.:** உடலின் ஒரு பாகத்தின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தை மட்டுமின்றி, வெவ்வேறு கோணங்களில் படமெடுத்துக் காட்டுகிறது. அதாவது 3-D ரீகன்ஸ்ட்ரக்ஷன் எனப்படும் வசதி இதில் இருக்கிறது."

**டபுள் கான்ட்ராஸ்ட் ஸ்டடி:-** சில பரிசோதனைகளுக்கு பேரியத்துடன் கூடவே 'எஃப்பர்சவன்ட்' பவுடரும் சேர்த்தே உள்ளே செலுத்தப்படுகிறது. அப்போதுதான் குடலின் உள்படலத்தின் (Mucosa) வடிவம் துல்லியமாகத் தெரியும். இதன் மூலம் சின்ன ட்யூமர் முதல் மிகச் சிறிய அல்சர் வரை கண்டுபிடிக்க முடியும்.

**சி.டி. ஆஞ்சியோகிராஃபி:-** மூளை மற்றும் கழுத்து பகுதி இரத்தக் குழாய்களைப் பரிசோதித்து, நோயைக் கண்டறிய உதவுகிறது.


**சி.டி. கைடட் பயாப்ஸி:-** (சிடி துணையுடன் செய்யப்படும் பயாப்ஸி சோதனை) உடலுக்கு உள்ளே இருந்து எடுக்க வேண்டிய டிஷ்யூ (திசு) சாம்பிளை எளிதாக எடுத்துவிட முடியும். அதில் அபாயகரமான (மாலிக்னன்ட்) பாதிப்பு உள்ளதா என அறிய முடியும். எலும்பு பயாப்ஸியும் இவ்வாறு செய்ய முடியும்.

# அல்ட்ரா


**'அல்ட்ரா சவுண்ட் கைடட் இன்டர்வென்ஷனல் புரொஸீஜர்:** பயாப்ஸி பரிசோதனைகள் செய்ய முடியும். அதாவது சிறிய ஊசி மூலம் கொஞ்சமே கொஞ்சம் திசுவை எடுத்து, அதிலுள்ள 'செல்' (உயிரணு) அபாயகரமானதா, சாதாரணமானதா என்று கண்டறியலாம். பிறகு அதற்கு ஏற்ற வகையில் சிகிச்சையை மேற்கொள்ளலாம்.

புற்றுக் கதிர் வீச்சு மருத்துவத்தில் புற்றுக் கட்டியை கதிர்வீச்சுக்கு உள்ளாக்கும் முன்பு அதன் பரிமாணம், உடலில் உள்ள இடம் ஆகியவற்றைத் தெளிவாக வரையறுத்துத் திட்ட





மிடவும் சி.டி.ஸ்கேன் இங்கே பயன்படுத் தப்படுகிறது. சி.டி. ஸ்கேனரில் உள்ள லேசர் கற்றைகள் மட்டுமன்றி அதற் கெனத் பிரத்யேகமாக மூன்று லேசர் கற் றைகளைப் பயன்படுத்தி கட்டியின் முப் பரிமாணத் தோற்றத்துக்கான கதிர் வீச்சுத்




திட்டம் தயாரிக்கப்படுவது இங்கு மிகச் சிறப்பானதாகும். இதனால் கட்டியில் செலுத்தப்படும் கதிர்வீச்சின் அடர்த்தி மிகுவது மட்டுமன்றி சுற்றிலுமுள்ள உடல் திசுக்களுக்குச் செல்லும் கதிர்வீச்சின் அளவு குறைவதால் கதிர்வீச்சின் பக்க விளைவுகளும் குறைகின்றன.

'பிராகிதெரப்' எனப்படும், கட்டி யிலுள் சிறு குழாய்கள் மூலம் கதிர் வீச்சைச் செலுத்தும் முறைக்கு, சி.டி. ஸ்கேன் மூலம் முப்பரிமாணத் திட்டம் தயாரிக்கும் ஒரே இந்திய மருத்துவ மனை டாக்டர் காமாட்சி மருத்துவமனை

'கேத்லேப்' எனப்படும் தொடர் கதிர்வீச்சுச் சாதனத்தின் மூலம் உடலின் எந்த உறுப்புக்குச் செல் லும் இரத்தக் குழாய்களிலும் உள்ள அடைப்பையோ அல்லது வேறு பாதிப்புகளையோ துல்லியமாக அறியலாம். எங்களது மருத்துவ மனையில் நவீனமான கருவிகள் அமைந்திருப்பது மிகச் சிறப்பா னது.

இந் நுண்ணிய இரத்தக் குழாய் களுள் பிளாஸ்டிக் குழாய்களைச் செலுத்தி அடைப்பு நீக்கவோ (angioplasty) அல்லது 'ஸ்டென்ட்' வைக்கவோ இங்கு போதிய வசதி கள் உள்ளன. மேலும் புற்றுக் கட்டிகளுக் குச் செல்லும் இரத்தக் குழாய்களில் செயற்கையாக அடைப்பை ஏற் படுத்தவும் (Embolisation) வேதிப் பொருட்களைச் செலுத்திக் கட் டியை உயிரிழக்கச் செய்யவும் (Chemo-embolisation) கேத்லேபைப் பயன்படுத்துவது எங்களது நடை முறை. மேலும் பித்தநீர் நாளங் களிலோ, சிறுநீர்க் குழாய்களிலோ 'ஸ்டென்ட்' (Stent) வைப்பதற்கும் இக் கருவியைப் பயன்படுத்துகிறோம்.

மூளையின் அடிப்பகுதியிலுள்ள இரத் தக் குழாய்களில் ஏற்படும் அனி யூரிசம் எனப்படும் தளர்வான பகுதிகளில் காயிலிங் (coiling) செய்யவும் இங்கு வசதி யுள்ளது.

"இந்தப் பரிசோதனைகள் எல் லாம் நோயாளிக்கும் மருத்துவ நிபு ணருக்கும் இடையேயான பாலம் போன் றவை!" என்கிறார் டாக்டர் எழிலன். ⊕

# ஈ.என்.டி.



சாதாரணமாக ENT என்றால் காது - மூக்கு - தொண்டை மூன்று மட்டும்தானே? இதென்ன புதிதாகக் கழுத்தையும் சேர்த்திருக்கிறார்கள் என்று பார்க்கிறீர்களா?

டாக்டர் அஹிலாசாமி, இந்தத் துறையின் தலைவர். தலை மற்றும் கழுத்து பகுதிகளைப் பாதிக்கும் பிரச்னைகளுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவ நிபுணர். எடின்பர்கிலும், சண்டர்லாண்டிலும் சிறப்புப் பயிற்சி பெற்றவர்.



இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட எண்டோஸ்கோபிக் சைனஸ் சர்ஜரி செய்திருக்கிறார். இது பற்றி தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் சொற்பொழிவு நிகழ்த்தி இருக்கிறார்.

டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனையில் ENT பிரிவில் என்னென்ன வசதிகள் இருக்கின்றன?

## காது, மூக்கு, தொண்டை + கழுத்து

★ காது, மூக்கு, குரல்வளை வீடியோ என்டோஸ் கோபி

★ சைனஸ் சர்ஜரி - என்டோஸ்கோபிக்

★ காது, மூக்கு, தொண்டை லேசர் சர்ஜரி

★ மைக்ரோ காது சர்ஜரி

★ குரல் பிரச் னைக்கு என்டோ மைக்ரோ - லேரிஞ்சியல் சர் ஜரி

★ மூக்கு சப்பையாகவோ, அதிக நீட்டமாகவோ இருந்தால் அழகு மூக்காக ஆக்கிவிட அழகு சர்ஜரி!



★ குறட்டை விடுவதை நிறுத்த சர்ஜரி!

★ தலைசுற்றல், காது கேளாமை, கோக்ளியர் இம்ப்ளான்ட், ஹியரிங் எய்டு ஆகியவற்றுக்கு ஆலோசனை மற்றும் மருத்துவம்.

இந்தத் துறையில் டாக்டர் அஹிலாசாமியுடன் டாக்டர் ஆர்.கே.தனசேகர், கன்சல்டன்ட் மருத்துவராக காது_மூக்கு_தொண்டை சார்ந்த எல்லா வகை மருத்துவமும் அளித்து வருகிறார்.

**‘இனி எல்லாம் சுகமே...’**

**தொகுப்பு: சாருகேசி**

நன்றி: டாக்டர் காமாட்சி மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் நிர்வாகத் துறையைச் சேர்ந்த டாக்டர் சுனில் கவாஸ்கர், டாக்டர் சுபாஷினி

# கல்கி

+32

18.3.2007
இதழுடன் இணைப்பு
32 பக்கங்கள்

குடும்பத்துடன் படிக்க...







# இனி எல்லாம் சுகமே!

வழங்குவோர் :

## டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனை


டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனை
பள்ளிக்கரணை, சென்னை.
டாக்டர் காமாட்சி
நினைவு மருத்துவமனை
DR KAMAKSHI
MEMORIAL HOSPITAL



# வாழ்க நலமுடன்...

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under
PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki Issue Dated 18.3.2007

# Dr.Kamakshi Memorial Hospital

1, Radial Road, Pallikaranai, Chennai - 601 302
Tel : +91-44-22469200 (10 lines) Fax : +91-44-22463282
E-mail : infor@drkamakshimemorialhospital.org
Website : www.drkamakshimemorialhospital.org

## Cancer & Radiation, Byepass (CABG) At Affordable Rates



## SUPER SPECIALITY INSTITUTION FOR

- Blood Bank
- Cardiology
- Cardiac Surgery
- Cath Lab
- Computerized Clinical Laboratory
- Clinical Psychology & Hypnosis
- Dialysis
- Dentistry
- Diabetology
- Dermatology & Cosmetology
- Emergency & Critical Care
- EEG, EMG & Nerve Conduction Studies
- ENT & Ophthalmology
- General Medicine
- General Surgery
- Gastroenterology
- Joint Replacement Surgery
- Laparoscopy & Endoscopy
- Medical Oncology
- Maxillofacial Surgery
- Microneuro & Microspine
- Neurology
- Neuro Surgery
- Nephrology
- Nuclear Scan
- Orthopaedics
- Paediatric Surgery
- Pulmonology
- Surgery
- Paediatrics
- Psychiatry
- Poison control centre
- Radiation Oncology
- Surgical Oncology
- Spiral CT Scan
- Transcranial Doppler
- Trauma Care
- US Scan & Doppler Studies
- Urology

**10% Special Discount On Sundays for Master & Executive Health Check-up**


மில்கி வே செல் டெக்
MILKY WAY CELL TECH
C168
N93
P310
N70
W850
E50
Panel
Headphone
Blue tooth
Charger
Battery
MMC
AUTHORISED DEALER
World Space
SATELLITE RADIO
TATA Sky
Airtel
PREPAID & DATA CARDS
SALES & SERVICE
Our Special:
Softwares, Phone Backup, Ringtones, MP3,
Songs / Themes, Smart Movies, Antivirus,
Games
Easy Installment, Exchange
All Cards Accepted
Now available
Airtel
Black Berry
Milky Way Cell Tech
No.94, Habibullah Road, T.Nagar, Chennai - 17
Tel : 28342020, 28342929 Fax : 4212590
Mobile : 9840066110 - 8 E-mail : milkway.celltech@yahoo.com
"SERVICE IS OUR WAY OF LIFE"

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57*Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.





விரைவீர்!
பெறுவீர்
9.75%

| வட்டி விகிதம் |
| --- |
| மூத்தகுடிமக்களுக்கு - 9.75% p.a. |
| வருடமயமாக்கப்பட்ட வட்டி விகிதம் 10.53% |
| மற்றவர்களுக்கு - 9.25% p.a. |
| வருடமயமாக்கப்பட்ட வட்டி விகிதம் 9.96% |

குறைந்தது ரூ. 10,000/-
மற்றும் ரூ. 1,000த்தின் மடங்குகளிலும்

இத்திட்டம் மார்ச் 31, 2007 வரை மட்டுமே

**TMB 555 டெபாசிட்**

என்ற குறைந்த கால இலாபகரமான திட்டத்தை TMB அறிமுகம் செய்கிறது. 555 நாட்களில் உங்கள் டெபாசிட் தொகைக்கு கூடுதல் தொகை சேரும். இன்றே முதலீடு செய்யுங்கள் இச்சிறப்பான திட்டத்தில்.

*நிபந்தனைக்கு உட்பட்டது

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்.
Customer Oriented & Committed to Excellence
பதிவு அலுவலகம் : 57, வி.இ. ரோடு, தூத்துக்குடி-628 002 இணையதளம் www.tmb.in

Demat Services • Mutual Funds • Free ATM Card • 100% RTGS enabled • 100% networked core banking